
www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.
இதழ் 109 நவ.07 - நவ.20, 1996 விலை 7.00



## யாழ்ப்பாணம்: காணாமல் போகும் பெண்கள்



## கொழும்பு: எங்கப்பன் குதிருக்குள் இல்லை!

## அடுத்ததாய்...

என்னருந் தாய்நாடே....
முடுபனியுள்ளுறைந்து கிடைக்கிறதிந்நிலம்.

இப்பனி எங்கிருந்து வருகிறது?

அந்த அடர்ந்த மரங்களில்....,
விரிசலாய்க் கிடக்கிற புல்வெளிகளில்...,
கருமெனத் தெரிகிற பாறைகளில் இருந்தா
இக்குளிர்ப்பனி வருகிறது?
இது - உடனே நான்
அடையாளம் கண்டிருக்கக்கூடிய
என் தேசத்துப் பனியல்ல!

இப்பனி எங்கிருந்து வருகிறது?

எல்லாமிங்கு மாறிப்போகிறது...,
பழமரங்களின் வரிசைகள் ஒழுங்கற்றும்,
நீண்ட புல்வெளிகள் மிதந்து சென்றும்...
எல்லாம் வேறு வடிவம் கொள்கின்றன!

வெற்றுப் பெருநிலமே விரிசலாய் எங்கு:ம்
கண்ணில் படுகிறது.
இது - (அவர்களின் ) பசியினைப் போக்காத
பெரும் வெளி

இந்தக் கல்நிறைந்த பாதைகள்
மீண்டும் மீண்டும் அழைக்கின்றனவென்னை,
இருந்தும்,
நட்புமிகு ஆத்மாக்களும் சிலவேளைகளில்
என் துயரங்களைத் தழுவிச் சுகப்படுத்துகின்றன.

விருந்தினர் எவரும்
தன் வீடேகவேண்டுமொருநாள்.

எந்தப் பூமியை நான்
என் தாய் நாடென்பது அடுத்ததாய்.....!?

○

**மூலம்: பிலால் மம்பெட்**
**-கிரீமியதாத்தாரியக் கவிஞன்**
**ஆங்கிலத்தில்:** Ravil Bukharaev
**தமிழ் வடிவம்: எம்.கே.எம்.ஷகீப்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சரிநிகர்

இருவாரங்களுக்கொருமுறை

"சரிநிகர் சமானமாக வாழ்மிந்த நாட்டிலே" பாரதி

ஆசிரியர்குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம்.றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோசாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்,
334,காலி வீதி,
இரத்மலானை

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை - ரூபா 210/=
வெளிநாடு 30 U.$.$
(தபாற் செலவு உட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெருக்கே எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகட்கும்
ஆசிரியர்,
சரிநிகர்,
04 ஜெயரட்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு -05
தொலைபேசி: 593615
தொலைமடல்: 594229


## தவிசாளருக்கு எதிராக போர்க்கொடி!

ஆலையடி வேம்பு பிரதேசத்தில் சலவைத் தொழிலாளர் பகுதியில் அணைக்கட்டு அமைத்தல் என்ற போர்வையில் அங்கு குடியிருந்த தமிழ் மக்களை அப்புறப்படுத்தும் நோக்கோடு அண்மையில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதனை ஆட்சேபித்து ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். அதனால் இவ்வேலைகள் உடனடியாக தடுக்கப்பட்டன.

அதே வேளை அங்குள்ள பிரதேச சபைத் தலைவர் இ. நடராசா இப்படியொரு அணைக்கட்டு அமைக்கும் முயற்சி யாராலும் மேற்கொள்ளப்படவில்லை என பிரஸ்தாப செய்தியை மறுத்திருந்தார்.

இதனால் ஆத்திரமுற்று பிரதேச சபையைச் சேர்ந்த ஆளுங் கட்சி உறுப்பினர்களான வே. நல்லதம்பி (உபதவிசாளர்), எஸ்.வி. தங்கவேல், கே. சதானந்தன், பி. பியசேன, எஸ்.வி. தங்கவேல், மாரிமுத்து இராசலிங்கம், எஸ். சுரேஸ்வரன், வி.எச். வெற்றிவேல் ஆகியோர் தவிசாளருக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

- நேசன்

# கூட்டணியின் 10வது பொய்!

ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்கள் என்பார்கள். ஜனாதிபதிக்கும் தகவல் திணைக்களத்துக்கும் இப்போது அப்படி ஒரு கதி வந்துவிட்டுள்ளது. ஆம், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தனது அலுவலர்களுடன் நடாத்திய கூட்டமொன்றின் போது, பௌத்த மத புனிதத் தலங்கள் புலிகளால் தாக்கப்படும் பட்சத்தில் தான் தனிப்பட்ட முறையில் தமிழர்களைத் தாக்குவேன் என்றும், அப்படித் தாக்கப்படக் கூடியவர்களுக்கான உதாரணங்களில் ஒன்றாக மகாராஜா நிறுவனத்தை குறிப்பிட்டும் பேசியிருந்தார் என்ற செய்தி ஒன்று 'சண்டே லீடர்" பத்திரிகையில் வெளிவந்தது தெரிந்ததே. இந்தச் செய்தி தவறு என்றும் அப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை என்றும் மறுப்பதற்குப் புறப்பட்ட ஜனாதிபதியும் அவரது சகாக்களும், இப்படி ஒரு பொய்யைச் சொல்வதற்காக ஒன்றுக்குப் பின் ஒன்றாக பல பொய்களை சொல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது.

'சண்டே லீடர்" பத்திரிகையில் வெளியான இந்தச் செய்திக்குறிப்பு அப்பத்திரிகையின் அரசியல் பத்தியொன்றில் ஓரிரு வரிகளில் எந்தவித முக்கியத்துவமும் அற்ற செய்தியாகவே பிரசுரமாகியிருந்தது. எனவே இதை கணக்கெடுக்கத் தேவையில்லை என்று ஜனாதிபதி கருதியிருக்கக் கூடும், ஆனால் அந்தச் செய்திக் குறிப்பு வெறும் பத்தோடு பதினோராவது செய்தியாக அமிழ்ந்து போய் விடவில்லை. சர்வதேச செய்தி நிறுவனங்கள் **AFP, UNI** அதற்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. பி.பி.சி. வெரித்தாஸ் வானொலிகளும் அதை ஒலிபரப்பின. ஒக்டோபர் 20ம் திகதி ஞாயிறன்று வெளியான இந்தச் செய்தி தொடர்பாக செவ்வாய் காலைவரை எத்தகைய மறுப்பும் ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்படாததால் இச் செய்தி உண்மையாகவே இருக்க வேண்டும் என தாம் நம்புவதாகவும், இது மிகவும் பாரதூரமான ஒரு செய்தி என்றும் ஐ.தே.க செவ்வாயன்று அறிக்கை வெளியிட்டிருந்தது.

இது மாதிரியான விடயங்களில் உடனடியாகவே மறுப்பறிக்கை விடவோ சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவிக்கவோ தயங்காத ஜனாதிபதி செயலகம் இவ்விடயம் குறித்து ஒரு அறிக்கை வெளியிட ஆறு நாட்களை எடுத்தது. ஏற்கெனவே 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை பின் கதவால் போனார் என்று எழுதப்பட்ட விடயம் தொடர்பாக உடனடியாக, 48மணி நேரத்தில், இரகசியப் புலனாய்வு விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார். இதற்கு மட்டும் ஏன் இத்தனை நாள் எடுத்தது என்ற சந்தேகம் பரவலாக கிளப்பப்பட்டது.

சண்டே லீடர் பத்திரிகையோ, அச்செய்தி உண்மையே என்றும் ஜனாதிபதியின் மறுப்பை தாம் ஏற்கவில்லை என்றும், தாம் எழுதிய ஒவ்வொரு எழுத்தையும் தம்மால் நிரூபிக்க முடியும் என்றும் கூறியது.

இதற்கிடையில் ஜனாதிபதி தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சம்பந்தப்பட்ட, சம்பந்தப்படாதவர்களைக் கொண்டெல்லாம் தமக்கு நற்சான்றிதழ் பெறுவதற்கு பரிதாபகரமாக முயன்றுள்ளார். தான் சொன்ன சொல்லை அது ஒரு தவறுதலாக நடந்துவிட்ட விடயம் என்று மன்னிப்புக் கோர அவர் தயாராக இல்லை. "தமிழ் மக்களிடம் இந்த வார்த்தைக்காக ஜனாதிபதி மன்னிப்புக் கோர வேண்டும்" என்று குமார் பொன்னம்பலம் கடித மூலம் கேட்டிருந்தார். உண்மையில் ஜனாதிபதிக்கு தமிழர்களைத் தாக்கும் நோக்கம் இல்லை என்றால் தான் அவ்வாறு சொன்னது தவறு என்று மன்னிப்பு கோருவதன் மூலம் இந்தச் சிக்கலை தீர்த்திருக்க முடியும். அல்லது உண்மையில் அவர் அவ்வாறு சொல்லவில்லை என்றால், சண்டே லீடர் பத்திரிகை மீது ஏற்கெனவே 'சண்டே ரைம்ஸ்" பத்திரிகை மீது வழக்கு தொடர்ந்தது போல தொடர்ந்திருக்கலாம். அத்துடன் கதை முடிந்திருக்கும். ஆனால், வாய் போன போக்குக்கு கதைப்பதும் மனம் போன போக்குக்கு நடப்பதுமே தமது இயல்பாக இவ்வளவு காலமும் தம்மை வெளிப்படுத்தி வந்துள்ள ஜனாதிபதி அவர்கள் இந்த விடயத்தில் மட்டும் எப்படி வேறுவிதமாக நடந்து கொண்டிருக்க முடியும்?

ஜனாதிபதி அவர்கள் பேசியதாக கூறப்படும் இக்கூட்டத்தில், அவர் இவ்வாறு தமிழர்களை தாக்குவதாக அறிவித்த போது ஒரு தமிழ் அதிகாரியும் இருந்ததாகவும், இந்த மதிப்பு வாய்ந்த தமிழ் அதிகாரியை, இவ்வாறு சொல்லும் போது கவனித்த ஜனாதிபதி உங்களைப் போன்ற நண்பர்களை நான் குறிப்பிடவில்லை என்று தெரிவித்ததாகவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சண்டே லீடர் பத்திரிகை எச்சந்தர்ப்பத்திலும் இந்த அதிகாரி யார் என்று குறிப்பிடவே இல்லை. ஆனால் இலங்கை வங்கித் தலைவர் ராஜன் ஆசீர்வாதம் அவர்கள் ஜனாதிபதிக்கு எழுதியதாகக் கூறப்படும் கடிதம் ஒன்றில் 'அந்த ஆள் நானில்லை" என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகத்தால் எழுதப்பட்டதாகக் கூறப்பட்டதாக கூறப்படும் கடிதம் ஒன்றில் 'எமக்கு ஜனாதிபதி அப்படிக் கூறவில்லை" என்றும் கூறியுள்ளதாக தகவல் தொடர்பு திணைக்களமும் தகவல் தொடர்பு சாதனங்களும் அறிவித்தன. ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையோ அப்படி ஒரு கூட்டம் நடைபெறவே இல்லை என்று அறிவித்திருக்கும் போது, இப்படி ராஜன் ஆசீர்வாதமும் த.வி.கூவும் ஜனாதிபதிக்கு கடிதம் எழுத வேண்டி ஏற்பட்ட தேவைதான் என்ன?

உண்மையில் ஒரு புறம் ஜனாதிபதியின் மறுப்பை வெளியிட்ட அதே வேளை, அந்த 'மதிப்பிற்குரிய தமிழ் அதிகாரி" என்று சண்டே லீடர் குறிப்பிட்டது ராஜன் ஆசீர்வாதத்தைத் தான் என்று நினைத்துக் கொண்டு அவரிடமிருந்து த.வி.கூ.விடமிருந்து கடிதங்களை கேட்டு வாங்கி வெளியிட்டிருக்கிறார் ஜனாதிபதி. தனது பதிலறிக்கை மட்டுமே தன் மீது வந்துள்ள பழியைப் போக்க போதுமானதல்ல என்று அவரே கருதியதால் தான் போலும் இப்படி கடிதங்களை வாங்கிப் பிரசுரித்திருக்கிறார்.

ஜனாதிபதியை பாதுகாக்கும் அவசரத்தில் கூட்டணி ஆடியுள்ள கூத்து மிகவும் நகைப்புக்கிடமான ஒரு கூத்தாக இப்போது தெரிய வந்துள்ளது.

ஜனாதிபதிக்கு கூட்டணி செயலாளர் நாயகம் சம்பந்தனால் எழுதப்பட்டதாக சொல்லப்படும் கடிதம் ஒன்றை அவசர அவசரமாக தயாரித்து ஜனாதிபதிக்கு அனுப்பியவர் வேறு யாருமல்ல, கூட்டணி பா.உ நீலன் திருச்செல்வம் அவர்கள் தான். செயலாளர் நாயகத்திற்காக கடிதத்தை தயாரித்தது கூடப் பரவாயில்லை என்று விட்டுவிடலாம்.

ஆனால் இதற்காக இன்னொருவருக்காக கையெழுத்துப் போடும் அளவு அதிகாரத்தை அவருக்கு யார் வழங்கினார்களோ தெரியவில்லை. அதுவும் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு கையெழுத்துப் போடுவதற்கு அவர் படித்த சட்டம் எப்படி இடம் கொடுத்ததோ தெரியவில்லை. இவ்வாறு சம்பந்தனின் கையொப்பத்தை அவசர அவசரமாக போட்டு ஜனாதிபதிக்கு கூட்டணி கடிதம் எழுத வேண்டிய அவசரம் தான் என்ன? சண்டே லீடர் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட கூட்டம் நடந்தது ஜனாதிபதியின் அலுவலர்கள் மத்தியில் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி இருக்க கூட்டணிக்கு அப்படி ஒரு மறுப்பு அறிக்கையை வெளியிட வேண்டிய அவசியம் தான் என்ன?

ஜனாதிபதி கேட்டுக் கொண்டார் என்பதற்காக, பத்திரிகையில் வெளியான செய்தி யைக் கூட சரியாக கவனிக்காமல் அவசர அவசரமாக பதில் எழுதியது மட்டுமல்லாமல் வேறொருவரின் கையொப்பத்தையும் போட்டு அனுப்பி இப்போது வேண்டிக் கட்டியிருக்கிறது கூட்டணி.

இந்தக் கையெழுத்து விடயத்தை ஒரு மோசடி என்றும் இம் மோசடிக்கு தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்



என்றும் தகவல் திணைக்களத்துக்கு எழுதிய கடிதத்தில் குமார் பொன்னம்பலம் கோரியி ருக்கிறார்.

பத்திரிகைகளில் வெளியான கூட்டணியின் கடிதம் இந்த நாட்டின் ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட ஒரு கடிதம் என்பதாலும், அது ஒரு பிரதி என்று குறிப்பிடப்படாததாலும், அக் கடிதம் சம்பந்தனுக்காக அல்லது அவர் சார்பாக வேறொருவரல்ல கையெழுத்திடப்படுவதாக குறிப்பிடப்படாததாலும், இக்கடிதம் சம்பந்தராலேயே எழுதப்பட்ட ஒன்று என்று ஜனாதிபதி நம்பியிருக்கக் கூடும் என்பதாலும் இதை ஒரு மோசடிக் கடிதம் என்று தாம் சாட்டுவதாக குறிப்பிடும் குமார் பொன்னம்பலம், எனவே இது தொடர்பாக தகவல் திணைக்களம் பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்த விடயத்தை உடனடியாக விசாரிக்க பொலிசாரை அழைக்குமாறு கோருவதாகவும் அக்கடித்தில் தெரிவித்துள்ளார்.

பொன்னம்பலத்தின் இக் கடிதம் தகவல் திணைக்களத்தால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படுள்ளது.

இதன் பிறகு இக் கடித்தத்திற்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஆனால் தகவல் திணைக்களம் இது தொடர்பாக ஒரு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கையில், த.வி கூட்டணியால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையின் அடிப்படையிலேயே 25.10.96 அன்று தகவல் திணைக்களம் தனது அறிக்கையை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கை. திருகோணமலையில் இருக்கும் சம்பந்தன் அவர்களின் அனுமதியின் பேரிலேயே வெளியிடப்பட்டது. இப்போது திரு. சம்பந்தன் அவர்களது அறிக்கையின் மூலப்பிரதி கிடைத்துள்ளது என்று அறிவித்திருந்தது.

ஆனால் த.வி.கூ இவ்விவகாரம் தொடர்பாக அறிக்கை எதுவும் வெளியிடவில்லை. மாறாக ஜனாதிபதிக்கு ஒரு கடிதமே எழுதியிருந்தது. எனவே இந்த அறிக்கை இன்னொரு சமாளிப்பு விவகாரமே என்று எழுதுகிறது சண்டே லீடர்.

இந்தப் பிரச்சினை இப்போது பாராளுமன்ற சபாநாயகர் கவனத்திற்கு குமார் பொன்னம்பலத்தால் கொண்டு வரப்பட்டுள்ளது. குமார் பொன்னம்பலம் சபாநாயகருடன் விட்டுவிடவில்லை. எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கரமசிங்கவுக்கும் இதுபற்றி உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார். தனக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், இவ்விடயத்தை தான் கணக்கிலெடுத்துக் கொள்வேன் என்றும் ரணில் கூறியுள்ளார்.

உண்மையில் ஜனாதிபதிக்கு தமிழர்களை தாக்கும் நோக்கம் இருக்கவில்லை என்றால், அல்லது சண்டே லீடர் பத்திரிகைச் செய்தி பொய் என்றால் அதற்குரிய நடவடிக்கையை அவர் எடுத்திருக்க முடியும்.

ஆனால், குறுக்கு வழியில் தவறுகளை தட்டிக் கழிக்க முனையும் ஜனாதிபதி கையாண்ட வழிமுறைகள் இன்னும் இன்னும் மோசமான விளைவுகளையே அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அவருக்கு துணைக்குப் போன நீலனும் கூட்டணியும் இன்று சந்தி சிரிக்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளன. இதேவேளை, தான் தனிப்பட்ட முறையில் தாக்குவேன் எனக் குறிப்பிட்ட மகாராஜா நிறுவனமும் ஒரு கடிதம் எழுதியுள்ளது. ஜனாதிபதிக்கு அந் நிறுவனம் எழுதியுள்ள அக்கடிதம் தொடர்பாக தகவல் திணைக்களமோ அல்லது ஜனாதிபதி செயலகமோ எந்த தகவலையும் வெளியிடவில்லை. அக்கடிதத்தில் இந்நிறுவனத்தில் கடமையாற்றும் பெரும்பாலானோர் சிங்களவர்கள் என்பதனையும் தமது நிறுவனம் சாதி, மத, இன, பால் வேறுபாடுகளற்ற விதத்தில் இயங்கிவருவதாகவும் கூறியுள்ளதுடன் இதையிட்டு அரசியல்வாதிகள் பெருமை கொள்ள வேண்டாமா என்றும் கேட்கப்பட்டுள்ளது. இக்கடிதத்தினை அந்நிறுவன மனித வள அத்தியட்சகர் பத்திரண வீரசிங்க எழுதியுள்ளார். எது எவ்வாறாயினும். ஜனாதிபதி தமிழர்களை தாக்குவேன் என்பது போன்ற ஒரு வார்த்தையை சொல்லக் கூடியவர் அல்ல என்று அடித்து மறுப்பதற்கு முடியாமல் உள்ளது அவரது சமீப கால நடவடிக் கைகள்.

சில காலத்துக்குள் முழுத் தமிழர்களையும் புலிகள் என்று குற்றம் சாட்டும் பாணியில் அவர் பேசியது முதல் தொடர்ந்து யுத்தத்தினை தீவிரமாக நடாத்துவதில் அவர் அக்கறையாக இருப்பது வரை எல்லாமே இதையே காட்டுகின்றன.

எப்படியோ ஜனாதிபதி நல்லவராக இருக்க வேண்டும் எனும் தமது விருப்பத்தை உண்மையாக நம்பிக் கொண்டு இன்னமும் நிறைய எதிர்பார்ப்புக்களுடன் நிறைய தமிழர்கள் இங்கு இங்கு வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள் என்பதை அவர் மறந்து விடாவிட்டால் சரி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருமலை: சிறையுடைப்பும் கொலையும்!

திருகோணமலையில் கடந்த வாரம் திகில்நாடகமொன்று அரங்கேறி உள்ளது. கிண்ணியா மூதூர் போன்ற பிரதேசங்களில் படையினரின் பலவீனங்கள் விடுதலைப் புலிகளால் சாதகமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதுபோல, காவல் துறையின் பலவீனத்தின் பயனாக ஒரு நாடகம் 30.10.1996 நள்ளிரவு சிறைச்சாலையில் நடந்துள்ளது.

திருமலைச் சிறைச்சாலை வளாகம் இரண்டு பிரிவுகளாக உள்ளது. ஒன்று சிவில் குற்றச் சந்தேக நபர்களுக்கானது. இது சிறைச்சாலைக் காவலர்களால் பராமரிக்கப்படுகிறது. மற்றது பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதாபவர்களுக்கானது. இதனை இராணுவம் பராமரிக்கிறது. 20 பேர் இதில் வைக்கப்பட்டிருந்தனர். புதன் இரவு அங்கு இந்தியன் தொலைக்காட்சிப் படம் காண்பிக்கப்பட்டது. கைதிகளும் இராணுவத்தினருமாக அமர்ந்து படம் பார்த்துக்கொண்டிருந்தனர். நேரம் பதினொரு மணி இருக்கும். திடீரென எழுந்த நல்லரட்ணம் சசி என்ற நபர் கடமையிலிருந்த பொலிஸ்காரர் ஒருவரை மடக்கி அடித்திருக்கிறார். இதேவேளை வேலுப்பிள்ளை ஆனந்தகுமார் என்பவர் இராணுவவீரர் ஒருவரை மடக்கி அவரிடமிருந்த துப்பாக்கியை கண்ணிமைக்கும் நேரத்தில் பறித்து இரண்டு இராணுவ வீரர்களைச் சுட்டிருக்கிறார். ஒருவர் உடனடியாகக் கொல்லப்பட்டார். மற்றவர் ஆபத்தான நிலையில் அனுராதபுர மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு முதலாம் திகதி காலமானார்.

காவல் பகுதி பலமிழந்து போனதும் சிறைச்சாலையின் பின்புறச் சுவரில் ஏணியொன்று சாத்தப்பட்டது. எல்லோரும் தப்பி ஓடுங்கடா என்ற குரல்கள். தப்பி ஓடத்தைரியமற்றவர்கள் கூட விரும்பாத நிலையிலும் பயமுறுத்தி தப்ப வைக்கப்பட்டார்கள் என்று கூறுகின்றனர் பிறகு சரணடைந்தவர்கள்.

தடுப்புக்காவல் கைதிகள் இருபது பேர் தப்பியிருக்கிறார்கள். நாங்கள் போராடித் தப்பியோட முயன்றவர்களில் ஐந்து பேரைச்சுட்டுக்கொன்று விட்டோம் என்று படைத்தரப்பு கூறுகின்ற போதிலும் அது ஏற்கத்தக்கதாக இல்லை. ஏனெனில் இறந்த ஐவரில் நால்வர் நெற்றியிலே சூடுபட்டு இறந்திருக்கிறார்கள். நல்லரட்ணம் சசி என்பவர் வயிற்றிலும் சூடுபட்டிருப்பதால் அவர் சூடுபட்டு வீழ்ந்த பின்னர் நெற்றியில் சுடப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆதலால் இவர் மாத்திரமே போராடியிருக்கிறார் என நம்பப்படுகிறது. ஏனைய நால்வரும் தப்பியோடாத நிலையிலேயே அநியாயமாக அருகில் வைத்தே கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. புஷ்பராஜனின் நெஞ்சிலும் தலையிலும் வெட்டுக்காயம் காணப்பட்டதாகச் சொல்கிறார் சடலங்களைப் பார்வையிட்ட அவரது உறவினர் ஒருவர். ஏனைய சடலங்களிலும் வெட்டுக்காயங்கள் காணப்பட்டுள்ளன. இது அவர்கள் தப்பியோடும்போது கொல்லப்பட்டார்கள் என்ற படைத்தரப்பினரின் கூற்றை மறுதலிக்கிறது. உண்மையில் அவர்கள் கொல்லப்பட்டபின் கடற்கரையில் வீசப்பட்டிருக்கிறார்கள் என்கிறார் அவ் உறவினர். இதில் அச்சுதன் இராஜசேகரன் என்பவர் நவ.13ந்திகதி விடுதலையாக இருந்தார். எனவே அவர் தப்பியோட முயற்சித்திருப்பார் என நம்பமுடியாது. கொல்லப்பட்டவர்கள் புலிகள் என்று வாக்குமூலம் தந்தால்தான் சடலங்களை உறவினர்களிடம் தரமுடியுமெனப் படையினர் கூறியிருக்கிறார்கள். இதனால் உறவினர்கள் எவரும் சடலங்களைப் பொறுப்பேற்கவில்லை.

செய்தி எழுதும் வரை கொல்லப்பட்டவர்களில் நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

1. நல்லரட்ணம் சசி.
2. தியாகராஜா நாகரட்ணம் (அண்ணாச்சி) அலஸ்தோட்டம்
3. அச்சுதன் இராஜசேகரன்
4. சண்முகம் புஷ்பாகரன் (24) இவரது தலையில் வெட்டுக்காயம், நெஞ்சு பிளந்திருக்கிறது.
5. கிருஷ்ணபிள்ளை யோகராஜா.

வியாழனன்று காலையில் சிறைச்சாலைக்குப் பக்கத்தில் உள்ள பெரிய மாதா கோயில் குருவிடம் மோகனதாஸ் ரஞ்சித்குமார் காளியப்பு அமிர்தலிங்கம் ஆகிய இருவர் சரணடைந்தனர். இவர்கள் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை சிறைச்சாலைக்கு முன்புறமாகவுள்ள பழைய பொலிஸ் என அழைக்கப்படும் காவலரணில் சிங்கராஜா, சிவராஜா, நாராயணசாமி கிருஷ்ணராஜா, தங்கராஜா, சந்திரசேகரன், தர்மலிங்கம் புரட்சிதாஸன் ஆகிய நால்வர் சரணடைந்துள்ளனர்.

சற்று நேரத்தில் காலை பத்தரை மணியளவில் முற்றவெளிக்கருகிலுள்ள பற்றைக்குள் இருந்து சித்திரவேலவன், சித்திரவேல் உருத்திரகுமார், கந்தையா சண்முகராசா, காளிக்குட்டி ரவி, ராயப்பு றொனி ஆகிய ஐவர் கைது செய்யப்பட்டனர்.

மொத்தத்தில் இந்த சோக நாடகத்தில் ஐந்து கைதிகளினதும் இரு இராணுவத்தினதும் உயிரிழப்புகளுக்கு மத்தியில் தப்பியவர் ஆக நான்கே நான்கு பேர் தாம்.

திருகோணமலைச் சிறைச்சாலையில் இருந்து கடந்த புதன் இரவு தமிழ்க் கைதிகள் தப்பியோடிய சம்பவத்தின் போது தப்பியோடாமல் அங்கு இருந்த தமிழ்க் கைதிகள் திருகோணமலை கடற்கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டதாக இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலமும் ஜனாதிபதியிடம் முறையிட்டிருக்கின்றார்.

இது குறித்து உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

**- விவேகி**




# பத்திரிகைச் சுதந்திரமும் மு.காங்கிரசும்!

24.10.1996 வியாழக்கிழமை. ஆம். அன்றுதான் சம்மாந்துறையில் பத்திரிகை எரிந்த நாள். அரசியல் அடாவடித்தனத்தின் உச்சக்கட்டநாள். முஸ்லிம் காங்கிரஸ் வரலாற்றில் கரைபடிந்த நாள். உண்மைக்கு சாவுமணி அடிக்கப்பட்ட நாள்.

அன்று அம்பாறையிலிருந்து பத்திரிகைகளை ஏற்றிவந்த வான் சம்மாந்துறையில் காடையர் குழுவொன்றினால், மறிக்கப்படுகிறது. அத்தனையும் இறக்கப்படுகிறது. சில எரிக்கப்படுகின்றன.

வான் உரிமையாளர் (பத்திரிகை ஏஜென்சிக்காரர் ஏ.ஏ.ஹமீத்) நேராகச் சென்று சம்மாந்துறை பொலிஸில் முறைப்பாடு போடுகிறார். இல CIB 2 179/205; இதுவே முறைப்பாட்டிலக்கம். இது பின்னர் மாற்றப்பட்டதாக தகவல். சம்பந்தப்பட்ட வாகனம் மறுநாள் வீதியில் சாதாரணமாகச் செல்கிறது. பொலிசாரின் நேர்மைதான் என்னே!

இதை ஏன் முஸ்லிம் காங்கிரசுடன் தொடர்புபடுத்துகிறார்கள்?

''23.10.1996 திகதிய வீரகேசரியில் மு.கா. தலைமைத்துவத்திற்கு எதிரான அப்பட்டமான பழியை அது சுமத்தியுள்ளது. அதனால் ஆத்திரங் கொண்ட ஆதரவாளர்கள் எரித்துள்ளார்கள்.''

*-செய்தி: பி.ச. உறுப்பினர் (மு.கா).*

''ஜனாதிபதி - அஷ்ரஃப் விவகாரத்தை திரிபுபடுத்தி உண்மையை மறைத்து முழுப்பழியையும் அஷ்ரஃப் மீது போட்டு அவரை நன்றி மறந்தவர் என்று காட்டுவதே அதன் நோக்கம்''

*செய்தி நவமணி 26.10.1996 பக்.2*

மறுநாள் கல்முனைப்பகுதியில் வீரகேசரிக்கு எதிரான சுவரொட்டிகள்:

(உ+ம்) எமது தலைவரை சாடாதே!''

''சம்மாந்துறையிலும் நிந்தவூரிலும் வெள்ளி நண்பகல் தொழுகைக்கு பின்னர் பத்திரிகை எரிப்புச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன''

*-செய்தி; வீரகேசரி: 27.10.1996*

''நிந்தவூர் பள்ளிவாசல் ஜும்மா தொழுகைக்கு பின்னர் சில மு.கா. ஆதரவாளர்களே வீரகேசரியை எரித்தனர்''

*- உபதவிசாளர் உமறுகத்தா*

''எரிப்பு சம்பவத்திற்கு பாவிக்கப்பட்ட 32-4800 இலக்கமுடைய வாகனம் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் அம்பாறை மாவட்ட இணைப்பதிகாரியொருவருடையது.

*-உறுப்பினர் கலீல்*

பத்திரிகை எரிப்பிலீடுபட்ட ஸ்ரீ.ல.மு.காங்கிஸின் அடாவடித்தனத்தை கண்டிக்கிறோம். கல்முனை நகரமண்டபத்தை பூட்டி காட்டுத்தார்பார் நடத்திய அவர்களே ஜனநாயகத்திற்கு சாவுமணி அடிக்க வந்துள்ளனர்.''

*- அம்பாறை மாவட்ட ஐ.தே.க உயர்பீட குழு கண்டனத் தீர்மானம் 20.10.1996 அம்பாறை.*

இவற்றைத் தவிர அங்கு நின்றவர்களின் பெயர் விபரங்கள் கூட ஐ.தே.க. தலைமைப்பீடத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கின்றன. அனைவரும் மு.கா. ஆதரவாளர்களும் உறுப்பினர்களும் ஆவர்.

நிந்தவூர் பிரதேச சபையில் (22.10.1996) கண்டனத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

*வீரகேசரி 23.10.1996*

பத்திரிகையாளனாக இருந்து அமைச்சரான ஒருவரின் கட்சியே இப்படிப்பட்ட வேலையை செய்திருப்பதை என்னவென்று சொல்வது?

**- நேசன்**

# தொண்டர் ஆசிரியர் உண்ணாவிரதம்:
# அமைதிக் குலைப்பு என்கிறது அரசு!

தொண்டர் ஆசிரியர்களால் சுமார் 10 தினங்களாக இசுருபாய கட்டிடத்துக்கு முன் மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதப்போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுக்கவே சாகும் வரை உண்ணாவிரதப்போராட்டம் திட்டமிடப்பட்டதாக அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தலைவர் யல்வெல பஞ்ஞசேகர தேரர் தெரிவித்தார்.

சுமார் நான்கு வருட காலம் பயிற்சிகளை பூர்த்தி செய்திருந்தும் இத்தொண்டர் ஆசிரியர்களுக்கு இன்னும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் சுமார் 12,000 தொண்டர் ஆசிரியர்கள் 4 ஆண்டுகளாக சேவையாற்றிவருகின்றனர். இவர்களுக்கான வேதனமாக ரூபா 1900 மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது.

12,000 தொண்டர் ஆசிரியர்களை நிரந்த நியமனம் கொண்டவர்களாக மாற்றுவதற்கான பேச்சுவார்த்தை கடந்த 21ம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையின் போது ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சுனிலா மெண்டிஸ் அவர்கள் மற்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் உபசேன சேனநாயக்கா, அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தையும் தொண்டர் ஆசிரியர் கமிட்டியையும் சேர்ந்த 10 பேர் ஆகியோர் கலந்து கொண்டனர். ஒன்றரை மணித்தியாலங்களுக்கு நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் தமது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாததன் காரணமாகவே உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டதாக அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தலைவர் தெரிவித்தார்.

அத்தோடு ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பாக 30.05.1991ல் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் தொண்டர் அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படுவதனையும், பிற தொண்டர் ஆசிரியர்களது சம்பளத்தை ரூ.3000மாக அதிகரிப்பதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டதாகவும், எனினும் அது தொடர்பாக எழுத்து மூல அறிக்கைகள் இன்னும் தரப்படவில்லை என்றும் தேரர் குறிப்பிட்டார். இதன்படி கடந்த 23ம் திகதி உண்ணாவிரதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஐவர் தொடர சுமார் 500 ஆசிரியர்கள் இதில் பங்கு கொண்டனர்.

ஏற்கெனவே இலங்கையின் கல்வித்திட்டத்தில் இருக்கும் கருத்து முரண்பாடுகள் சர்ச்சைகள் என்பவற்றுடன் பட்டதாரி ஆசிரியர்கள் தொடக்கம் தொண்டர் ஆசிரியர்கள் வரை தமது கோரிக்கைகளுக்காக போராடி வருகின்றனர். தினசரி பத்திரிகைகள், அத்துடன் வாராந்தரப் பத்திரிகைகளில் இவற்றை அவதானிப்பின் ஓர் உண்மையை புரிந்து கொள்ளலாம். அதாவது தமது பிரச்சினைகளையும், ஒழுங்கான ஓர் வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ள பட்டதாரி என்ற நாமத்தில் தாம் அனுபவிக்கும் பிரச்சினைகளையும் பட்டம் பெற்றவர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள் என்போர் தமது ஆதங்கத்தை பத்திரிகைகள் வாயிலாக வெளிப்படுத்தியிருப்பர். அண்மையில் நடந்த ஒரு நாள் ஆசிரியர் வேலை நிறுத்தப் போராட்டத்தை நாம் இது தொடர்பாக கவனத்தில் எடுக்கலாம். வைத்தியர்கள் முதல் ஆசிரியர்கள் வரை வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த வகையில் இவ் உண்ணாவிரதப்போராட்டம் கோரிக்கைகளை வென்றெடுத்ததா என்பதை எதிர்வரும் காலங்களில் அவதானிக்கலாம்.

கல்வி அமைச்சும், அதிகாரிகளும் தற்காலிக தீர்வினை பெற்றுக்கொடுப்பதிலேயே அக்கறை கொண்டுள்ளனர். நிரந்தரத் தீர்வினை அவர்களால் வழங்க முடியாதுள்ளது.

இதன் அடிப்படையில் 7 நாட்கள் தொடர்ந்த உண்ணாவிரதப்போராட்டம் தொழில் அமைச்சர் மகிந்த ராஜபக்ச அவர்களினதும், வாசுதேவ நாணயக்கார (பா.உ) அவர்களினதும் தலையீட்டின் பேரில் இளநீர் வழங்குவதுடன் நிறைவு பெற்றது. தொண்டர் ஆசிரியர்களது கோரிக்கைகள் தொடர்பாக தாம் கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக கூறியதன் பேரிலேயே போராட்டம் கைவிடப்பட்டது என அகில இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் தெரிவித்திருந்தார்.

தொழில் அமைச்சின் மேல் இருக்கும் நம்பிக்கை இந்த 7 நாள் சாகும் வரை உண்ணாவிரதப்போராட்டத்தை முடித்து வைத்துள்ளது. தமது கோரிக்கைகள் வெற்றிபெறாவிடின் இசுருபாய கட்டிடத்துக்கு முன்னால் தாம் தீ மூட்டிக்கொள்வதாக ஓர் தொண்டர் ஆசிரியர் தெரிவித்திருந்தார். இதற்கான பொறுப்பு அமைச்சர் மகிந்த ராஜபக்ச அவர்களையும், வாசுதேவ நாணயக்காரவையும் சாரும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இதன்பிரகாரம் தொண்டர் ஆசிரியர்களின் விபரங்கள் பத்திரிகைகள் வாயிலாக கோரப்பட்டுள்ளன. தொண்டர் ஆசிரியர்களின் கோரிக்கைகள் இவ்வாறு சிறிது சிறிதான திட்டமிடலின் கீழ் தீர்க்கப்படும் எனத் தெரியவருகிறது.

போராட்டங்கள் சமூகத்தையும், மனித வாழ்க்கையையும் மாற்றியமைக்க உதவுகின்றன என்பது கார்ல் மாக்ஸின் கூற்றாகும். அந்த வகையில் தொண்டர் ஆசிரியர்களால் திடுதிப்பென மிகவும் எதிர்பார்ப்புடன் ஆரம்பமாகிய போராட்டம் ''உடனடியாக'' கோரிக்கைகளை வென்றெடுக்க வழி சமைத்திருப்பின் ஆசிரியர் பிரச்சினைகளில் ஒரு நிரந்தரத் தீர்வினை எதிர்பார்த்திருக்கலாம்.

அதேவேளை உண்ணாவிரதப் போராட்டம் நிகழ்ந்த இந்த 7 நாட்களிலும் சுவாரசியமான சம்பவங்கள் இடம் பெற்றன. உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று இசுருபாய கட்டிடத்துக்கு முன் நடக்கவிருப்பது அறிந்தும் அங்கு ஒரு வீதித்தடை சோதனை முகாம் ஒன்று போடப்பட்டுள்ளது. இது போராட்டத்தை மறைமுகமாக தடுக்கும் ஒரு நடவடிக்கை எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன் போராட்டத்தை அமைதியைக் குலைக்கும் நடவடிக்கை என எண்ணி பொலிசார் பாதுகாப்பை பலப்படுத்தி வருகின்றனர் என போராட்டத்தில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு தொலைபேசி செய்திகள் வந்துள்ளன.

அத்துடன் ஜனநாயக நாடான இலங்கையில் இப்போராட்டம் சட்டவிரோதமானது என, அமைச்சரவை தீர்மானம் எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. அவர்கள் போராட்டத்தை கைவிடும்வரை அப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை மேற்கொள்ளக்கூடாதென அமைச்சரவை ஏகமனதாகத் தீர்மானம் எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த 23ம் திகதி ஆரம்பமாகிய தொண்டர் ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போராட்டம் தற்காலிகத் தலையீடுகள் தற்காலிகத்தீர்மானங்கள் அடிப்படையில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் வெற்றி தோல்விகளை எதிர்காலம் கட்டியம் கூறும்.

**ரட்ணா**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## யாழ்ப்பாணம்:

# காணாமல் போகும் பெண்கள்!


ஆயுதப் படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின் ஆண்களும், பெண்களும் காணாமற் போகும் பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. குறிப்பாக அழகான மாணவிகளும், ஆசிரியைகளும் பாடசாலைக்குச் செல்லும் போதும், வீட்டுக்கு வரும் போதும் தினசரி இராணுவச் சோதனை நிலையங்களில் பல்வேறு தகாத செயல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவர்களே பாதுகாப்புப் படையினரின் மிருகத்தனமான நடத்தைகட்குப் பிரதான இலக்காவர். கைதடியைச் சேர்ந்த மாணவியான கிருஷாந்தி குமாரசாமியின் சம்பவத்துக்குப் புறம்பாக மேலும் ஒரு சில சம்பவங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. இத் தகவல்கள் மிகுந்த நம்பகத் தன்மை வாய்ந்த வட்டாரங்களிலிருந்து சேகரிக்கப்பட்டவையாகும்.

01: யாழ்ப்பாணத்திலுள்ள குறிப்பிட்ட சோதனை நிலையமொன்றில் பிரபலமான-தொரு பாடசாலையில் கல்வி கற்கும் அழகான பெண் பிள்ளையொருவரிடம், வெளிப்படையாகவே இராணுவத்தினன் ஒருவன் தன்னைத் திருமணம் செய்யுமாறு கேட்டுள்ளான். அவர் சம்மதிக்க மறுத்துள்ளார்.

மறுநாள் அவர், ஒரு புலி என்ற வழமையான குற்றச்சாட்டுடன் கைது செய்யப்பட்டார். அவர் யாழ்ப்பாணத்தில் வைத்திருக்கப்பட்டுப் பின்பு கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது. அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா எனத் தெரியவில்லை. அவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்ப ட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதே அங்குள்ள அபிப்பிராயமாகும்.

2. அரியாலையில் இராணுவச் சோதனை நிலையங்களினூடாகத் தினசரி பாடசாலைக்கும், திரும்ப தனது வீட்டுக்கும் சென்று வரும் பாடசாலை ஆசிரியை ஒருவர் இருந்தார். அவர் இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டார். இதுவரை அவர் எங்கு வைக்கப்பட்டுள்ளார் என்பது தெரியவில்லை.

03. யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவியொருவர் இராணுவச் சிப்பாய் ஒருவனின் ஈவிரக்கமற்ற செயலினால் பல இன்னல்களுக்கு உட்பட வேண்டியிருந்தது. அவரது பையைச் சோதனை செய்யும் போது, அவருக்குத் தெரியாமல் கைக் குண்டொன்றை வைத்துள்ளான். ஆனால் அதே சோதனை நிலையத்திலிருந்த இன்னொரு பெண் பிள்ளை அதனைக் கண்டுள்ளார். அக் குறிப்பிட்ட பிள்ளையின் விபரங்களைக் கூறி அவர் கைக் குண்டொன்றைக் கொண்டு செல்வதாக இராணுவச் சிப்பாய் அடுத்த சோதனை நிலையத்துக்கு அறிவித்தான். அதன் பின்பு அவரது ப சோதனையிடப்பட்டு, கைக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அவர் பயமுறுத்தப்பட்ட போது, இச் சம்பவத்தைக் கண்ட ஒரே சாட்சியான மற்றைய பெண் பிள்ளை உண்மையில் என்ன நடந்ததென



அங்கு பிரசன்னமாகியிருந்த சிரேஷ்ட இராணுவ அதிகாரிக்கு உடனடியாக அறிவித்தார். இப் பிரச்சினையுடன் தொடர்பான இராணுவச் சிப்பாய் உடனடியாக வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். ஆரம்பத்தில் அவர் மறுத்தார். ஆனால் அதனைக் கண்ட மாணவி உண்மையை அவரது கவனத்துக்குக் கொண்டு வந்த போது அவ் இராணுவச் சிப்பாய் அதனை ஏற்றுக் கொண்டார். அவர் கடுமையாக எச்சரிக்கப்பட்டார். அநேகமாகச் சில ஒழுங்கு நடவடிக்கை, அவரது மேலதிகாரிகளால் அவருக்கு எதிராக எடுக்கப்பட்டிருக்கலாம். இது அப் பெண் பிள்ளைகளைப் பொறுத்தவரை மிகவும் பாரதூரமான ஒரு விடயமாகும். ஏனெனில் அதனைத் தொடர்ந்து அவர் இராணுவ ஆளணிகளால் தொந்தரவுக்குள்ளாக வாய்ப்புண்டு.

04. கோண்டாவிலைச் சேர்ந்த பெண் பிள்ளை ஒருவர் தன் திருமணத்திற்காக வெளிநாடு செல்வதற்கான பயணம் பற்றித் தனது நெருங்கிய உறவினர்களுக்குத் தெரிவிக்கச் சென்றார். அவர் திரும்பி வருகையில் அண்மையிலுள்ள சோதனை நிலையமொன்றைக் கடந்து செல்லும் போது அவர் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டார். அப் பெண் பிள்ளையின் வீட்டுக்குப் பிரியாவிடை அளிக்கும் முகமாகக் குறிப்பிட்ட உறவினர்கள் வந்த போது அப் பெண் பிள்ளை வீட்டில் இருக்கவில்லை. அவருக்கு என்ன நடந்தது என்பது மர்மமாகவே உள்ளது. அவர் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்பது பொதுவான அபிப்பிராயம்.

05. மீசாலையில் இராணுவத்தினர் தமது ரோந்துகளின் போது அழகான பெண் பிள்ளைகள் இருக்கும் குறிப்பிட்ட சில வீடுகளை அவதானித்துள்ளனர். மறுநாள் அவர்கள் சிறு குடிசையொன்று உள்ள குறிப்பிட்ட ஓர் இடத்துச்குச் சென்றார்கள். அவர்கள் பலவந்தமாக உட்புகுந்து அங்கிருந்த பெண் பிள்ளையை அவரது தந்தையின் முன்னிலையி லேயே பாலியல் வல்லுறவு செய்ய முயன்றுள் ளனர். அம் மிருகத்தனமான காமவெறியர்களின் பிடியில் இருந்து தந்தையால் அவரது மகளைக் காப்பாற்ற முடியவில்லை. அப் பெண் பிள்ளை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். அச் சம்பவம் நிகழ்ந்த போது அப் பெண் பிள்ளையும், அவரது தந்தையும் கூச்சலிட்டனர். ஆனால் பீதி காரணமாக அயலவர்கள் வெளியே வரத் துணியவில்லை. மறு நாள் அப் பெண் பிள்ளையின் மாமனார் ஒருவர் இறந்த உடல்களைச் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். இச்சம்பவத்தை இராணுவம் முதலில் மறுத்தது. ஆனால் பின்பு கிடைத்த உறுதியான சாட்சிகள் காரணமாக ஏற்றுக்கொள்ள வேண்டி இருந்தது.

06. சாவகச்சேரி, டிறிபேர்க் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவரின் வீட்டுக்குச் சென்ற சில இராணுவத்தினர் கதவைத் தட்டி திறக்குமாறு பலவந்தப் படுத்தியுள்ளனர். வந்துள்ளவர்கள் இராணுவத்தினரே என உணர்ந்த வீட்டார்கள் கூச்சலிட ஆரம்பித்ததால் அயலவர்களின் கவனத்தை அது ஈர்த்தது. அதன் விளைவாக இராணுவத்தினர் அவ்விடத்தை விட்டு அகன்றுள்ளனர். அவ் வீட்டு உரிமையாளரும், ஏனைய குடியிருப்பாளர்களும் உடனடியாக அவ்விடத்தை விட்டு அகன்று வேறெங்கோ ஓரிடத்தில் குடியிருக்கச் சென்றுள்ளனர்.

07. சில இராணுவத்தினர் தம்மால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதைத் தொடர்ந்து கொலை செய்யப்பட்ட பெண்களின் புகைப்படங்களை எடுத்துள்ளார்கள் என்பதை யாராலாவது நம்ப முடியுமா? இக் காம வெறியர்கள் இப் புகைப்படங்களை தமது நண்பர்களுக்குக் காட்டி, தமது கெட்டித்தனத் தைப் பற்றி பெருமையடித்துக் கொள்வதற்காக இப்படிச் செய்திருக்கக் கூடும்.

தமிழர்களைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவிக் கும், இறுதிக் குறிக்கோளான அவர்களை இல்லாதொழிக்கும் நடவடிக்கையில் இறங்கியு ள்ள இராணுவ ஆளணிகள் பல்வேறு கொடிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இந் நிலைமைக்கு அரசாங்கம் முற்று ஒன்றைப் போடாவிடின் அது கட்டுப்பாட்டை மீறிச் செல்லலாம். தமிழர்களால் தமது துன்பங்களை இன்னும் தாங்க முடியாது என்பதுடன், யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் ஒவ்வொன்றையும் சர்வதேச சமூகத்தினதும், ஐ. நா. சபையினது கவனத்துக்குக் கொண்டு வருவதைப் பற்றிக் கடுமையாக ஆழ்ந்து ஆராய வேண்டும். காணாமற் போதல்கள் தினசரி இடம் பெற்று வரும் யாழ்ப்பாணத்தில் நிலவும் நிலைமைகள் பற்றி மனித உரிமைகள் அமைப்புக்களதும், மனித உரிமைகள் இயக்கங்களதும் தொடர்ச்சியான மௌனம் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத் துகிறது.

சத்யா
தமிழில்: சி.செ. ராஜா.

# அம்பாறை:
# இப்படித் தான் இருக்கிறது!

14.05.1996 அன்று அதிகாலை 7ஆம், 8ஆம் பிரிவுகளையும், ஒரு புறம் அக்கரைப்பற்று, அம்பாறை வீதியையும் மறுபுறம் சாகமம் வீதியையும், கொண்ட ஆலையடி வேம்புகிராமத்தையும் சேர்ந்த அனைத்து குடியிருப்பாளர்களையும் தத்தமது வீடுகளினுள்ளேயே இருக்குமாறும், எவரும் வெளியே காணப்படக் கூடாது எனவும், அவ்வாறு எவராவது காணப்பட்டால் அவர் சுடப்படுவார் என ஒலிபெருக்கிகள் மூலம் அக்கரைப்பற்று விஷேட அதிரடிப்படை அறிவித்தது. அண்ணளவாக 2 மணித்தியாலங்களுக்குப் பின்பு 10 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் எல்லோருமே பிரதான வீதிக்கு வரவேண்டுமென்ற தகவலொன்று திரும்பவும் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவிக்கப்பட்டது. இல்லாவிடில் வீட்டில் தங்கியிருக்கும் ஆண்கள் தீவிரவாதிகளாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்படுவர். அனைத்து அரசாங்க ஊழியர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், ஏனைய ஆண்களும் கூடவே வீதியில் கூடினர். அவர்கள் அனைவரும் கிராமத்திலிருந்து 03கி.மீ மட்டிலான தூரத்திலுள்ள விஷேட அதிரடிப்படை முகாமுக்கு இராணுவ லொறி, பஸ் மூலமாகக் கொண்டு செல்லப்பட்டனர். மிகுந்த பதற்ற நிலைமை நிலவியது. 2000 ஆண்கள் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மு.ப. 10.00 மணியளவில் மிக வயதானவர்களும், ஒரு சில மாணவர்களும் விடுவிக்கப்பட்டனர். இன்னொரு ஒலிபெருக்கித் தகவலில் எல்லாத் தாய்மாரையும் விஷேட அதிரடிப்படை முகாமுக்கு வந்து, தமது பிள்ளைகளைப் பொறுப்பெடுக்கும்படியும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் கிராமத்தைச் சேர்ந்த அநேக தாய்மார்களும் 03 கி.மீ. தூரம் நடந்தே முகாமுக்குச் சென்றனர். அதன் பின்பு அப்பகுதிக் கிராமசேவையாளர்களதும் ஆசிரியர்களதும் உதவியுடன் விஷேட அதிரடிப்படையாலும், பொலிசாராலும் இப்பகுதிகள் சோதனையிடப்பட்டன. கைவிடப்பட்ட ஒரு காணியிலிருந்து பொலித்தீன் பைகளில் மறைத்து வைக்கப்பட்டுப் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் தோண்டி எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பக்கத்து வீட்டில் தங்கியிருந்த பெண்ணொருவர் விசாரணைகளுக்காகக் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டார். பி.ப. 4.00 மணியளவில் விஷேட அதிரடிப்படையின் நிலையப் பொறுப்பதிகாரி வந்திருந்தோர் அனைவருக்கும் இக்கிராமத்தில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைப் பற்றி பொது மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவே இந்நடவடிக்கை நடத்தப்பட்டதெனக் கூறினார். தீவிரவாதிகளின் அழிவு நடவடிக்கைகள் மேலும் தொடருமானால் பொது மக்களே பொறுப்பாளிகளாவர் என அவர் மேலும் எச்சரித்தார். பின்னர் எல்லாத் தேசிய அடையாள அட்டைகளும் பரிசீலிக்கப்பட்டுப் பொது மக்கள் பி.ப. ஐந்து மணியளவில் வீடுகளுக்குச் செல்ல விடுவிக்கப்பட்டனர். அம்முகாமுக்குக் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட பொது மக்கள் வெய்யிலிலேயே நிற்க வேண்டியிருந்தது.

இந் நடவடிக்கையால் நாட் கூலி வேலை செய்வோர் 1500 பேர் தமது நாட் கூலியை இழந்ததுடன் இக்குடும்பங்களில் அநேக மானவை பட்டினியால் வாடுகின்றன.

14.05.1996 பொத்துவிலிலுள்ள இன்ஸ்பெக்ரர் ஏற்றத்தில் சில்லரைக் கடை உரிமையாளரான 32 வயதான கணபதிப்பிள்ளை தம்பையா மது போதையில் இருந்த 5 பொலிஸ் கான்ஸ்ரபிள்களால் தாக்கப்பட்டார்.

அதே தினத்தில் அதையொத்த சம்பவமொன்று அருகாமைக் கிராமமொன்றான குண்டுமடுவில் நடைபெற்றுள்ளது. 50 வயதான மாணிக்கமுத்து சோதனைச் சாவடியொன்றினூடாக வீட்டுப்பாவனைப் பொருட்களை ஒரு பையில் எடுத்துச் செல்கையில் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

பொத்துவிலிலுள்ள குண்டுமடுவைச் சேர்ந்த செல்வன் டேவிட்டும் கூடவே மது போதையில் இருந்த இரு பொலிஸ் கான்ஸ்ரபிள்களால் அடிக்கப்பட்டிருக்கிறார்.

வழமையான நிலைகளில் கூடத் தமிழ்ப் பெண் பிள்ளைகளும், பெண்களும் சோதனைச் சாவடிகளில் கான்ஸ்ரபிள்களால் தொல்லைக்குட்படுத்தப்படுவதுடன், அவமதிக்கவும் படுகின்றனர்.

17.05.1996 மாலையில் பொத்துவில் நகரப் பகுதித் தமிழர்கள் சுற்றி வளைக்கப்பட்டு விஷேட அதிரடிப்படைமுகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்பு விடுவிக்கப்பட்டனர்.

அதே தினத்தன்று இன்ஸ்பெக்ரர் ஏற்றத்திலுள்ள அப்பாவித் தமிழ் குடியிருப்பாளர்களை மது போதையில் வந்த பொலிஸ் கான்ஸ்ரபிள்கள் குண்டாந்தடிகள், துப்பாக்கிப் பிடிகள் கொண்டு கொடூரமாகத் தாக்கினர். அவர்களில் கடுமையாகக் காயப்பட்டவர்கள் செல்வி. ஆர். ரூபா (22), கந்தன் கல்பகசோதி (35), இராசையா சசிகலா (25). கடந்த வாரங்களிலுள் நடைபெற்ற பொலிசாரின் மனிதாபிமானமற்ற நடத்தையின் மூன்றாவது நிகழ்ச்சி இதுவாகும்.

23.05.1996 அன்று கோமாரி கிராமத்தில் பி.ப. 1.30 மணிக்கு கிராமத்தின் ஆண்கள் சுற்றிவளைக்கப்பட்டு கடும் வெய்யிலில் இருக்கச் செய்யப்பட்டு அவர்கள் வழமையாகச் செல்லும் விறகு வெட்டும் வேலைக்குக் காட்டுக்குச் செல்லக் கூடாதென எச்சரிக்கப்பட்டனர். விறகு வெட்டி விற்றுப் பிழைப்பு நடத்தும் அக்குடும்பங்கள் இப்போது தொழிலின்றி மிக மோசமான நிலைக்குள்ளாகியுள்ளன.

25.05.1996 அன்று பொத்துவிலிலிருந்து அக்கரைப்பற்றுக்கு சென்று கொண்டிருந்த மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவை பஸ் தாண்டியடி விஷேட அதிரடிப்படைமுகாமில் பாதுகாப்பு அதிகாரிகளால் மு.ப.6.15 முதல் மு.ப. 9.00 மணி வரை எதுவித உறுதிப்படுத்தப்படாத காரணத்துக்காக நிறுத்தி வைக்கப்பட்டது. இத்தாமதத்தால் பாடசாலை செல்லும் பிள்ளைகளும், அரசாங்க மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களும் அவசியமின்றித் தாமதிக்கப்பட்டனர். இவ்விதமான படையினருக்குத் தேவைப்படும் போது பஸ்ஸைத் தாமதப்படுத்துவதும் விடுவிப்பதும் தாண்டியடிப் பாதுகாப்புப் படையால் அடிக்கடி பின்பற்றப்படும் வழக்கமாகும்.


26.05.1996 பி.ப. 2மணிக்குத் திருக்கோவில் பகுதியிலுள்ள தம்பிலுவில் மத்திய சந்தையில் திருக்கோவில் விஷேட அதிரடிப்படையின் நிலையப் பொறுப்பதிகாரி ரத்துபிற்றியவின் வழி நடத்துதலின் கீழ் சந்தைக்கு வந்திருந்த 25 தமிழ் ஆண்கள் சுற்றிவளைக்கப்பட்டு வெய்யிலில் நிறுத்தி வைக்கப்பட்டபின் பி.ப. 3.45 மணியளவில் விடுவிக்கப்பட்டனர். பாணமை கிராமத்தைச் சேர்ந்த தமிழர்களோ அல்லது சிங்களவர்களோ பொத்துவில் நகரத்தில் உள்ள சந்தைக்கு வந்து அவ் வாரத்துக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்வது வழக்கமான தொன்றே. அண்மைக்காலம் முதல் சிங்களவர்கள், தமிழர்கள் என்ற பேதமின்றி பாணமைக் குடியிருப்பாளர்கள் வாங்கக்கூடிய பொருட்களின் அளவு மீது கட்டுப்பாடுகளைப் படையினர் விதித்துள்ளனர். ஆனால் படையினர் பிரயாணம் செய்யத் தேவையான போதெல்லாம் அவர்கள் பொது மக்களை ஒரு மனிதக் கேடயமாக வலுக்கட்டாயமாகப் பயன்படுத்துகின்றனர்.

பாதுகாப்புப்படையினர் அல்லது தளபதி, பயணிகள் பயணம் செய்யும் வாகனங்களில் இருந்தால் பொதுமக்கள் பல சந்தர்ப்பங்களில் வாகனத்தை விட்டு இறங்கி ஓடியுள்ளனர். ஏனெனில் படையினர் வாகனமொன்றில் இருந்தால் நிச்சயமாக அது தீவிரவாதிகளின் குறியாகும் என்பதனாலாகும். இதனைத் தெரிந்து கொண்டும் பாதுகாப்புப் படை அப்பாவிப் பொதுமக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்துகிறது. படையினரின் இந் நடவடிக்கையால் பாணமைக் குடியிருப்பாளர்களின் சகஜவாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

*சுயாதீனப் பிராந்திய இணை வலையமைவு (Independent Regional Associated Network - I.R.A.N.) அறிக்கையிலிருந்து*

www.tamilarangam.net





# நோபல் பரிசும் ஜோசே ராமோசும்!

என்.எஸ்.குமரன்

'இந்தோனேசியாவை எதிர்த்துப் போராட பாரிய பலம் எமக்கு இல்லை. ஆகவே சர்வதேச மத்தியஸ்தத்துடன் கூடிய அரசியல் தீர்வே எமக்கு இறுதியான தீர்வாக அமைய முடியும்."

இப்படி ரிமோர் விடுதலை இயக்கத் தலைவர் ஜோசே ராமோஸ் ஹோர்தா அண்மையில் இலங்கை வந்திருந்த போது சரிநிகருடனான உரையாடலின் போது குறிப்பிட்டார்.

ஜோசே அவர்கள் இலங்கையை விட்டுச் சென்று இரு நாட்களின் பின் '96 ஆம் ஆண்டுக்கான சமாதானத்துக்கான நோபல் பரிசு" அவருக்கு கிடைத்தது. ஒரு விடுதலைப் போராளி 'நோபல் பரிசு பெற்றது குறித்து இப்போது சர்ச்சைகள் கிளம்பியுள்ளன. இந்நிலையில் யார் இந்த ஜோசே? கிழக்கு ரிமோர் விடுதலைப் போராட்டத்தின் பின்னணி என்ன? 'நோபல் பரிசு" வழங்குனர்களான மேற்குலகு, மற்றும் அமெரிக்கா போன்றவற்றின் கிழக்கு ரிமோர் மீதான தேவை தான் என்ன? அவை செலுத்தி வரும் ஆதிக்கம் தான் என்ன? என்பதை சாராம்சமாகவேனும் மீள பார்ப்பது தமிழ் தேச போராட்ட வரலாற்றில் நடைமுறையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை அவதானிக்கவும் அவசியப்படும். எச்சரிக்கையை ஏற்படுதவும் உதவும்.

போர்த்துக்கல் அன்றைய காலத்தில் தன்னைவிட 20 மடங்கு பெரிய நிலப்பகுதியை தனது குடியேற்ற நாடுகளாகக் கொண்டிருந்தது. தன்னுடைய காலனித்துவத்துக்குட்பட்டிருந்த கிழக்கு ரிமோரில் 1974ம் ஆண்டு எற்பட்ட இரரணுவச் சதியைத் தொடர்ந்து போர்த்துக்கல் அங்கு சுதந்திரம் வழங்கியது. கிழக்கு ரிமோரின் பிரடிலின் அமைப்பு **(FRETILIN)** 1975ம் ஆண்டு நவம்பர் 28ம் திகதி கிழக்கு ரிமோரை சுதந்திர அரசாகப் பிரகடனம் செய்தது. எண்ணி 10வது நாளில் அண்டை நாடான இந்தோனேசியா கிழக்கு ரிமோரை ஆக்கிரமித்ததுடன் தன்னுடைய 27வது மாகாணமாகப் பிரகடனப்படுத்தியது. அன்று தொடங்கியது தான் ரிமோர் விடுதலைப் போராட்டம்.

இலங்கையைப் போலவே அங்கும் பல்வேறுபட்ட இயக்கங்கள் ரிமோர் விடுதலைக்காகப் போராடி வருகின்றன. பிரதானமாக சமூக ஜனநாயக அணி, கிறிஸ்தவ அணி, கம்யூனிச அணி என பல இயக்கங்கள் வேறுபட்டு நிற்கின்றன.

'தற்போது அனைத்து இயக்கங்களும் ஒன்று சேர்ந்து 'மௌபரி எதிர்ப்பியக்கத்தின் தேசிய சபை **(National Council of Moulbere Resistance)** எனும் அமைப்பை உருவாக்கி இயங்கி வருகிறோம் இவ்வமைப்பில் இயக்கங்களின் தனிப்பட்ட கொள்கைகளை பேசுவதை தவிர்த்துக் கொண்டு கிழக்கு ரிமோரின் விடுதலையையே முதன்மைப் படுத்தி போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம்." என்கிறார். ஜோசே.

இந்த ஐக்கிய முன்னணியின் தலைவர் குஸ்மாவோ 1992ம் ஆண்டு இந்தோனேசியாவில் பிடிக்கப்பட்டு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு பின் அத்தண்டனை மாற்றப்பட்டு 25 வருட சிறைத்தண்டனையை அனுபவித்து வருபவர். இவரது கைதின் பின் ஐக்கிய முன்னணியின் சிறப்பு தூதுவராகவே ஜோசே அவர்களே இயங்கி வருகிறார். இதை விட போர்த்துக்கேயரிடமிருந்து விடுதலை பெற்ற பின் குறுகிய காலம் ஆட்சியிலிருந்த அமைச்சரவையில் வெளிநாட்டமைச்சராக கடமையாற்றிய ஜோசே இந்தோனேசியா ஆக்கிரமித்த காலகட்டத்தில் நியுயோர்க்கில் ஒரு மாநாட்டுக்காக சென்றிருந்தார். பிரடிலின் அமைப்பைச் சேர்ந்த பலர் அதன் போது கொல்லப்பட்டனர். அன்றிலிருந்து இவர் தனது தாய் நாட்டுக்குப் போகவில்லை. நாட்டுக்கு வெளியிலிருந்தே தனது கடமைகளைச் செய்து வருகிறார். ஜோசேவின் நான்கு சகோதரர்களை இந்தோனேசிய அரச படையினர் கொலை செய்து விட்டனர்.

ரிமோர் விடுதலைப் போராட்டத்தை இலங்கையோடு ஒப்பிடுமாறு கேட்டபோது, 'இலங்கையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அதிகாரத்தில் அமர்கின்ற அரசாங்கம் தமது இராணுவ பலத்தைக் கொண்டு அடக்கு முறையை மேற்கொள்கிறது. அது தெற்கிலும் சரி வடக்கிலும் சரி. எனவே இலங்கையைப் பொறுத்தவரை சிவில் யுத்தமே நடைபெறுகிறது. ஆனால் நாங்கள் அந்நிய இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடி வருகிறோம்." என்கிறார்.

### எதிரிகளை ஒன்றும் செய்வதில்லை

"விடுதலை அமைப்புகளினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் பற்றி என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்ட போது

'...அந்நிய இராணுவத்துக்கெதிரான போராட்டதின் போது ஏற்படும் மனித உரிமை மீறலை விட சிவில் யுத்தத்தின் போது ஏற்படும் மனித உரிமை மீறல்கள் மிகுந்த கவனத்துக்குரியன. ஒரு ஜனநாயக நாட்டில் அரசாங்கம் மக்கள் வாக்குகளினாலேயே பதவிக்கமர்கிறது. அதற்கு ஆதரவளிக்கும் பிரிவினரும் உள்ள நிலையில் அவர்களுக்கு ஆயுதப் போராட்டம் பற்றி போதியளவு விளக்கங்களை அளித்துக் கொண்டே செயல்படவேண்டியுள்ளது." என்று தெரிவித்தார்.

'தமிழ் தேசப் போராட்டம் குறித்து என்ன விளங்கி வைத்துள்ளீர்கள்? என சரிநிகருடனான நேர்காணலில் கேட்டபோது, 'சிறிதே தெரிந்து வைத்துள்ளேன். தமிழ் மக்கள் நெடுங்காலமாக துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். அதற்கு ஒரு வரலாற்றுப் போக்கு உண்டு. இரு தரப்பினதும் அடக்குமுறைக்கும் மக்கள் முகம் கொடுத்து வருகிறார்கள்.. புலிகள் சிங்கள மக்களுக்கு எதிராகவும் தமது மக்களுக்கு எதிராகவும் ஜனநாயக விரோதம் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள். எதிரிகள் எப்படியிருந்த போதும் போராட்ட சக்தியொன்று இப்படி இயங்குகையில் மக்களிடம் கொண்டுள்ள தார்மீக பலத்தை இழந்து விடும் சிக்கலும் உண்டு. எனவே ஒரு சுய ஒழுக்கக் கோவையொன்றை பின்பற்றுவது அவசியமானது.

என்றாவது எமது அமைப்பு இந்தோனேசிய அல்லது ரிமோரிய அப்பாவி மக்களை கொன்றொழித்தால் அன்றே நான் அமைப்பிலிருந்து விலகுவேன்.

இந்தோனேசிய ராணுவத்திடம் எமது அமைப்பைச் சேர்ந்தவர்கள் வழக்கமாக பிடிபடுகின்ற போது நிச்சயமாக கொன்றுவிடும். நாங்கள் கொல்வதில்லை. சிறிது நாட்கள் வைத்திருந்து விட்டு விடுதலை செய்து விடுவோம்.

எமது நாட்டிலும் இந்தோனேசிய இராணுவத்துக்கு எம்மைக் காட்டிக்கொடுக்கும் ரிமோரியர்கள் கூட உள்ளனர். ஆனால் நாங்கள் ஒரு போதும் அவர்களுக்கு எதிராக எதனையும் செய்ததில்லை.

இதன் மூலம் நாங்கள் எதிர்பார்ப்பது எதிரிகளை குறைத்துக் கொள்வதும் நண்பர்களை அதிகரித்துக் கொள்வதுமே" என்கிறார் ஜோசே.

### இன அழிப்பின் முன்

ஜோசேவின் பதில் குறித்த சில வினாக்கள் எழுகின்றன. 'இந்தோனேசிய ஆக்கிரமிப்பு தொடங்கியபோது, முதல் மூன்று வருடங்களில் ரிமோரிய சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரை இந்தோனேசிய இராணுவத்தினர் கோரமாக கொற்றொழித்தது. இதைத் தவிர மக்கள் தொகையில் பாதிப் பேர் காணாமல் போய்விட்டதாக ரிமோர் கத்தோலிக்க திருச்சபை கூறுகிறது. தனது ஆக்கிரமிப்புக்கு எந்தவித நியாயங்களையும் முன்வைக்காத இந்தோனேசியா ரிமோர் மக்களை கைது செய்து பாதையில் குப்புறக் கிடத்தி இராணுவ வாகனங்களை ஏற்றிக் கொன்றது. நேபாம் குண்டுகள், பீப்பாய் குண்டுகள், என்பன விமானங்களின் மூலம் மலைப்பிரதேசங்களில் மீது போடப்பட்டு கொன்றொழிக்கப்பட்டனர். ஒடியொளிந்த இளம் பெண்கள் முகாம்களில் நிரந்த காமத்தீனிகளாகப் பயன்படுத்தப்பட்டனர். ரிமோரிய மக்களின் எண்ணிக்கை கூடாதபடி இராணுவமே கட்டாய கருத்தடையையும் புகுத்தியது.

1992ம் ஆண்டு ரிமோரின் தலைநகரான திலியில் சாந்தகுரூஸ் மயானத்தில் வைத்து அதுவரை கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தவெனக் கூடிய மக்கள் மீது இராணுவம் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டது. அதன் போது 272 பேர் ஸ்தலத்திலேயே மரணமாயினர். அதில் காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்ட்டிருந்த பெண்களை அங்கேயே வைத்து இராணுவம் பாலியல் வல்லுறவு கொண்டது என சர்வதேச மன்னிப்புச் சபையும் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஜோசே , காட்டிக் கொடுப்பவர்களை நாம் ஒன்றும் செய்வதில்லை என்று சொல்கின்ற போதும் அது அவர்களது அமைப்பினை தற்கொலைக்கு இட்டுச் செல்லும் ஒரு செயலாக இருக்காதா என்ற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை. இது குறித்த எமது கேள்விக்கு அவர் அளித் பதில் போதுமானதாக இருக்கவில்லை. ஜோசே 1992 யூனில் சரிநிகருக்கு அளித்த பேட்டியொன்றில் 'எங்களிடம் ஆயுதம் இல்லை, பலமான கெரில்லாப் படையும் இல்லை. மக்கள் ஆதரவும், அனைத்துலக அரவணைப்பும் தான் உள்ளது. என்கிறார். இன்னமும் அதையே சொல்லி வருகிறார். ஆனால் இந்த சர்வதேச அரவணைப்பு என்பது எதிரி நடத்தும் அடக்கு முறையை அங்கீகரிக்கும், ஆதரவு வழங்கும் சக்திகளே என்பதையும் எதிரிக்கு பக்கபலமானது என்பதை விழிப்புணர்வுடன் நோக்காமல் இருக்க முடியுமா? தம்மீதான இரங்கலின் அர்த்தம் அரவணைப்பல்ல வெறும் முதலைக் கண்ணீர் மட்டுமே என்பதை நோக்காமல் விட முடியுமா? அவர்களின் முதலைக் கண்ணீருக்கு பின்னணியில் உள்ள அவர்களின் தேவையை கண்டுங்காணாமல் விட்டுவிட முடியுமா?

### யார் இந்த அரவணைப்பாளர்கள்?

ஜோசே அவர்கள் கிழக்கு ரிமோருக்கு வெளியில் நின்று கொண்டு (போராட்டத்தில் நேரடி பங்களிப்பின்றி) ஒரு பிரச்சாரகராக மட்டுமே செயல்படுபவராகவே இனங்காணப்படுகிறார். அதனாலேயோ என்னவோ இந்தோனேசிய ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆயுதப் போராட்டம் பற்றிய உணர்வை விட மனித உரிமையாளராக முன்னிற்பதில் கூடிய அக்கறை காட்டி வருகிறார். குறிப்பாக 'எமது பிரடிலின் அமைப்புக்குக் கீழ் தலைமறைவு மாணவ அமைப்பு இயங்கி வருகிறது." என்று கூற முயல்கிறாரேயொழிய தமது கெரில்லா அமைப்பு பற்றி பெரிதாக காட்டிக்கொள்ள விரும்புபவராக இருக்கவில்லை. ஒரு சமூக ஜனநாயகவாத சக்தியாக ஜோசே இருக்கின்ற போதும் முழு போராட்ட சக்தியையும் அவ்வாறுதான் எனக் காட்டிக் கொள்ளவே அதிகம் முயல்கிறார்.

கூடுதலாக அவர் தாமும் ஏனையமுதலாளித்துவ சக்திகளின் நண்பன் தான் எனக் காட்டிக்கொள்ள முயல்கிறார் என்றும் கொள்ளலாம். ஏனெனில் ஜோசே அவர்கள் அமெரிக்காவினதும் மேற்குலகினதம் அவுஸ்திரேலியாவினதும் நண்பராகவே தொழிற்பட்டு வருகிறார். இந்நாடுகள் இந்தோனேசியாவினது நெருங்கிய கூட்டாளி என்பது தெரிந்திருந்தும் தமது போராட்டத்தை ஒடுக்க ஆயுத, பொருளாதார மற்றும் பிரச்சார நடவடிக்கைகளையும் இந்நாடுகள் இந்தோனேசியாவுக்கு வழங்கி வருகின்றன என்பது தெரிந்தும் ஜோசே இந்நாடுகளில் தங்கியிருப்பது மற்றும் நம்பியிருப்பது போராட்டதில் எதிர்காலம் குறித்த கேள்விகளை எழுப்புகிறது.

இந்நாடுகள் இவ்விடயம் குறித்த நிலைப்பட்டுக்கான பிரதான காரணிகள்,

1) பசுபிக் பிராந்தியத்தில் வடக்கே சீனா, வியட்நாம், லாவோஸ், வடகொரியா என்பனவற்றின் செல்வாக்கினால் கிழக்காசிய மற்றும் அவுஸ்திரேலிய, நியுசிலாந்து போன்ற நாடுகளும் சோஷலிச நாடுகளாக ஆகிவிடுமோ என்கின்ற அச்சம். அதைத் தடுப்பதானால் இந்தோனேசியா ஒரு முதலாளித்துவ நாடாக இருந்து கொண்டு அப்பிராந்தியத்தில் ஒரு பிரிநிலைக்கோடாக இருக்கவேண்டும்.

2) இந்தோனேசியாவில் காணப்படும் எண்ணெய் வளம், கனிப்பொருட் செறிவு, பணங்குவிக்கும் சந்தனக் காடு, கடல் வளம் என்பன மேற்படி நாடுகளின் முதலீட்டுக்கான வாய்ப்புக்களை ஊக்குவிப்பன.

இதன் காரணமாகவே இந்தோனேசியாவுக்கு இந்நாடுகள் 'அன்புக்கு அடிமையானவர்கள்." எனவே தான் 1975ம் ஆண்டு ஆக்கிரமிப்பின் போதே அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கிஸிங்சர் என்பவர் 'ஆக்கிரமிப்பை எப்படி நடத்துவது" என்கின்ற ஆலோசனையை இந்தோனேசியாவுக்கு விஜயம் செய்து அறிவுறுத்தியிருந்தார். இத்தகவல் மிகவும் பிற்காலத்திலேயே அம்பலமானது.

ஜோசே அவர்கள் கருத்து தெரிவிக்கையில் "அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நோர்வே, ஸ்வீடன், பிரான்ஸ், உள்ளிட்ட பல மேற்குல நாடுகளும் எமக்கு ஆதரவு வழங்கி வருகிறது." என்கிறார்.

'அவ்வாதரவு அந்நாடுகளின் தார்மீக ரீதியான ரிமோரிய விடுதலைக்கான ஆதரவா அல்லது தமது சுய உள் நோக்கங்களுக்கான ஆதரவா?" என்ற கேட்கையில்,

'இல்லை...இல்லை... அந்நாடுகள் எமது போராட்டத்துக்கான ஆதரவை தார்மீக ரீதியல் வழங்கி வருகின்றன. உள்நோக்கங்கள் எதுவுமில்லை குறிப்பாக அமெரிக்காவில் கிளின்டன் ஆட்சிக்கு வந்ததன் பின் இந்தோனேசியாவுக்கான ஆயுத விநியோகத்தை குறைத்துக்கொண்டுள்ளார்." என்கிறார்.

ஆனால் அண்மைய செய்திகளின் படி கிளின்டன் அரசாங்கம் எப்.16 வர்க்க யுத்த விமானங்களை இந்தோனேசியாவுக்கு வழங்கியிருக்கிறது. தற்போது நடந்து வரும் அமரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தில் கிளின்டனுக்காக இந்தோனேசிய வர்த்தகர்கள், கோடீஸ்வரர்கள் பெருமளவு செலவு செய்து வருவதாக எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளர் பொப் டோல் அண்மையில் தெரிவித்திருந்தார் என்பதுவும் இங்கு கவனிக்கத்தக்கது.

கிழக்கு ரிமோரை இந்தோனேசியா வாபஸ் பெற வேண்டும் என்கின்ற தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச்சபை 1975, 1976 ஆகிய ஆண்டுகளில் இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தது. இந்தோனேசியா அதனை கொஞ்சமும் சட்டை செய்யவில்லை. வழமையான பாதுகாப்புச் சபை கூட்டங்களின் போதெல்லாம் அத்தீர்மானம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. எங்கே போயின இந்த மேற்குலகும், அமெரிக்காவும்? அவுஸ்திரேலியா கூட 1978ஆம் ஆண்டே இந்தோனேசியாவுடனான ரிமோர் இணைப்புக்கு அங்கீகாரம் வழங்கிவிட்டது. இன்றும் இந்தோனேசியாவுக்கு இராணுவப்பயிற்சியையும் அவுஸ்திரேலியா வழங்கி வருகிறது. இத்தனைக்கும் இரண்டாம் உலக யுத்த காலத்தில் அவுஸ்திரேலியாவைப் பாதுகாப்பதற்காக 40,000 கிழக்கு ரிமோர் வீரர்கள் அவுஸ்திரேலிய மண்ணில் தமதுயிரைத் தியாகம் செய்தார்கள். அவுஸ்திரேலியாவுக்கோ தனக்கருகில் இன்னாரு 'கியுபா" உருவாகி விடக்கூடாது என்பதே.

### கைகோர்த்துவிட ஓர் கிளிண்டன்!

இந்த மேற்கத்தேய முதலாளித்துவ கிறிஸ்தவ நாடுகளுக்கு உள்ள இன்னுமொரு பிரதான பிரச்சினை தான், இந்தோனேசியாவை இஸ்லாமிய அடிப்படைவாதப் போக்குக்கு ஆளாக விடாமல் தடுப்பது என்பது. இந்தோனேசியா உலகின் சனத்தொகையில் ஐந்தாவது இடம் என்பதும் உலகிலுள்ள 10 வீதமான முஸ்லிம்கள் இங்கு தான் இருக்கிறார்கள் என்பதுவும் மேற்படி சக்திகளை அச்சுறுத்தும் காரணிகள். எனவே தான் கிழக்கு ரிமோரிலும் தமது காலை பதித்து வைத்துள்ளன. தேவையேற்படின் இரண்டையும் மாற்றி மாற்றி காய் நகர்த்தும் வேலையில் ஈடுபடும். இந்தியா தமிழ் தேசப் பிரச்சினையில் நடந்து வருவதைப்போல் இன்றும் அமெரிக்கா நடந்து வருவதைப்போல் அங்கு அவை. ஐ.நா.விலும் இந்நாடுகளின் கையோங்கிய நிலை இருப்பதன் காரணமாகவே அதன் தீர்மானத்தையும் கூட நடைமுறை சாத்தியமற்றதாக்கியுள்ளது. இல்லாவிட்டால். ரிமோரின் விடுதலை எப்போதோ கைகூடியிருக்கும்.

ஜோசேயின் சர்வதேச பிரச்சாரமும் இது வரை இந்த மேற்குலக நாடுகளின் ஏமாற்று வித்தையை அம்பலப்படுத்துவதற்கு மாறாக (அதாவது விடுதலைக்கு தடையாக இருக்கும் சக்திகளாக உலகுக்கும் தமது தேசத்துக்கும் இனங்காட்டுவதில்) இந்நாடுகளின் போக்கை உண்மைக்குப் புறம்பாக பிரச்சாரிப்பதற்கு உடந்தையாகி வந்துள்ளாரா என்று எண்ண தோன்றுகிறது. அவருக்கு கிடைத்த நோபல் பரிசு அதனை மெய்ப்பிப்பாற் போல் தெரிகிறது.

தென்னிலங்கை மாக்சீய அமைப்பொன்றைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ' ஜோசே நோபல் பரிசு வாங்கியது நல்லது. அது சர்வதேச பிரச்சாரத்துக்கு கைகொடுக்கும்" என்றார். இன்னொரு இளைஞரோ இல்லை... அதனை நிராகரித்திருந்தாலும் அதற்குக் கிட்டிய அல்லது அதனிலும் கூடிய சர்வதேச பிரச்சாரமான்று கிடைத்தே இருக்கும். நோபல் பரிசுடன் மெய்சிலிர்த்துப் போயிருக்கும் ஜோசே வெற்று மனித உரிமைப் பிரச்சாரத்துக்கு மாத்திரமே மேலும் இதன் மூலம் ஊக்குவிக்கப்படுவார்" என்கிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# "வேண்டப்படாத சுதந்திரத்தின் இருப்பிடம்"



–லூஷன் ராஜகருணாநாயக்க

வாழ்தலின் இறுதி மூச்சுக்காகப் போராடிக்கொண்டிருந்தாள் கிருஷாந்தி குமாரசாமி. கூட்டாகச்சேர்ந்து அவளைப் பலாத்காரப்படுத்தி அவளது குரல்வளையை நசித்துக்கொண்டிருந்தது ஒரு காக்கிச்சட்டைக் கூட்டம். அவர்களில் சிலர் ஆயுதங்கள் சுமந்திருந்தனர். அவை அவர்களின் பாதுகாப்புக்காகவும் மக்களின் பாதுகாப்புக்காகவும் வழங்கப்பட்டிருந்தன அவர்களுக்கு. அவர்களில் சிலரிடம் அவை இருக்கவில்லை. அவளின் வாழ்வை அழித்து நாசமாக்குகிற அவசரத்தில் அவற்றை எங்கோ தூர எறிந்திருந்தனர்.

உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு அவள் வரும் வழியில் இருந்த தடுப்புக் காவலரணில் அவளை மறித்தனர் சிலர். அன்றிலிருந்தே அவளின் துன்பவாழ்வு தொடங்கிவிட்டது.

பாடசாலைச் சீருடை, பாடக்குறிப்புக்கள், பென்சில், பேனைகள். இந்த நிலையில் தான் அவள் மறிக்கப்பட்டாள்... அவளின் வாழ்வும் முடிக்கப்பட்டது. இப்போது அதே நிலையில்தான் "வேண்டப்படாத சுதந்திரத்தின் இருப்பிடத்துக்கு" அவள் வந்திருக்கிறாள். அவள் மட்டுமல்ல அவளைப் போல் சாகிற அனைவருமே இந்த இருப்பிடத்துக்குத்தான் வருகிறார்கள்.

இருப்பிட வாசல் திறந்தது. இருந்தும் துன்பவேதனையின்வடு இன்னும் அவள் முகத்தில் தெரிந்தது. அவளை வாழ்த்தி வரவேற்ற அவளைப் போலவே இருந்த இளையவர் வரிசையைக் கண்ணுற்றதும் ஆச்சரியமேற்பட்டது அவளுக்கு. அவள் அவர்களுடன் தங்கியிருப்பதற்கான சந்தோஷ வரவேற்பு கிடைத்ததில் தன்னை மறந்தாள். என்றுமே கேட்டிராத தப்பித்த வாழ்வின் பேருவகையை அவள் உணர்ந்தாள்.

அவளைச் சுற்றிநின்றவர்களில் பெரும்பாலானோருக்கு 14 அல்லது 15 வயது தானிருக்கும். இன்னும் சிலருக்கு 30க்குக் கிட்டயிருக்கலாம். எனினும் அதிகமானோர் அவர்களின் இளமைப்பருவத்திலேதான் இருந்தனர்.

கிருஷாந்திக்கு ஒரு சிறு பிரச்சினை; மொழிப்பிரச்சினை. அவளுக்கு சிங்களம் தெரியாது. அவளது பாடசாலையில் அது கற்பிக்கப்படவில்லை. கற்பித்திருந்தால் கற்றிருப்பாள். எனவே; தயக்கம்.

ஒரு வாலிபன் முன்னே வந்து அவளின் கையைப்பிடித்துச் சொன்னான். "கவலைப்படவேண்டாம் சகோதரி. இங்கே மொழிப்பிரச்சினையே இல்லை. இங்கு நாமெல்லோரும் ஒரே மொழியையே பேசுகிறோம். அதுதான் உலகிலிருந்து அப்புறப்படுத்துப்பட்டவர்களின் மொழி....!"

அவளுக்கு அந்த மொழிகூடத்தெரியாதது தான். எனினும் அவ்வாறு அவன் சொன்னதும் அந்த மொழியிலேயே அவளுக்கு கதைக்க முடியுமாயிருந்தது..." ரொம்ப நன்றி... உங்களுடன் எப்படி கதைக்கப் போகிறேனோ என்று குழம்பிக்கொண்டிருந்தேன்..." என்றாள். அவளைச் சுற்றியிருந்தவர்களிடையே ஓர் இனம் புரியாத பிணைப்பை அவள் உணர்ந்தாள். அவளுக்கு அவள் அப்பா சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.... "மொழியினால் மக்கள் பிளவுண்டுவிடக்கூடாது. மொழியென்பது ஒருவரையொருவர் புரிந்துக் கொள்ளக்கூடிய ஊடகம். கலாசார தனித்துவத்தின் ஒரு தோற்றமே மொழி என்பது"

இன்னொரு இளைஞன். சிங்கள இளைஞன்தான். அவளை நோக்கி வந்தான். ஆனால் அவள் பயப்படவேயில்லை.

"நான் காமினி, எம்பிலிப்பிட்டியவைச் சேர்ந்தவன்." என தன்னை அடையாளப் படுத்தி, கிட்டத்தட்ட அவளையொத்த முப்பது பேரளவிலான இளைஞர்குழுவொன்றைக் காட்டினான். "நாங்கள் எல்லோரும் எம்பிலிப்பிட்டியவைச் சேர்ந்தவர்கள்... 'சூரியகந்த' வழியினூடே இங்கே வந்தவர்கள் நாம். 1989லிருந்து இங்கிருக்கிறோம்."

எம்பிலிப்பிட்டிய குழுவினரிலிருந்து ஒரு பையன் சொன்னான். "நாம் எம் பெற்றோரை, நண்பர்களை எல்லாம் இழந்து விட்டோம். அவர்கள் எம்மோடு இல்லை. இன்னொன்று 'காக்கிக்காரர்களும்' இங்கே இல்லவேயில்லை. அவர்களில் உள்ள நல்லவர்கள் கூட இங்கில்லை. அவர்கள் இறந்ததும் அவர்களுக்கென்ற வேறொரு பிரதேசத்திற்கு அவர்கள் சென்று விடுவார்கள். நாம் இங்கே பூரண சுதந்திரமாய் இருக்கலாம். இங்கே அனுமதிக்கப்படாத ஒரே பொருள் 'காக்கி' தான். இது எல்லோரினதும் ஒருமித்த உடன்பாடு..."

கிருஷாந்தியை நோக்கி ஒரு இளம் பெண் வந்து கொண்டிருந்தாள். அவளையே உற்று நோக்கினாள் கிருஷாந்தி. நெற்றியில் பொட்டிருந்தது. தமிழ்ப் பெண்தான். எனினும் அவள் தமிழில் பேசவில்லை. அந்தப் பொது மொழியில் பேசினாள்.

"உனக்கு என்ன நடந்ததென்பது எங்களுக்குத் தெரியும். எங்களாலும் அதைத் தடுக்கமுடியவில்லை. நீ எந்தளவு சித்திரவதைப்பட்டாய் என்பதை நாங்கள் கண்டோம். எனது பெயர் செல்வி. சுண்ணாகத்தைச் சேர்ந்தவள். சில வருடங்களுக்கு முன் நான் இங்கு வந்தேன். எனது பயணமும் உன்னுடையது போன்றதுதான். என்னைப் பலாத்காரப்படுத்தி வல்லுறவு கொண்டவர்களும் சிங்களவர்கள்தான். ஆனால், அந்த நேரம் வேறொரு அரசு, ஆட்சியிலிருந்தது. வேறு 'கொமாண்டோக்கள்'தான் இருந்தார்கள். அவர்கள் எங்களை வெறுத்தார்கள். கிட்டத்தட்ட இந்த யுத்தத்தொடக்கத்திலிருந்து நானிங்கிருக்கிறேன். அந்த ஆரம்ப நாட்களில் அவர்கள் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். வந்து எங்களை வெளியே இழுத்துச் சென்று வல்லுறவு கொள்வார்கள்..."

செல்வி கைகளால் சைகை செய்தாள். திடீரென கிருஷாந்தி நூற்றுக்கணக்கான தமிழ்ப்பிள்ளைகளின் மத்தியில் தோன்றினாள்.

"நாங்கள் இப்படி நிறையப்பேர் இருக்கிறோம். நாங்கள் ஒரு விஷேட சமூகம் மாதிரி. ஆனால் இங்குள்ள சிங்களவர்கள் எம்மை வெறுப்பதில்லை. எங்கள் கலாசாரத்தை மறுப்பதில்லை. எம் சொந்தப் பாடல்களை நாங்கள் பாட ஊக்குவிப்பார்கள்.."

இன்னொரு பெண் கிருஷாந்தியுடன் கதைத்தாள். "நான் ராஜினி. யாழ் பல்கலைக்கழகத்தில் கற்பித்துக்கொண்டிருந்தேன். நான் இங்கு புலிகளின் தடத்தினால் வந்தேன். இன்னும் அங்கே சிலர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், இது விடுதலைக்கான தடம் என்று. புலிகள் தான் என்னைக் கொன்றனர். அவர்களுக்கு எனது எழுத்துக்கள் பிடிக்கவில்லை. அவர்கள் எமது மக்களுக்குச் செய்வதை நான் விரும்பாதது போலவே அவர்கள் என்னையும் விரும்பாதிருந்தனர்...."

"நான் பரமேஸ்பவரி. ஸ்டான்லி ரோட்டில் என் வீடிருக்கிறது. நான் இங்கு சில 'மிருகங்களால்' அனுப்பப்படுவதற்கு முன் மிருகத்தனமான முறையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டேன். ஆனால், அவர்கள் சிங்கள இராணுவமோ, தமிழ்ப் புலிகளோ அல்ல. அவர்கள் இந்திய இராணுவத்தினர்..."

பரமேஸ்வரியைத் தொடர்ந்து மானிப்பாயைச் சேர்ந்த ராஜேஸ்வரி, கிருஷாந்தியுடன் கதைத்தாள். "என்னை வீட்டிலிருந்து இழுத்துச் சென்று ஒரு முகாமில் வைத்து பலாத்காரப்படுத்தினார்கள். என் தாயினதும், சகோதரிகளினதும் அன்றைய ஓலம் இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அண்மையில் யாழ் நகரை இராணுவம் கைப்பற்றியவுடன் நீங்களெல்லாம் ஆயிரக்கணக்கில் திரும்பிப்போனது எமக்குப் பயத்தையும் கவலையையும் தந்தது. எனினும் பின்னர் அவை படிப்படியாகக் குறைந்தது. ஏனென்றால், ஒரு புதுமாதியான 'கொமாண்டரையும்' பண்பாடான உயரதிகாரிகளையும், மக்களுடன் நட்பாக நடந்துகொள்கின்ற படையினரையும் எம்மால் காணமுடிந்தது. எனினும் அந்த நப்பாசையிலும் ஒரு சரிவு! எப்போது அந்த யாழ் 'கொமாண்டரைக்" கொன்று ஒரு அமைச்சரைக் காயப்படுத்தினார்களோ அன்றிலிருந்து அவர்களில் மாற்றத்தை உணர்ந்தோம். நிலைமைகளும் நாளுக்கு நாள் மோசமடைந்தது. புலிகளும் வடமராட்சியில் தாக்குதலை மீண்டும் தொடங்கியிருந்தார்கள். நாம் மிகவும் கவலைப்பட்டோம். ஏன் எம்மைப்போன்ற நூற்றுக்கணக்கானவர்கள் இங்கே வரவேண்டும்? ஏன் இன்னும் எமது வயதையொத்த இளைஞர்கள் "வேறுபிரதேசத்திற்குச்" செல்ல வேண்டும். அங்கே போகின்றவர்களில் அநேகருக்கு பதின்மூன்றே வயதுதானிருக்கிறது"

கிருஷாந்தியைச் சூழவிருந்த தமிழ்ப் பெண்கள் திடீரென விலகி "சூரியகந்த" காமினிக்கு வழிவிட்டார்கள்.

"வாருங்கள்" உங்களுக்கென்று விஷேட உணவு செய்திருக்கிறோம். இது சிங்கள முறைப்படி செய்யப்பட்டதுதான். என்றாலும் சுவையாக இருக்கும். உங்களுக்குத் தெரியும்தானே. சூரியகந்தையிலிருந்து வந்த எங்கள் எவருக்கும் ஒழுங்கான சமையல் தெரியாது என்று.

அவன் அங்கிருந்த அனைவரையும் அழைத்தான். தமிழ்ப் பெண்கள், ஆண்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என்று எல்லோரையும் அழைத்தான்.

"இங்குள்ள அனைவருக்கும் போதுமான உணவு இங்கிருக்கிறது வாருங்கள்.." என்றழைத்தான்.

உணவருந்த எல்லோரும் உட்கார்ந்தனர். தென்னிலங்கை சமையற் சுவையை எல்லோரும் உணர்ந்துண்டனர். சாப்பிடுகையில் கிருஷாந்தியுடன் கதைத்தான் "இந்த வேண்டப்படாத சுதந்திர இருப்பிடத்தில் தென்னிலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் வந்த சிங்கள இளைஞர், யுவதிகள் இருக்கின்றனர்"

அவர்கள் நீ வந்தது போல் தனியாட்களாகவும், குழுக்களாகவும் இங்கே வந்தவர்கள். கம்பஹா, வென்னப்புவ, கொலண்ணாவ, கட்டான, போன்று கிருஷாந்தி கேள்விப்பட்டதும் படாததுமான ஊரின் பெயர்களை அடுக்கிக்கொண்டே போனான்

நிக்கவெரட்டியவைச் சேர்ந்த ஜெயலத் சொன்னான். "நான் வந்த வழி பயங்கரமானது. எரிக்கப்பட்ட ரயர்களூடே வந்தவன் நான். நான் மட்டுமல்ல என்னைப் போல் பலர் இப்படித்தான் வந்தனர்."

"இங்குள்ள எல்லோருக்கும் உள்ள ஒரே கேள்வியும், கவலையும் இதுதான். ஏன் இந்த வேலைகளைச் செய்தவர்கள் தண்டனைக்குட்படுத்தப்படவில்லை? எம்பிலிப்பிட்டிய மாணவர்களை இங்கே அனுப்பிய 'காக்கி'களுக்கு பதவியுயர்வல்லவா கிடைத்துள்ளது. நிக்கவெரட்டியவிலிருந்து மாணவர்களை இங்கே அனுப்பியவர்கள் இப்போது தேசிய வீரர்களாம்...!! இதெல்லாம் எப்போது தான் முடியும்? எப்போது குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்? இதெல்லாம் நடக்காதவரை உன்னைப்போல் இளம் பெண்கள் இங்கே வந்துகொண்டேயிருப்பார்கள். இது ஓர் அமைதியான இடம். இங்கே எந்தப்பேதங்களோ, வெறுப்புகளோ இல்லை. மதமோ, இனமோ, ஜாதியோ எம்மைப் பிரிக்காதிங்கே. ஆனால் நாமிங்கே நாமாகவே வர விரும்பினோம், எந்தக் 'காக்கிகளும்' எங்களை அனுப்புவதை நாங்கள் விரும்பவில்லை. அது அரச காக்கியாயிருக்கலாம். அல்லது புலிக்கியாயிருக்கலாம்..." என்று மாத்தறையைச் சேர்ந்த ஜெகத் குமார சொன்னான்.

அடுத்தும் எம்பிலிப்பிட்டியைச் சேர்ந்த ஒரு மாணவன் தான் கதைத்தான். அவனின் பெயரை கிருஷாந்தியால் அறிய முடியவில்லை.. "எங்களையெல்லாம் ஒரு தேசிய சின்னமாக ஆக்கப்போகிறார்களாமே..." என்றான் விசனத்துடன்.

"88,89களில் அனுப்பப்பட்ட எங்களை நினைவுச்சின்னமாக இந்த நாடே கொண்டாடப்போகிறதாம். அதற்கு முதல் 83லிருந்தும் எத்தனையோ பேர் இங்கே வந்திருக்கிறார்கள் தானே..."

திடீரென எல்லோரும் கண்ணாடியணிந்த தாடிவைத்த ஒருவருக்கு வழிவிட்டார்கள். "கிருஷாந்தி, இவர் தான் ரிச்சட் டீ சொய்சா.." என்று அறிமுகப்படுத்தினான் காமினி.

கிருஷாந்தி அவரைப் பற்றி தன் தந்தை கூறியதை நினைவு கூர்ந்தாள். எனினும் அவரைப்பற்றி அவளுக்கு அதிகம் தெரியாது.

இந்த 'வேண்ட ப்படாத சுதந்திரத்தின் இருப்பிடத்திற்கு' உங்களை வரவேற்கிறேன். என்னை பொலிஸாரும் இராணுவத்தினருமாய்ச் சேர்ந்து இங்கே அனுப்பி வைத்தனர். சில 'பெரிய மனிதர்கள்' தான் என்னை இங்கே அனுப்ப விரும்பினர். அவர்களில் சிலர் இப்போது இந்த நாட்டிலே இல்லை. மோசமான முறையில் அவர்களும் அனுப்பப்பட்டுவிட்டார்கள். ஆனால் நல்லவேளை அவர்கள் இங்கில்லை. நாம் நடப்பதையிட்டு கவலை கொள்ளாமல் இருக்க முடியாது.."

"எத்தனையோ பேர் ஞாபகப்படுத்தப்பட வேண்டிய வேளையில் எம்பிலிப்பிட்டியவைச் சேர்ந்த 32 பேரின் நிகழ்வுகளையும் தேசிய ஞாபகச்சின்னமாக்கப் போகிறார்களாம். எவையோ எத்தனையோ பேரோ முக்கியமாய் ஞாபகப்படுத்தப்படவேண்டியிருக்க எவையோ ஞாபகப்படுத்தப் படுகின்றன."

துன்பகர, அவல வாழ்வு நிறைந்த அந்த உலகிலிருந்து பலர் தப்பி இங்கு வந்துவிட்டார்கள். கிருஷாந்தி கூட அங்கு தானே தன் எல்லாவற்றையும் இழந்தாள். திடீரென யாரோ கிருஷாந்தியின் தோளில் கைவைத்தார்கள். நிமிர்ந்து பார்த்தாள். அவளின் அம்மாவும், தம்பியும், உறவினரும் நின்றிருந்தனர்.

"நாம் உன்னைத்தான் தேடி வந்தோம். கடைசியாக இங்கே தான் கண்டோம். உன்னைக் காணுவதற்காக வேண்டித்தான் காக்கிக்காரர்கள் எம்மைத் துன்புறுத்தி இங்கே அனுப்பிவைத்தார்களோ என்னவோ"

அவர்களைக்கண்டு அவளின் கன்னத்தில் கண்ணீர். அது ஆனந்தத்தினதும் துயரினதும், பயத்தினதும் கண்ணீர்!

புதியவர்களையும் காமினி உணவருந்த அழைத்தான். கிருஷாந்தியின் தாயை சிரம் தாழ்த்தி கும்பிட்டு வரவேற்றான். பெரியவர்களை அவ்வாறுதான் வரவேற்று மரியாதை செய்யவேண்டுமென்று அவனது பாடசாலையில் அவனுக்குக் கற்பிக்கப்பட்டிருந்தது.

ரிச்சர்ட் இன்னொரு நண்பரை அழைத்து அறிமுகப்படுத்தினார்.. 'இவர் பிரேம கீர்த்தி டி அல்விஸ்' இவர் ஒரு பாடலாசிரியர். இவர் ஜே.வி.பியால் இங்கு அனுப்பப்பட்டவர். இங்கே ஜே.வி.பியால் அனுப்பப்பட்ட நிறையப் பேர் இருக்கிறார்கள்."

"எங்களுக்காக யார்தான் ஒரு நினைவுச் சின்னத்தை வைக்கப்போகிறார்கள். சிலவேளை ஜே.வி.பியினருக்கு அதிகாரம் கிடைத்தால் அவ்வாறு செய்யலாம்.


பிரேமகீர்த்தியைப் பார்த்து புன்னகைத்தவனாக ஜெகத்குமார சொன்னான். "என்னால் மட்டும் படிப்பைத் தொடர முடியுமாக இருந்து சிற்பக்கலையிலுள்ள எனது திறமைகளை வெளிக்கொணர முடியுமாக இருந்திருந்தால் இங்குள்ள எல்லோருக்குமாகச் சேர்த்து ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்கியிருப்பேன். எல்லோரையும் நினைவு கூறும். அதில் எம்முடைய பெயர்கள் மட்டுமல்ல, எந்தப் பிரச்சினை இங்கு எம்மை அனுப்பியதோ அவையெல்லாம் இங்கு பொறிக்கப்பட்டிருக்கும். சமூக, அரசியல், இனப்பிரச்சினைகளென்று மக்களை அநியாயமாக யுத்தத்தில் திளைக்கவைத்துக் கொன்று குவிக்கிற எல்லாம் இங்கு எழுதப்பட்டிருக்கும் சின்னங்களாக ..."

தமிழில் : எம். கே. எம். ஷகீப்..

www.tamilarangam.net



# புலித்தடை புலிகளைப் பலப்படுத்தும்!



**மஸீஹுத்தீன் இனாமுல்லாஹ்**
*தவிசாளர் ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி*

*முன்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அரசியல் அதியுயர் பீட உறுப்பினராக இருந்த இவர் பின்னர் அதிலிருந்து விலகிஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சியில் தவிசாளராக செயற்பட்டுவருகிறார்*

***ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதிமுக்கிய பிரமுகராக இருந்த நீங்கள் ஏன் ஒதுங்கிக் கொண்டீர்கள்?***

விரிவான ஒரு விளக்கத்தை வேண்டி நிற்கும் ஒரு கேள்விக்கு சுருக்கமாக பதில் கூறின் முஸ்லிம் காங்கிரஸ் தனது இலட்சியங்களை விட்டு வெகுதூரம் விலகிச் சென்றமையும் சுயலாபங்களுக்காக சந்தர்ப்பவாத அரசியல் நடாத்தத் தலைப்பட்டமையும் என்று கூறலாம். அதிலும் குறிப்பாக Leader ship ஒரு Dealer ship ஆகிய போது சமூகம் பல அழிவுகளையும் இழப்புக்களையும் சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

***முஸ்லிம் காங்கிரஸ் சுயாட்சி அலகிற்கான போராட்டத்தைக் கைவிட்டதாக நினைக்கிறீர்களா?***

''சமாதானம்'', அதிகாரப் பரவலாக்கம், அரசியல் தீர்வு என்ற கோஷங்களுடன் சந்திரிகா அம்மையாரும், பொதுஜன முன்னணியும் பதவிக்கு வந்தபோது, இலங்கை வாழ் முஸ்லிம்கள் குறிப்பாக வடகிழக்கு முஸ்லிம்கள் வழங்கிய மக்கள் ஆணையும், பிரதிநிதித்துவங்களும் அரசமைக்க தேவைப்பட்ட போது, எந்தக் கோரிக்கை, எந்த உரிமைப் போராட்டம், எந்த சுயாட்சி அலகுக் கோரிக்கையை வைத்து பதவிக்கு வந்தார்களோ, அவற்றை மறந்து விட்டு எந்த முழு மந்திரி, அரை மந்திரி, கால் மந்திரிப் பதவிகளை தூற்றிப் பிரச்சாரம் செய்தார்களோ அவற்றை நிபந்தனைகளாக்கித்தானே இந்த அஷ்ரஃப் - முஸ்லிம் உரிமைப்போராட்டத்தைக் கொச்சைப் படுத்தி, விலை பேசி பழைய சந்தர்ப்ப வாத அரசியலை நடத்தினார்?

***அவர் என்ன செய்திருக்க வேண்டும்?***

எட்டு வருடங்களாக அல்லது ஒரு தசாப்தமாக தாம் இனங்கண்டிருந்த உரிமைப்போராட்டத்தின் பட்டியலையல்லவா முன்வைத்திருக்க வேண்டும்...
குறிப்பாக முன்வைக்கப்படும் அரசியல் தீர்வுத்திட்டத்தில் முஸ்லிம்களின் சுயநிர்ணய அலகு உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என இரு பிரதான கட்சிகளிடம் நிபந்தனை போட்டிருந்தால்... அந்த வெற்றிக்களிப்பை, சுக அனுபவத்தை நீங்களே ஒரு கணம் கற்பனை செய்து பாருங்கள்.
வரலாறு எழுதப்படும் போது....
சந்திரிக்கா அம்மையாரும் நானும் ஒரு நாள் பொழுது விடியும் வரை தாஜ் சமுத்திரா - ஐந்து நட்சத்திர - ஹோட்டலில் செய்து கொண்ட உடன்படிக்கை நம் சமூகத்திற்கு விடிவு தரும் என்று கூறினால், அது ஆவணமாகுமா? வரலாறாகுமா? தொடரும் போராளிகளுக்கு ஒரு மைல் கல்லாகுமா? அந்தச் சந்திப்பு எதனைப் பிரசவித்தது?
எந்த SLMC + PA PACTஐப் பிரசவித்தது?

***அமைச்சுப் பதவிகள் அபிவிருத்தி நிதி சாதனைகள் பற்றி அதிக பிரச்சாரங்கள் நடைபெறுகின்றனவே?***

ஆரவாரமும், பிரச்சாரமும், ஆள் திரட்டலும், விளம்பரங்களும் தோல்வியடைந்து செல்லும் கட்சியொன்றின் இறுதிப் பிரயத்தனங்கள் தானே.

***தென் கிழக்குப் பல்கலைக் கழகம் ஒரு சாதனை தானே?***

யார் மறுத்தார்! இன்று ரஜரட்ட, ஸ்ரீபாத பல்கலைக்கழகங்கள் பிராந்திய ரீதியான பல்கலைக்கழக கல்லூரிகள் ஒரு பொதுவான வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருவது உங்களுக்குத் தெரியாதா? தென் கிழக்கு பல்கலைக் கழகத்திற்கான உண்மையான போராளிகள் அரசியல் வாதிகள் அல்ல. அது ஒரு தேசியப் பல்கலைக்கழகம் என்றும், அதன் பௌத்த பீடம் தீகவாபியில் அமையவிருப்பதாகவும் அஷ்ரஃப் கூறியிருந்தாரே!
திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை அங்கீகரித்து - அவசரகால விதிகளின் கீழ் தயாரத்னாவின் காலப்பிரிவில் (ஐ.தே.க.) ஆக்கிரமிக்கப்பட்ட 250 ஏக்கர் முஸ்லிம்களின் பொன்னாவெளிப்பிரதேசத்தில் தான் இன்றைய தீகவாபி அமைந்துள்ள தென்பதை நம் புத்திஜீவிகள், தென் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் அறிந்து வைத்துள்ளார்கள்.
இவ்வாறான காரணங்களுக்காகத்தான் அப்பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் ஒன்றியம் அமைவதை அமைச்சர் - தடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

***இப்பல்கலைக்கழகம் சமூக, கலாசார சீர்கேடுகளை ஏற்படுத்தும் எனக் கூறப்படுவதில் உண்மை உண்டா?***

நீண்ட கால, தூரநோக்குள்ள அணுகுமுறைகளற்ற இந்தச் செயற்பாடுகள் குறுகிய அரசியல் இலாப நஷ்டங்களை மாத்திரம் உத்தரவாதப்படுத்துகின்றன. அவை பற்றி விளக்கவும் வேண்டுமா?
ஒலுவில் துறைமுகத்தின் கதையைப் பாருங்கள்...

***யுகத்தின் சாதனை எனக் கருதும் ஒலுவில் துறைமுகத்தைச் சூழவும் ஒரு கதையா?***

இலங்கையின் கிழக்குக் கரையில் அதுவும் தென் கிழக்கில் ஒரு துறைமுகம் அமைவது அவசியம் தான். மறுப்பதிற்கில்லை ஆனால், அஷ்ரஃப் கூறுவதைப் பாருங்கள்...
ஒலுவில் துறைமுகம் ஒரு சமூகத்திற்குரியதல்ல. அது தேசியத்துறைமுகம் அம்பாறையிலிருந்தும், பதுளையிலிருந்தும், ஊவாவிலிருந்தும் நாட்டின் இதர பாகங்களிலிருந்தும் மக்கள் தொழிலுக்காக வருவார்கள்.
கடந்த 13.06.1996 கல்முனை வலய தமிழ்த் தினவிழாவில் பேசிய அஷ்ரஃப் ஹாஜியார் 42மைல் விஸ்தீரணமுள்ள முஸ்லிம் அலகு அம்பாறையில் அமையும் என்றார் - ஐயா அதில் தேசிய துறைமுகத்திற்கு எத்தனை மைல்?
கேள்வியாதெனில், ஒலுவில் துறைமுகத்திலிருந்து பெருந்தெருக்கள், நகராக்கங்கள், குடியிருப்புக்கள், களஞ்சியசாலைகள் அமைக்கப்படும் - தேசிய விகிதாசாரத்திற்கிணங்க சமூகங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் போது தென் கிழக்கு கரையோரப்பிரதேசங்களை பேரினவாதிகளுக்கு, சிங்கள குடியேற்றங்களுக்கு தாரைவார்ப்பதாக அமையமாட்டதா?
நீண்ட கால சமூக, கலாசார, பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் ஏற்படாமலிருக்க அஷ்ரஃப் எத்தகைய உத்தரவாதங்களை வைத்துள்ளார்?
நிச்சயமாக அவருக்கும் தற்போது அவருடனுள்ள நாற்பது பட்டாளங்களுக்கும் குறுகிய அரசியல் பொருளாதார இலாப நஷ்டங்கள் தான் அவசியம்.
இத்தகைய நடவடிக்கைகள் தமிழர்களின் பகைமையையும் நாம் நிரந்தமாக சம்பாதித்துக்கொள்ள வழிவகுக்கும், ஏற்கெனவே நாம் இவர்களால் இழந்தவை போதும்.
வாயளவில் தமிழ் முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றிப் பேசினால் மட்டுமே போதாது...
காலி துறைமுகம் ஹவாலா விவகாரம் 02.11.1995 முஸ்லிம் போராட்டத்தை முழு நாளும் பாராளுமன்றத்தில் சிந்திக்க வைத்தது. ஒலுவில் துறைமுகம் எத்தனை நாட்களை விவாதத்திற்கு எடுக்குமோ....

***தமிழர்கள் ஏன் எம்மைப் பகைத்துக் கொள்வார்கள்?***

ஏற்கெனவே (அம்பாறையில்) தென்கிழக்கில் 4 வீதமாக இருந்த சிங்களவர்கள் இன்று 40 வீதமாவதற்கு திட்டமிட்ட குடியேற்றங்கள் வழிவகுத்துள்ளதை அறிவீர்கள் தானே!
வடகிழக்கில் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுமார் 400,000 ஏக்கர் விவசாயக்காணிகளில் 74% தேசிய விகிதாசாரத்திற்கேற்ப சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதையும், வழங்கப்பட்டு வருவதையும் அறிவீர்கள் தானே!
தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் இத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளின் பேரில் ஆக்கிரமிக்கப்படுவதைத் தடுப்பதற்காகத் தானே போராளிகள் கிளர்ந்துள்ளனர்.

விகிதாசார மாற்றங்கள் முஸ்லிம்களது அரசியல் தனித்துவத்திற்கும் முக்கியத்துவத்திற்கும் சாவுமணியாக மாத்திரமின்றி சகோதர தமிழ் மக்களையும் வெகுவாகப் பாதிக்காதா?

***அப்படியாயின் அபிவிருத்திப் பணிகளை நிறுத்துவதா?***

நிச்சயமாக இல்லை - நேரடி, மறைமுக, நீண்ட கால பின்விளைவுகளை சிறுபான்மையினரின் உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தாத வகையில் உத்தேசித்து இனங்காணப்பட்ட வரையறைகளுக்குள்....
யாழ் பல்கலைக்கழகம் உட்பட பாடசாலைகள் ஏன் இன்று பூரணமாகச் செயற்படுவதில்லை. புலிகளும் போராளிகளும் அழிந்து போன யாழையும் வடகிழக்கு தமிழ்ப் பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்யத்தெரியாமலா, பூரண அழிவை நோக்கியா போராடுகிறார்கள்?
முதன்முதலில் தமிழ் மொழி மாநிலம் அடையாளம் காணப்பட்டு தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு அதிகாரங்களையும் அலகுகளையும் வழங்ககுவது தான் இன்றைய தேவை. தமிழர்கள் ஜனநாயகப் போராட்டத்தில் நம்பிக்கையிழந்ததால் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். முஸ்லிம்களாகிய நாம் ஜனநாயக அரசியல் போராட்டத்தில் குதித்த போது ஏன் இந்த நபர் எமது இலட்சியப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தினார்.
இது வெறும் ஆதங்கம் மாத்திரமல்ல, இளைஞர்கள் தியாகிகள் மத்தியில் விரக்தியையும், வெஞ்சினத்தையும், பெரும் வஞ்சத்தையும் ஏற்படுத்திய சமூகத்துரோகம் என நான் கருதுகிறேன்.

***தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடுகளுக்கப்பால் நின்று தான் செயற்படுவதாகவும் அந்த உறவைக் கட்டியெழுப்புவதற்காகவே உழைப்பதாகவும் அமைச்சர் முதல் அகதி யின் கதையில் கூறியுள்ளாரே?***

தமிழர்களது உரிமைப்போராட்டம், வட்டுக்கோட்டைப் பிரகடனம் இப்படி தமிழ் ஈழப்போராட்டமாக வளர்ந்தமை தான் இன்று சிறுபான்மையினருக்கான அதிகாரப்பகிர்வு, அதிகாரப்பரவலாக்கம் என தேசிய சர்வதேசிய மட்டத்தில் உணரப்படுவதற்கு பின்னணி என்பதனை ஏற்றுக்கொள்வீர்கள் தானே!
விடுதலைப் புலிகள் மேல் தமிழ் மக்கள் வைத்துள்ள அன்பும், மரியாதையும், நம்பிக்கையும் உங்களுக்குத் தெரியும் தானே!
''பிரபாகரனின் கழுத்தை நெரித்துக் கொண்டு நான் மரணிப்பேன்''
''பிரபாகரனை குர்பான் கொடுப்பதாக மினாவில் நிய்யத் வைத்துக்கொண்டேன்''
''புலிகள் மிருகங்கள் அவர்களோடு பேச முடியாது''
''புலிகளை அழிப்பதே ஒரே வழி''
புலிகளுடன் போராட 10,000 வீரர்கள் கொண்ட ''ஜிஹாத்'' ரெஜிமண்ட் தயாராக்குவேன்''
இவையெல்லாம் தலைவரின் கொள்கைகள் என்றால் தமிழ் முஸ்லிம் உறவு வளருமா?
நீ ஒரு தனி நபர், கொள்கைத் தெளிவுகள் இல்லாமல் இலட்சியவாதிகளையும், சிந்தனையாளர்களையும் மார்க்க அறிஞர்களையும் அலட்சியப்படுத்திவிட்டு ஓரம் கட்டிவிட்டு கடந்த ஒரு தசாப்தமாக எத்தனை தமிழ் முஸ்லிம் கலவரங்களை உருவாக்கியுள்ளாய்?
இன்று கட்சித்தலைவரும் செயலாளரும் குழுக்களின் பிரதித்தலைவரும் பாராளுமன்றத்திற்கு உள்ளும், புறமும் இவ்வாறுதானே கதைக்கிறார். நம் சமூகத்தை ஏன் அழிவுப்பாதையில் இட்டுச் செல்ல விரும்புகிறீர்கள்?
எனக்கு அமைச்சர் சொன்ன முதல் அகதியின் கதை தெரியாது. ஆனால்,
கண்ணகி சபதம், மங்கம்மா சபதம் போன்று ''மகேஷ்வரியின் சபதம்'' என்று ஒரு கதை தெரியும்.
''ஹிஜ்ரத்'' என்ற புனிதமான பதத்தை இன்று பஞ்சமா பாதகங்களில் சிலதை செய்து விட்டு தப்பி ஓடுபவர்களும் பயன்படுத்துவதால் நம் சன்மார்க்கத்திற்கே ஆபத்து வந்துவிட்டது.
மன்னிக்கவும், நான் ஒரு காவியத்திற்குள் சென்று விட்டேன். அது பயந்தோடிய பயணமல்ல வெறுத்தேகிய பயணம்.

***சிங்களக் கட்சிகளுடனான ஸ்ரீ.ல.மு.கா. உறவு பற்றிக் கூறினீர் கள், சிறுபான்மைத் தமிழ்க்கட்சிக ளுடன்....***

முதன் முதலாக அஷ்ரஃப் தனது புலிகள் பற்றிய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவேண்டும்.
தேசிய இனப்பிரச்சினையில் நடுநிலையான ஒரு போக்கையே முஸ்லிம்கள் வகிக்க வேண்டும்.
வடக்கிலும், கிழக்கிலும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு இரு சமூகங்களும் ஒன்றாகவே வாழ வேண்டியிருக்கிறது.
''அஷ்ரஃபிடம் நிலையான கொள்கைகள் கிடையாது'' என தமிழ்க் கட்சிகள் பல தடவைகள் கூறியுள்ளன.
1993 ஜனவரி முஸ்லிம் கட்சி இதழின் 4ம் பக்கத்தைத் தேடிப்படியுங்கள்.
லூஸியன் ராஜ கருணாநாயக்கா கறுப்பு வெள்ளிக்கிழமை (1992.10.23) பற்றிய அஷ்ரஃபின் நிருபர் மாநாட்டில் கலந்து கொண்டு நியாயமான பல கேள்விகளை எழுப்பினார். நானும் அங்கு இருந்தேன். எதற்குமே அஷ்ரஃப் பதிலளிக்க முடியாத நிலையில் தவித்தார்.
அதற்கடுத்த ஞாயிறு Island ல் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். ''எந்தவொரு கேள்விக்கும் திறமையாக அஷ்ரஃப் பதில் கூறவில்லை. முன்னுக்குப் பின் முரணான அவரது கருத்துக்களைப் பார்க்கும் போது கொள்கைத் தெளிவுகள் இல்லாத அஷ்ரஃப் முஸ்லிம் சமூகத்திற்கு அல்ல, எந்தவொரு சமூகத்திற்கும் தலைமை தாங்கத் தகுதியற்றவர்.''

***விடுதலைப் புலிகள் பற்றிய முஸ்லிம் காங்கிரஸ் நிலைப்பாடுகள் என்ன?***

நிலைப்பாடுகள் அல்ல. ஒரே நிலைப்பாடு 'அழிப்பது''
LTTE Should be wiped out.
அரசாங்கம் சிங்களப் பேரினவாத அரசுகள் - யதார்த்தத்தை தெரிந்து கொண்டு படைகளையும், ஆயுதங்களையும் இயன்றவரை - சிங்கள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டு - இதைச் சொல்லலாம்.
அஷ்ரஃப் அல்லது ஹக்கீம் சொல்லலாமா! ஏற்கெனவே இவர்களது நிலைப்பாடுகள் விளைவித்த அழிவுகள் இழப்புக்கள் போதாதா?
''விடுதலை'', ''உரிமை'' போராட்டங்கள் பற்றி அரிச்சுவடியிலிருந்து இவர்கள் கற்க வேண்டும்.

***புலிகளுடன் முஸ்லிம்கள் பேச வேண்டுமா?***

தொடர்ந்து சந்தர்ப்பவாத காட்டிக் கொடுக்கும் அரசியல் லாபங்கள் தேட வேண்டுமென்றால்,
யதார்த்த நிலைகளை மறந்து கண்களை இறுக மூடிக்கொண்டு சமூகத்தை விற்று வயிறு வளர்க்க வேண்டுமென்றால்,
தொடர்ந்து அறியாமையையும், கையாலாகாத்தன்மையையும் அரசியல் ஞான சூன்யத்தையும் அம்பலப்படுத்திக்கொள்ளத் தயாரில்லை என்றால்,
நிச்சயமாக தேவையே இல்லை.

***அரசாங்கம் புலிகளைத் தடை செய்வது பற்றி....***

தடை செய்வதன் மூலம் நிரந்தர சமாதானத்திற்கான கதவு நிரந்தரமாகவே மூடப்படும். தடை செய்வதாக வைத்துக்கொள்வோம்..! புலிகளை கைது செய்து கூண்டுகளில் போட்டு விடுவார்களா? அவர்களது சர்வதேச செல்வாக்கை முறியடித்து விடலாமா?
கடந்த ஒகஸ்ட் மாத இறுதியில் இலங்கை வந்த பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் என்ன சொன்னார். 'Individual right' தனிமனித உரிமையின் அடிப்படையில் பாரம்பரியமாக பிரித்தானியா கைக்கொள்ளும் சட்டங்களின்படி உரிமைப் போராளிகளை தடை செய்ய முடியாது -புலிகளின் விடயத்தில் விஷேட வழிமுறைகளைப் பிரித்தானியா கையாளப் போவதில்லை. கனடாவில் அவுஸ்திரேலியாவில், ஐக்கிய அமெரிக்காவில், ஜெர்மனியில், சுவிஸ்ஸில்...இப்படி எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் விடயம் அவ்வாறுதான்...
சவூதி அதிருப்தியாளர் அல்மஸாரின் செயற்பாடுகளை மட்டுப்படுத்த அத்தகைய பாரிய பொருளாதாரக் கட்டுப்பாடுகளை உடைய பிரித்தானியாவால், முடியவில்லை. நாடுகடத்த முடியவில்லை. இலங்கை விடயத்தில் இவர்கள் புதிய கொள்கைகளை உருவாக்கி அமுல் படுத்துவார்களா?
தடைசெய்வதாயின் இப்போதைய நிலைமையை விட பிரச்சினை சிக்கலாவதோடு போராளிகளது பலம் ஓங்கவும் சாத்தியப்பாடுகள் உள்ளன.

*நேர் காணல்:*
N.A.M குலாம்
M.B.M றிஸ்வான்

***அடுத்த இதழில் முடியும்...***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
சரிநிகர் நவ. 07, - நவ. 20, 1996,



# பாலுக்கு பாலகன் வேண்டி அழுதிட...

— சௌ.

நாங்கள் எங்கள் சமூகத்தில் அன்றாட வாழ்வில் கீழ் வரும் சிறுவர்களைக் காண்பதில்லையா என யோசித்துப் பாருங்கள்.

கல்வியை இடையில் கைவிட்டு லொத்தர் சீட்டுக்களை தெருவோரம் விற்றுச் செல்லும் சிறுவர், சிறுமியர்.

பரிதாபமாகப் பாடியபடி பஸ்சினுள் ஏறி பிச்சை கேட்கும் சிறுவர், சிறுமியர்.

சுற்றுலாப் பயணிகளின் பின்னே சுபிங்கம் பேனா போன்ற பொருட்களுக்காக கையேந்தும் சிறுவர் சிறுமியர். பாடசாலைக்குப் போகாமல் கல்லுடைக்கும் சிறுவன். சைவ சிற்றுண்டிச் சாலைகளில் வெறும் டிப்சாகக்காகத் தொழில் புரியும் சிறுவர்கள்.

சந்தையில் இருந்து திரும்பும் எஜமானி அம்மாவின் பின்னர் வரும் சுமக்க முடியாத சுமையை சுமந்து வரும் சிறுமி.

தான் வேலை பார்த்த இடத்தில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதால் கருவுற்றுப் பெற்ற பிள்ளையுடன் தெருவோரம் பிச்சைக்கேட்கும் குமரியோ, சிறுமியோ என்று சொல்லமுடியாத பிள்ளை.

பிள்ளைகளை பெறுமதி மிக்க சொத்தாக கருதும் ஒரு நாட்டில் இத்தகைய கொடூரமும் சுரண்டலும் எப்படி நிகழ்கின்றன.

பளபளக்கும் கார்களினுள் இருந்து வீசப்படும் யோகட் கோப்பைகளை பொறுக்க எங்களது ஏழைச் சிறுவர்கள் ஏன் ஓடுகிறார்கள்...?

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஒரு ஆராய்ச்சியாளரை பார்த்து வீதியோரச் சிறுவன் ஒருவன் கேட்கிறான்.

''எங்களைப் பற்றி எழுதி எங்களைப் படம் எடுத்துப்போட்டு என்ன செய்யப் போகிறீர்கள்? நாங்கள் எங்கும் இருக்கிறோம்'' பதின்மூன்று வயதுச் சிறுவனின் விரக்தி தோய்ந்த முதிய வார்த்தைகள் உங்களது நெஞ்சில் நோவை உண்டாக்க வில்லையா?

இன்னும் வகைமாதிரிக்கு சில சம்பவங்களை உங்களுக்கு கூறியே ஆக வேண்டும்.

(இங்கு பாவிக்கப்படும் பெயர்கள் மட்டும் கற்பனை)

சந்திரா என்னும் இருபத்திரண்டு வயதுப் பெண் சின்னையா குடும்பத்தில் வேலை செய்து வந்தார். அந்தக் குடும்பத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அவள் அந்த வீட்டுக்கு பால் கொடுக்க வரும் முத்துவுடன் கொண்டிருந்த தொடர்பினால் கருவுற்றாள். முத்துவோ ஏற்கெனவே திருமணமானவன் என்பது அவளுக்குத் தெரியாது. விளைவு அவள் தெருவில் விடப்பட்டாள். தனக்குப் பிறந்த மகனுக்கு சந்திரன் என்று பெயரிட்டாள். பிச்சைக்காரியாக அவளால் காலம் தள்ள முடியவில்லை. தன் மகனை கொல்லவும் யோசித்தாள். பின்விளைவுகளுக்கு பயந்து அதனைக் கைவிட்டாள். அவளுக்கு தெரிந்த பெண்மணி அவளுக்கு மத்தியகிழக்கில் வேலை எடுத்துத் தருவதாக வாக்களித்தாள். 1 1/2வயதுக் குழந்தையான சந்திரனை என்ன செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை.

குழந்தை மந்தமாகவும் வளர்ச்சி குன்றியதாகவும் இருந்தது. சந்திரா குழந்தையை முறையாகக் கவனிப்பதில்லை. நோய் வந்து மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது குழந்தையை ஒழுங்காக ஒவ்வொரு தவணையும் கொண்டு வருமாறு மருத்துவர் கூறினார். சந்திரா அதனைச் செய்யாமல் தவிர்த்துக் கொண்டாள். குழந்தை இன்னும் மோசமான நிலையை அடைந்தது. கடும் காய்ச்சலுக்கு உட்பட்டது. இம்முறை அவள் மருத்துவமனைக்குச் சென்றபோது சந்திராவை நினைவில் வைத்திருந்த மருத்துவர் ''நான் சொன்னபடி ஏன் ஒழுங்காகக் கொண்டு வரவில்லை, இந்தக் குழந்தை செத்துப்போவதில் உனக்கு விருப்பமோ'' என்று கேட்டார்.

அதற்கு சந்திரா சொன்ன பதில் 'ஆம்' என்பதாகும். அவள் மத்திய கிழக்கு போவதன் முன் தனது மகனை எமனிடம் கொடுத்துவிட விரும்பினாள்.

சந்திரன் என்னும் இந்தச் சிறுவனின் இந்தக் கதிக்கு யார் காரணம்?

000

கண்மணி தேங்காய் பிடுங்கும் தொழிலாளியான கந்தப்புவின் ஆறாவது மகள். அவள் அப்பன் தேங்காய் பிடுங்கும் பொழுது ஓர் நாள் மரத்தில் இருந்து விழுந்து இறந்து போனான். அம்மாவோ தோட்டக்கூலி. கண்மணியோ ஐந்து பிள்ளைகளில் கடைக்குட்டி. அந்த ஊர் பள்ளித் தலைமையாசிரியர் ஏகாம்பரப் பிள்ளை கண்மணியை வளர்ப்பு பிள்ளையாகப் பெற்று தம்முடன் வைத்துக் கொண்டார்.

பாடசாலைக்குப் போவது கண்மணிக்கு கனவாகிப்போனது. ஏகாம்பரப்பிள்ளையின் சின்னப்பிள்ளைகளை பாடசாலைக்கு கூட்டிச்செல்வதும் பின் அழைத்து வருவதுமே அவளது முக்கிய வேலைகளில் ஒன்று. பள்ளி செல்லும் பிள்ளைகளை ஏக்கமுடன் பார்க்கும் கண்மணியின் நிலைக்கு யார் காரணம்?

ஏகாம்பரப்பிள்ளையின் வீட்டில் ஒரு நாள் பிறந்தநாள் விழா நடந்தது. கண்மணி ஆசையை அடக்க மாட்டாமல் ஒரு கேக் துண்டு எடுத்து தின்று விட்டாள். திருமதி ஏகாம்பரப்பிள்ளை கண்மணி செய்த ''திருட்டு''க்காக அவளைக் கட்டி வைத்து நாவில் மிளகாய்த்தூளை தடவினாள்.

சின்னஞ்சிறு கண்மணியின் நாவும் நெஞ்சும் எரிந்ததை உங்களால் கற்பனை பண்ணிப்பார்க்கவாவது முடிகிறதா?

000

சித்திராவுக்கும் சுந்தருக்கும் மூன்று பிள்ளைகள் குடும்பமோ வறுமையால் தின்னப்படுகிறது சுந்தரோ முடாக்குடியன். ஏழைக்குடும்பத்தின் எதிர்பார்ப்புக்களோ எண்ணில் அடங்காது. ஒருநாள் சித்திரா மத்திய கிழக்குக்கு போய்விட்டாள்.

சுமதிக்கு பதின்மூன்று வயது ரதனுக்கு பதினொரு வயது. ஜீவனுக்கு நான்கு வயது. பிள்ளைகள் தந்தையுடன் தனித்து விடப்பட்டனர்.

சுமதியும் ரதனும் ஜீவனைப் பார்த்துக் கொண்டார்கள். பாடசாலை செல்லும் போது ஜீவனை பாட்டியுடன் விட்டுச் செல்வார்கள். சமையலையும் தங்கள் சின்னஞ்சிறு கைகளாலேயே செய்வார்கள்.

ஒரு நாள் சுமதியின் ஆசிரியர் சுமதியின் பாட்டியை தன்னை வந்து சந்திக்குமாறு கூறினார்.

எனது அம்மாவுடன் இரவில் அப்பா முன்பு செய்து கொண்டிருந்ததை இப்போது இரவில் என்னுடன் செய்கிறார் என சுமதி தனது பள்ளித்தோழியுடன் இரகசியமாக உரையாடியது ஆசிரியரின் காதுகளை எட்டியதே ஆசிரியர் பாட்டியை அழைத்ததன் காரணம்.

அதன் பிறகு சுமதியால் அந்தப் பாடசாலையில் படிக்க முடியவில்லை. அவமானமே காரணமாகும்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் பாட்டி சுமதியையும், ஜீவனையும் தன்னுடனேயே வைத்துக்கொண்டாள். இதனால் ஆத்திரமடைந்த சுந்தர் ரதனை பாடசாலையில் இருந்து விலக்கி தனது வேலைகளுக்காக வைத்துக்கொண்டான். ஒரு நாள் ரதன் தந்தை சொன்ன வேலையை செய்யாமல் சிறிது பணத்தைத் திருடிக்கொண்டு படம் பார்க்கச் சென்றுள்ளான். படம் முடிந்து வந்த பொழுது சுந்தர் தனது மகனை ஈவிரக்கமின்றி நையப்புடைத்தான். ரதனின் கூக்குரல் எவரினதும் காதுகளிலும் கேட்கவேயில்லை.

மாத்தறையில் ஒரு கிராமத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள். அண்மையில் பெல்ஜியம் நாட்டுப் பிரஜை ஒருவரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டனர். பாடசாலைச் சிறுவர்களான அவ்விருவரையும் மாத்தறை 'காசல்' ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றே இச்செயலைப் புரிந்திருந்தான் அப்பெல்ஜியப் பிரஜை. அவ்விரு சிறுவர்களுக்கும் நீதி கிடைக்கச் செய்வதற்காக 'காசல்' ஹோட்டலின் உரிமையாளர் முயன்றபோது ஒக்டோபர் 26ம் திகதி சில காடையர்களால் அவ் உரிமையாளரும் அவரது மனைவியும் தாக்கப்பட்டனர். இந்த பெல்ஜியம் நாட்டவர் இலங்கையில் முதலீட்டு வர்த்தகம் செய்பவராகையால் உடனடியாகவே விடுவிக்கப்பட்டார். இதற்கு யார் காரணம்?

ஹிக்கடுவ, கல்கிசை, நீர்கொழும்பு, காலி போன்ற பல இடங்களில் இலங்கைச் சிறுவர்கள் வெளிநாட்டவர்களின் காம இச்சைக்கு உள்ளாகி வருவது இன்று சாதாரண செயலாக கருதப்பட்டு வருகிறது. இதற்கு யார் காரணம்?

மேலே காட்டப்பட்ட சம்பவங்கள் போல் இன்னும் ஓராயிரம் துயரக்கதைகள் உள்ளன. அவற்றின் துயரக்கதாநாயகர்கள் சிறுவர்களும் சிறுமியர்களுமே! அதிலும் ஏழைச் சிறார்களே அனேகம்.

அழகான பழக்கடை ஒன்றினுள் பெட்டியுள் அழுகிக் கிடக்கும் பழங்கள் போலவே இந்தச் சிறுவர்களும் எமது நாட்டில் வாழ்கிறார்கள்.

1. சிறுவர்களை வேலைவாங்கல்.
2. சிறுவர்களை கல்விச் செயற்பாடுகளில் இருந்து நீக்குதல்
3. சிறுவர்களை அடித்துத் துன்புறுத்துதல்.
4. சிறுவர்களை பாலியல் இச்சைகளுக்குப் பயன்படுத்துதல் போன்ற பொதுவான அம்சங்களை இங்கு நாங்கள் அவதானிக்க முடிகிறது.

குடும்பத்தில் நிலவும் வறுமை சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் என்பன சிறுவர்கள் வேலைக்கு அனுப்பப்படுவதற்கு காரணமாகின்றன.

வறுமையானது குடிப்பழக்கம் போன்ற காரணங்களாலும் திருப்தியற்ற வாழ்க்கையால் பெற்ற வக்கிரக் குணத்தாலும் பெற்றோர்கள் பிள்ளைகளை அடிக்கவும் பாலியல் இச்சைகளுக்கு உட்படுத்தவும் முற்படுகின்றனர்.

மேலும் திருமணமாகாமலே குழந்தை பெறும் பெண்கள் சமூக ஒழுங்குகளில் இருந்து பிரிந்தவர்களாகக் கணிக்கப்பட்டு விலக்கப்படுவதனாலும் ஏராளமான பிள்ளைகள் சமூகத்தின் கண்களில் தீண்டத்தகாதவர்கள் ஆகிறார்கள்.

இவ்வாறு சிறுவர்கள் அவர்கள் முற்றிலும் எதிர்பாராத அசாதாரணமான சூழ்நிலைகளில் அகப்பட்டுச் சீரழிந்து போகிறார்கள்.

சிறுவர் பூங்காக்களிலும் ''சத்துட்டு உயன''க்களிலும் பஞ்சு மெத்தைகளிலும் இந்த உலகத்தின் சிறுதொகைச் சிறுவர்கள் களித்து இருக்கையில் தெருவோரம் பாலுக்கு பாலகர் வேண்டி அழுவது ஏன்?

# வன்முறையுள் சிக்குண்டு தவிக்கும் வன்னி மக்கள் !

## மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள்(யாழ்)அறிக்கையிலிருந்து

அண்மையில் இடம் பெற்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்பான அறிக்கைகளில் வன்னிப்பிரதேசம் பற்றி, அதன் நிலவரம் பற்றி மிகக் குறைந்தளவிலேயே எழுதப்பட்டிருக்கிறது. இராணுவத்தினருக்கும், புலிகளுக்கும் இராணுவ கேந்திர முக்கியத்துவம் நிறைந்த பகுதி வன்னியாகும். இரு தரப்பினரும் தமது சொந்த நலன்களுக்காய் அப்பாவிப் பொது மக்களை கஷ்டங்களுக்குள்ளாக்குவதும் இப்பிரதேசத்தில் தான். முடிவுறாத் துன்பமே இங்கு வாழ் மக்களின் பிழைப்பென்றாயிற்று. யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களென்றும், வன்னியை சொந்த வாழ்விடமாகக் கொண்டவர்களென்றும் நிறையப்பேர் பல குழுக்களாக இருக்கின்றனர். இதில் கிட்டத்தட்ட 1,50,000 பேர் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்கள். 2,50,000க்கு அதிகமானோர் வன்னியை வாழ்விடமாகக்கொண்டவர்கள். மக்களின் அன்றாட நடவடிக்கைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் எல்லாம் புலிகளாலும் இராணுவத்தினராலும் மீறப்படுகின்றன. மக்கள் அத்துமீறல்களுக்குட்படுத்தப்படுகிறார்கள். நடமாடும் சுதந்திரம் கூட பறிக்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் யாழிலிருந்து புலம்பெயர்ந்தவர்களின் நடமாட்டங்கள், நடவடிக்கைகள் யாவும் புலிகளால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. மக்கள் புலம்பெயர்வதற்கான முக்கியப் பயணப்பாதையான யாழ் குடா, வன்னி கடற்பாதை புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. அவர்களால் நடத்தப்படும் படகுச் சேவையானது மக்கள் மீது அழுத்தம் தெரிவிப்பதற்கான முக்கிய ஊடகமாகப் பயன்பட்டது. இது தவிரவும் இராணுவத்தின் மீதான அச்சமும் மக்களிடையே எழுந்திருந்தது. கிளிநொச்சி தாக்குதல் இடம் பெற்ற காலங்களில் புலிக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து மக்கள் புலம் பெயர்வதை இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. புலிகள் தான் பயணப்பாதையை மூடித்தடுத்து வைத்திருப்பதாக இராணுவ அறிக்கைகள் கூறுகின்றன. எனினும் அதற்கு மாறாக இராணுவமும் பயணப்பாதையை தடுத்து வைத்திருக்கிறது. வவுனியாவை வந்தடைவதற்குள் இராணுவத் தரப்பிலிருந்து சொல்லொண்ணாத் துயரங்களை அப்பாவிப் பொதுமக்கள் அனுபவிக்கிறார்கள். அடி, உதை, மனிதாபிமானமற்ற எதிர்ப்புக்கள் எல்லாம் இராணுவத்தினரிடமிருந்து மக்களுக்கு தவறாமல் கிடைக்கின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் எல்லாம் தமிழ் மக்கள் இந்நாட்டின் இரண்டாந்தரக் குடிமக்களே என எண்ணவைக்கிறது. அவர்களின் சுயத்துவம், தன்மானம் எல்லாம் எந்நேரத்திலும் எவராலும் பறிக்கப்படக்கூடிய ஒன்றாகப் போய்விட்டது.

குண்டுப்பொழிவும் இடங்கள் அதிக அகதி மக்களைக் கொண்டு காணப்படுகிறது. கிளிநொச்சியில் எறியப்பட்ட ஷெல்கள் வைத்தியசாலையைக் கூட விட்டு வைக்கவில்லை. எல்லாம் மக்கள் வாழ்விடங்களில்தான் இடம் பெறுகின்றன. இவையெல்லாம் புலிகளை அழிப்பதைவிட மக்களைப் பயங்கரவாதிகளாக்குவதற்காகவே மேற்கொள்ளப்படுவதாகக் கணிக்கவேண்டியுள்ளது. குறிப்பிட்ட தாக்குதல இலக்குகளைவிட்டு வேறு இடங்களுக்கு ஷெல்கள் ஏவப்படுகின்றன. இவ்வாறான ஒரு தாக்குதல் சத்ஜயவின் போது மேற்கொள்ளப்பட்டதால் கிளிநொச்சி வைத்தியசாலை பாரிய சேதத்துக்குள்ளாகியது. இச்சம்பவம் ஊரடங்கு பிரகடனப்படுத்தப்பட்டு, மக்களை வணக்கஸ்தலங்களுக்கு செல்லுமாறு பணிக்கப்பட்டபின்னரே இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுதவிர வவுனியா நகருக்குள்ளும் சில சம்பவங்கள் இடம் பெறுகின்றன. இவை இராணுவத்துடன் கூட்டுச்சேர்ந்து இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் புளொட், ரெலோ போன்ற தமிழ் இயக்கங்களால் இடம் பெறுகின்றன. சமூக நல சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கெதிரான பல நடவடிக்கைகள் இவர்களால் இடம் பெற்றிருக்கின்றன. ஒரு கொலைக்கும் இவர்கள் பொறுப்பாய் இருந்திருக்கிறார்கள். இவர்களால் குறிப்பாய் புளொட்டாலும் C.S.V.(Counter Subversive Unit என்றழைக்கப்படும் ஒரு பிரிவினரும் வவுனியாவில் இரண்டு சித்திரவதை முகாம்கள் நடத்தப்பட்டும் வருகின்றன. இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள அகதி முகாம்கள் சிறைச்சாலைகளை விடவும் மோசமான நிலையில் உள்ளன. அடிப்படை மருத்துவ வசதிகள் கூட இல்லாத நிலையில் நோய், போஷாக்கின்மை, மனப்பாதிப்புகளுடன் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசம் உள்ளன. அரசு அனுப்பும் உணவு நிவாரணங்கள் போதியனவாக இல்லை. அவை உரிய நேரத்திலும் கிடைப்பதில்லை. உணவு விநியோக நிலையங்களுக்கு வந்ததும் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே எல்லாம் இடம் பெறுகின்றன. அவர்கள் மக்களின் தேவைகளை விட அவர்களின் இருப்புகளில் கூடிய அவதானம் கொண்டுள்ளன. ஏப்ரலில் யாழ் முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் சிறிது காலத்திற்கு புலம் பெயர்ந்தவர்களுக்கான உணவு விநியோகத்தை அரசு நிறுத்தியிருந்தது. கிளிநொச்சிக்கு கோரியிருந்த 40% மான அதிகரித்த மருந்துகளின் தேவையை அரசாங்கம் முற்றாகவே மறுத்துவிட்டது. பாதுகாப்பு அமைச்சின் மருந்துவக்குழுவினர் வன்னிக்கு தேவைப்படுகின்ற 75%மான மருந்துப்பொருட்களின் விநியோகத்தை குறைத்துள்ளனர்.

இதற்கு மருத்துவ வட்டாரங்களிலிருந்து எதுவித எதிர்ப்புக்களும் கிளம்பவில்லையெனத் தெரிகிறது. கிளிநொச்சித்தாக்குதலின்போது காயப்பட்ட அப்பாவி மக்களுக்கு அவசர சிகிச்சை செய்வதற்கென்றே மருந்துகள் கோரப்பட்டிருந்தன. இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டதன் பின்னரே மருந்துகள் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. கோரப்பட்டிருந்த மருந்துப் பொருட்களில் பாம்புக்கடிக்குத் தேவையான மருந்தும், தண்ணீரைச் சுத்தப் படுத்தப் பயன்படும் திரவமும் உள்ளடங்கும்.

எல்லாவற்றினதும் முடிவாக வன்னி இப்போது நோய்களின் உறைவிடமாகியுள்ளது. சிசு மரண வீதம் அங்கு அதிகரித்திருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன. யுத்தத்தின் விளைவாக இடம் பெயர்ந்தவர்களின் விடயங்கள் தொடர்பாக அரசு எதையும் செய்ய விரும்பாத அல்லது செய்ய முடியாத நிலையிலுள்ளது என்பது நடப்புக்களில் இருந்து தெளிவாகத் தெரிகிறது.

வன்னியில் வாழ்தல் தொடர்பாய் தோன்றியிருக்கும் அச்சநிலை பயங்கர வாதம் என்பவற்றிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காய் மக்கள் இந்தியாவை நோக்கி நகரத் தொடங்கியிருக்கிறார்கள். இராணு

→10

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இது கவிதையல்ல!

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு ஒக். 30 அன்று 6 வருடங்கள் பூர்த்தியாகின்றன....



இது கவிதையல்ல;
கற்கள்
இதயத்திலிருந்து
இதயத்திற்கு வீசும்
கவிதைக் கற்கள்
பாலஸ்தீனப் போராளியின்
கையிலுள்ள
கல்லைப் போல்
காயப்படுத்தும் - உன்
உடலையல்ல
உள்ளத்தை!

இழந்த மண்ணுக்காய்
எங்கும் இதயத்தின்
ஏக்கப் பெருமூச்சுக்கள்!
இப்போது நினைத்தாலும்
இதயம் சுடுகிறது - இல்லை
இதயம் எரிகிறது.
அக்டோபர் முப்பதில் - நீங்கள்
அன்று வைத்த நெருப்பு
இன்றும் எரிகிறது.
இப்போது நினைத்தாலும்
இதயம் எரிகிறது.

என் பிரிய நண்பர்களே!
அக்டோபர் முப்பது
அன்றைய தினம் - உங்கள்
நெஞ்சிலே உள்ளதா?
எம் வாழ்வுச் சிற்பமதை
சிதைத்த சிற்பிகளே!
அன்றைய தினம் - உங்கள்
நெஞ்சிலே உள்ளதா?
அக்டோபர் புரட்சியில்
அரிச்சுவடி படித்து
வீரமாய் விளைந்த நீங்கள்
சோரம் போன - அந்த
அக்டோபர் முப்பது -உங்கள்
நெஞ்சிலே உள்ளதா?

எங்கள் தலைவிதியை
இருமணி நேரத்தில்
மாற்றி எழுதிய
இரக்கமில்லாத எழுத்தாளர்களே!

ஜின்னா மைதானத்தில்
அன்று நீங்கள்
ஆடிய விளையாட்டு
எங்கள் விதியோடு
ஆடிய விளையாட்டு!
சகுனிக்கே
சவால் விட்ட
சதிகார விளையாட்டு
அன்று கூறிய வார்த்தைகள்
இன்றும் எதிரொலிக்கிறது
"இரு மணி நேரம் தருகிறோம்
உயிருடன் உங்களை விடுகிறோம்.
எல்லாம் உங்கள் நன்மைக்கே
எடுப்பதை எடுத்துப் புறப்படுங்கள்
எல்லாம் நாமே காத்திடுவோம்
இனியொருநாளில் அழைத்திடுவோம்"

நாவிலே பூங்கொத்து
நெஞ்சிலே நச்சு விதை...
எப்படி முடிகிறது?
உங்களால்...!

நீண்ட உங்கள் கரங்களில்
நறுமலர்ச் சரங்கள் - அதில்
நச்சரவத்தையும்
எப்படி மறைத்தீர்கள்?!

இரு மணிநேரத்தில்
எங்கள் பயணம்
இதயத்தில் பாரத்தோடு
கைகளிலே பாரமின்றி
ஆரம்பமானது...
அந்த இடியும் வீழ்ந்தது
இப்போது நினைத்தாலும்
இதயம் சுடுகிறது..
இப்போது நினைத்தாலும்
இதயம் எரிகிறது...
வழியனுப்பிவைத்த நீங்கள்
வழி மறித்து நின்றீர்கள்!

பொன்னும் பொருளும்
எமக்கே சொந்தம்
ஈழத்தைக் கடப்பதற்கு
இருநூறு போதுமென்று
அத்தனையும் அபகரித்தீர்
அகதிகளாய் அனுப்பி வைத்தீர்!!

பொருளோடு செல்கவென
அருளோடு கூறியதும்
இருளோடு இதயத்தில்
எம்குறுக்கே நின்றதும்
நீங்கள் தானோ நண்பர்களே!

தோளிலே போட்ட கை
தோழமையென நம்பினோம்
தோழர்களே - ஆனால்
அது
கழுத்துக்கு வைத்த
குறியென
கனவிலும் நினைக்கவில்லை.

எல்லாமே அபகரித்து
ஓடென்று விரட்டி விட்டீர்..
வீடிழந்தோம் - எம்
மண் இழந்தோம்..
வீதியெங்கும் அலைகின்றோம்.

ஈழப்போராட்டமிங்கு
முறைகேடாய்
ஈன்றெடுத்த
வடபுலத்து அகதியெனும்
புதியதொரு சமுதாயம் - நாம்
விடியலுக்காய் ஏங்குகிறோம்.

கூடி வாழ்ந்தால்
கோடி நன்மை
கூடியே படித்தோம்
கூடியே வாழ்ந்தோம் - பின்
கோடிகளைப்பறித்து - நீங்கள்
கேடிகளாய்ப் போனது ஏன்?
தேடியே பார்க்கிறோம்
தவறுதான் புரியவில்லை.

காட்டிக்கொடுத்தோமா?
கயமை புரிந்தோமா?
கூடி இருந்து
குழி பறித்தோமா?

இதயத்தைத் தொலைத்த
என்னருமை நண்பர்களே!
ஏன் இப்படி
எம் வாழ்வில்
தீ வைத்தீர்கள்!
இதயமே இல்லாதவராய்
எப்படி மாறினீர்கள்?!
இதயத்தோடு
இதயமாய்
இணைந்திருந்த - நீங்கள்
எதிரிகளாய் - எமை
எண்ணியதும் ஏனோ?

இதயமற்றவரா.. நீங்கள்
இல்லவே இல்லை.
எங்களுக்குத் தெரியும்
இரண்டறக் கலந்து - எமை
நேசித்த நீங்கள்
இதயத்தைத் தொலைத்தது
இடையில்தான்....
என்னுயிர் நண்பர்களே!
ஏன் தொலைத்தீர் இதயத்தை
ஏன் அழித்தீர் எம் வாழ்வை...

புத்தளத்து மண்ணிலே
அகதி முகாம்களில்
ஆயிரம் அவலங்கள்!
உப்புச் சுமக்கும் - என்
உடன் பிறப்புகளின்
கண்ணீரின் ஈரம்
இன்னும் காயவில்லை
இதயத்தில் நீங்கள்
மூட்டிய நெருப்பு
இன்னும் எரிகிறது - ஆனால்
நீங்கள் வைத்த நெருப்புக்கே
நீங்களே எரிவதை
உணரவில்லையா? நண்பர்களே!
ஏழைகள் அழுத கண்ணீர்
கூரிய வாளை ஒக்கும்
அகதிகள் அழுத கண்ணீர்
அணுகுண்டை மிகைத்து நிற்கும்!

கிழிந்த வாழ்க்கையை
உடுத்துக் கொண்டிருக்கும்
என் கிராமத்து மக்களைப்
பார்த்த பின் கூட
பாசம் பிறக்க வில்லையா?

பகலில் கூட
இருண்டு விட்ட
எம் வாழ்க்கையில்
வெளிச்சம் தெரியாத
விடியல்களில்
ஒளி தேடும் எம் வாழ்க்கையைக்
கண்ட பின் கூட
கண்ணீர் சுரக்கவில்லையா?

என தருமை நண்பர்களே - உங்கள்
இதயம் இரும்பானது எப்போது?
ஈனச் செயல் புரியும்
கோழைத்தனம்
குடிபுகுந்தது எப்போது?
இப்போதும் கூட
இதயத்தால் கேட்கிறோம்
உங்கள் உரமான
நெஞ்சத் தரையில்
கோழைப் பயிர்கள் எப்படி முளைத்தன?
கோழைப் பயிர்களில் -
நச்சுக்கனிகளை - ஏன்
அறுவடை செய்தீர்கள்?

வீரமிகு சாதனைகள்
நீர் புரிந்த காலமுண்டு
விழுப் புண்கள் பல பெற்று
வீர வரலாற்றுக்கு
வெற்றி பல சேர்த்ததுண்டு
வீரமிகு தோழர்களே - உங்கள்
விழுப்புண்ணில்
சீழ் பிடித்ததெப்போது?
என்னருமை நண்பர்களே - உங்கள்
இரும்பான இதயத்தில்
துருப்பிடித்ததெப்போது?

சிறுபான்மை
உரிமைக்குப் போராட்டம் - மறு
சிறுபான்மை
இனம் மீது வெறியாட்டம்
சிறுபான்மை எம் உரிமை
சிறுபான்மை எம் உடமை
சிறுபான்மை எம் உணர்வை
சிதைத்து விட்ட போராட்டம்....

போராட்டப் பாதையிலே
மாறாட்டம் தோன்றியதால்..
இணைந்திருந்த இரு இனங்கள்
இரு திசையில் பிரிந்தனவே...

ஒரு தாயின் பிள்ளைபோல்
உயிருக்குள் உயிராய்
ஒன்றாக வாழ்ந்திருந்த
இனிய தமிழ்ச் சோதரரே!
இதயத்தால் இணைந்திருந்தோம்...

இன்பத்தில்
துன்பத்தில்
இரண்டிலுமே இணைந்திருந்தோம்...
தீபாவளி எங்கள் பெருநாள்
ரம்ஸான் உங்கள் பெருநாள்...
பிரிவில்லை என்றிருந்தோம்....
பேதங்கள் மறந்திருந்தோம்...
பேய்க்காற்று வீசியது
பேரிடியும் வீழ்ந்தது.
இணைந்த நம் கரங்கள்
நம் கரங்களாலேயே
வெட்டப்பட்டன.

ஒட்டி வாழ்ந்த உறவுகளை
வெட்டி வீழ்த்திய
வீரர்களே!
இஸ்லாமியத் தமிழரென
எமை அழைத்தீர்!
இதயத்தைக் குளிரவைத்தீர்!
இப்போது
எந்த வகைத் தமிழரென
எம்மை வெறுத்தீர்!

காரணம் தான் புரியவில்லை
காருண்ய தோழர்களே!

வடக்கிலே பிறந்தது குற்றமா?
வாஞ்சையுடன் வாழ்ந்தது குற்றமா?
இஸ்லாமியனாய் பிறந்தது குற்றமா?
இனியதமிழ் பேசியது குற்றமா?
தோள்கொடுத்தது குற்றமா?
தோழமையோடு வாழ்ந்தது குற்றமா?
ஒட்டி வாழ்ந்தது குற்றமா?
உதவி வாழ்ந்தது குற்றமா?
குற்றமென்ன கூறுங்கள்
நண்பர்களே!
குற்றமென்னக் கூறுங்கள்!

எங்கள் கதையை
இரு மணிநேரத்தில்
மாற்றியெழுதிய
இரக்கமற்ற எழுத்தாளர்களே!
எழுதிச் செல்லும்
விதியின் கை
எழுதி எழுதி மேற் செல்லும்
எழுதியே வைத்தான்
உமர் கையாம
நீங்கள்
முடிக்கத் தெரியாமல்
எழுதிய சிறுகதை
எங்கள் கதை...
எந்தக் கதைக்கும்
இறுதி முடிவை
எல்லோருக்கும் எழுதுபவன்
இறை என்னும் எழுத்தாளன்
முற்றும் என நீர் முடித்தீர்
நீர் முடித்தது
முதல் அத்தியாயம்
தொடரும் மென அவன் எழுதும்
தொடர்கதையைப் புரிந்து கொள்வீர்

உறவுகள் என்றும் அழிவதில்லை
உண்மை அன்புக்கு என்றும் அழிவில்லை
உறவுகள் வெட்டியபோதும்
அது மீண்டும் துளிர்க்கும்
உயிருக்குள் உயிரான
இனிய தமிழ்ச் சோதரரே
இப்போதும்
எம் மண்ணிலே
உம் அன்பிலே
இணைந்திடத் துடிக்கின்றோம்

எம் மண்ணிலே வாழ்ந்திட்ட
மண்மடியிலே மடிந்திட்ட எம்
தாயகமாம் வடக்குக்கு
தவழ்ந்து விளையாடிய
எம் தாய் மண்ணின் காலடிக்கு
மீண்டு வரத் துடிக்கிறோம்

நாம் வருவோம்
மீண்டும் வருவோம்
விழுதுகளைத் தான்
வெட்டினீர்கள் வீரர்களே
வேரை வெட்டவில்லை
இனிய தமிழ்ச் சோதரரே
ஆழமாய் வேரோடிய - நம்
அன்புப் பிணைப்பு - அது
என்றும் அழிக்க முடியாதது
என்றும் பிரிக்க முடியாதது
இதயத்தோடு இதயம் சேர
உயிரோடு உயிர் சேர
உறவுகளை உயிர்ப்பிக்க
நாம் வருவோம்
மீண்டும் வருவோம்

துப்பாக்கி
தோட்டாக்கள்
எதுவுமின்றி நாம் வருவோம்

ஏந்துகின்ற
எங்கள் கைகள்
இறைவனையே
நோக்கியெழும்
எங்கள் கைகளிலும்
இரு ஆயுதம் -
அன்பு ஒரு ஆயுதம்
இறை பிரார்த்தனை
மறு ஆயுதம்
எங்கள் ஆயுதம்
தோட்டாக்களைக் கக்காது
வேட்டுக்களைத் தீர்க்காது
எங்கள் ஆயுதம்
இயங்கும் அந்த நாளில்
துப்பாக்கி தூரப்போகும்
தோட்டாக்கள் துகள்கள் ஆகும்.

அப்போது
நாம் வருவோம்
மீண்டும் வருவோம்
தூசுகளாகப் பறந்த நாம்
பாறைகளாய் மீண்டும் வருவோம்
விதைகளாக வீழ்ந்த நாம்
விருட்சங்களாய் மீண்டும் எழுவோம்

எம்
தாயகமாம் வடக்குக்கு
தலைநிமிர்ந்து நாம் வருவோம்!

— யாழ் - அஸீம் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே. 17

மூலம்: டொக்டர் ஜெயிம் ஜினோல்ட்
தமிழில்: அருண்




### செலவுப்பணம்

நவீன குடும்பங்களில் குழந்தைகளுக்கு அவர்களும் குடும்பத்தின் உறுப்பினர்கள் என்ற வகையில் உணவு - உடை போன்றவற்றிற்கான செலவுக்கான பணம் (Allowance) வழங்கப்படுவதுண்டு. இந்தக் கொடுப்பனவு ஒரு குழந்தை நல்ல பிள்ளையாக நடந்துகொண்டதற்காக வழங்கப்படுகின்ற ஒரு பரிசுத் தொகையோ அல்லது அதன் சாதனைகட்கான ஒரு கொடுப்பனவோ அல்ல. இது குழந்தைக்கு கல்வியூட்டுவதற்கான ஒரு குறிப்பான நோக்கத்தைக்கொண்ட செயற்பாடாகும். அதாவது குழந்தைக்குப் பொருட்களைத் தெரிவு செய்தல், பொறுப்புடன் நடந்துகொள்ளல் என்பவற்றினூடாக பணத்தைப்பயன்படுத்துவதில் அனுபவத்தை வழங்குவதற்கான ஒரு செயற்பாடே இதுவாகும். எனவே கொடுக்கப்படும் செலவுத்தொகைபற்றிய மட்டுமீறிய கண்காணிப்பு செய்தல் அவசியமில்லை. இது இத்தொகையை வழங்கும் நோக்கத்தையே குலைத்து விடும். உண்மையில் செய்யப்படவேண்டியது என்னவென்றால், செலவுசெய்தல் பற்றிய பொதுவான அடிப்படைக் கொள்கை ஒன்றை உருவாக்கிக்கொள்வதும், அந்தக் கொடுப்பனவிற்குள் எந்தெந்த விடயங்கள் செய்யப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தெரிவிப்பதும் மட்டுமேயாகும். உதாரணமாக பாடசாலைக்குப் போவதற்கான பஸ் கட்டணம், மதிய போசனம், பாடசாலைக்கு கொடுக்க வேண்டிய கொடுப்பனவுகள் போன்றவை. குழந்தை வளர வளர மேலதிக செலவுகளையும் பொறுப்புகளையும் இணைத்துக் கொள்வதற்காக இந்தத் தொகையை அதிகரிக்கலாம். அங்கத்துவப்பணம், பொழுது போக்குச்செலவீனம் உடுதுணிகள் போன்றவை இத்தகைய மேலதிக செலவீனங்களாகும்.

வ்ழங்கப்படும் கொடுப்பனவு தவறாகப் பயன்படுத்துவது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றுதான். சில பிள்ளைகள் தமது கொடுப்பனவைச் சரியான முறையில் செலவு செய்வதில்லை. இது தொடர்பான அவர்களிடம் உள்ள தவறான முகாமைத்துவப்பண்பு காரணமாக (Mismanagement) வெகு விரைவிலேயே பெருமளவை செலவு செய்து விடுகிறார்கள். இத்தகைய தவறான பயன்படுத்துதல்கள் கலந்துரையாடப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்வுகட்கு வரவேண்டும். திரும்பத் திரும்ப இவ்வாறான தவறுகள் நடந்தால், இந்தக்கொடுப்பனவு பிரிக்கப்பட்டு வாரத்துக்கு இரண்டு மூன்று தடவைகளில் கொடுக்கப்படலாம். குழந்தையிடம் முயற்சியை அல்லது கீழ்ப்படிவை ஏற்படுத்துவதற்கான நெருக்கடியைக் கொடுப்பதற்குரிய சாதனமாக இந்தக் கொடுப்பனவைப் பயன்படுத்துவது தவறானதாகும். இந்தக்கொடுப்பனவை கோபம் வரும் போது கொடுக்காமல் நிறுத்தி விடுவதோடு, காரணம் இன்றி நல்ல சந்தோஷமான நேரத்தில் அதிகரித்து விடுவதோ தவறான நடவடிக்கைகளாகும்.

ஒரு நியாயமான செலவுத்தொகை என்பது எவ்வளவு? இந்தக்கேள்விக்கு சகலருக்கும் சரியான பொதுவான விடை கிடையாது. இந்தக் கொடுப்பனவு எமது வரவு செலவுக்கு கட்டுப்படியானதாக இருக்க வேண்டும். அயல் வீட்டு கொடுப்பனவுகள் எப்படி இருப்பினும், நாம் எமது வரவு செலவுக்குள் கொடுக்கப்படக்கூடிய தொகையை விட அதிகமாகக் கொடுக்க முயலக்கூடாது.

குழந்தை அதிகமாகத் தரும்படி கேட்குமானால், அதற்கு நாம் இவ்வாறு சொல்லலாம். ''உங்களுக்கு அதிகமாகத்தரத்தான் நாம் விரும்புகிறோம். ஆனாலும் எமது மாதாந்த வருமானம் இதற்கு மேல் தர அனுமதிக்கவில்லை. இந்த அணுகுமுறை, குழந்தைக்கு இதற்கும் அதிகமாகப்பணம் தேவையில்லை என்று கூறி ஏற்றுக் கொள்ள வைக்க முயல்வதைவிடச்சிறந்த அணுகுமுறையாகும்.

பணமும் அதிகாரத்தைப்போலவே, அனுபவம் அற்றவர்களால் மிகவும் சாதாரணமாகவே தவறாகக் கையாளப்படக்கூடிய ஒன்றாகும். கொடுப்பனவுகள் ஒருபோதும் குழந்தைகளால் சமாளிக்க முடியாத அளவுக்கு அதிகமாக கொடுக்கப்படக் கூடாது. சிறிதளவு கொடுப்பனவுடன் ஆரம்பித்து அதை காலத்துக்குக் காலம் கொஞ்சம் கொஞ்மாக அதிகரித்துச் செல்லலாம். அதிகப் பணத்தைக் கொடுத்து குழந்தையை அதிகளவு சுமைக்குள்ளாக்கக்கூடாது. கொடுப்பனவுகள் குழந்தைகள் பாடசாலைகளில் பணத்தை எண்ணவும் மாற்றிக்கொள்ளவும் கற்றுக்கொண்டதும் வழங்கப்படத் தொடங்கலாம். கொடுப்பனவுகளில் ஒரு விடயம் முக்கியமானதாகும். அதாவது வழங்கப்படும் கொடுப்பனவுகளின் நிலையான செலவுகள் போக எஞ்சும் சிறிய பகுதி குழந்தைக்குரிய பணமாகும். அதை சேமிப்பதற்கோ வேறு முயற்சிகட்கு பயன்படுத்துவதற்கோ குழந்தைக்கு உரிமை உண்டு.

### நண்பர்களும் விளையாட்டுத் தோழர்களும்:

கோட்பாட்டு ரீதியில் சொல்வதனால், நாங்கள் எமது குழந்தைகள் தமது நண்பர்களைத் தாமே தேடிக்கொள்வதையே விரும்புகிறோம். நாம் சுதந்திரத்தை நம்புகிறோம்; அடக்கு முறைகளை எதிர்க்கிறோம். அத்துடன் ஜனநாயக சமூகத்தில் சுதந்திரமாக உறவுகொள்ளுவது ஒரு அடிப்படை உரிமை என்பதையும் நாம் அறிவோம். ஆனால், எமது குழந்தை அடிக்கடி வீட்டுக்கு அழைத்து வரும் 'நண்பர்கள்'' எரிச்சலூட்டுபவர்களாக இருக்கிறார்கள். குழந்தைகள் சண்டித்தனம் காட்டுதலையோ ஏசுதலையோ நாம் விரும்பாமல்இருக்கலாம். அல்லது மூக்குச் சிணுங்கும் குழந்தைகளை எம்மால் சகிக்க முடியாமல் இருக்கலாம். ஆனால், அவர்களது நடத்தைகள் உண்மையாகவே மோசமானதாக எமக்குத் தோன்றாத வரை எமது குழந்தையின் விருப்பத் தேர்வு என்ன என்பதையும், அதைக் கவர்வது என்ன் என்பதையும், புரிந்து கொண்டபின்னர் அதன் நண்பர் தெரிவு தொடர்பாக நாம் தலையிடுவது சிறந்ததாகும்.

எமது குழந்தையின் நண்பர்கள் தெரிவு பற்றி மதிப்பிடுவதற்கு நாம் எந்த அளவு கோலைப்பயன்படுத்துவது?

நண்பர்கள் மத்தியில் ஒருவருக்கொருவர் பயனுடையவர்களாகவும் ஒருவரை ஒருவர் திருத்தக்கூடிய செல்வாக்கை ஏற்படுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும். ஒரு குழந்தைக்கு தனது சுபாவத்துடன் வேறுபடுகின்ற, ஒத்துப் போகின்ற சுபாவமுள்ளவர்களுடன் பழகும் வாய்ப்புகள் தேவை. ஒதுங்கிப் போகும் சுபாவமுள்ள குழந்தைகளுக்கு பொதுவாக விட்டுக்கொடுக்கின்ற சுபாவமுள்ள நண்பர்கள் தேவை. அளவுக்கதிகமாக பாதுகாக்கப்படுகின்ற பிள்ளைகளுக்கு சுதந்திரமான விளையாட்டுத் தோழர்கள் தேவை. ஒரு பயந்த சுபாவமுள்ள குழந்தை துணிச்சலான சிறுவர்கள் மத்தியில் இருக்க வேண்டும். ஒரு குழந்தைத்தனமான பிள்ளைக்கு அதிகளவு முதிர்ச்சிபெற்ற நண்பர்களின் நட்பு தேவை. பெருமளவு கதைகளிலும், கற்பனைகளிலும் அளவுக்கதிகமான மிதக்கும் குழந்தைகட்கு கற்பனை வளமற்ற குழந்தைகளின் செல்வாக்குத் தேவைப்படுகிறது. ஒரு சண்டைபிடிக்கும் சுபாவமுள்ள குழந்தையை அதைவிட பலமான ஆனால், சண்டைபிடிக்கப் போகாத விளையாட்டுத்தோழர்களுடன் விளையாட விட்டுப்பார்க்கலாம். எமது நோக்கமெல்லாம் குழந்தையின் பழக்க வழக்கங்களை, தனது சுபாவத்திற்கு நேரெதிராக சுபாவமுள்ளவர்களுடன் பழக விடுவதன் மூலமாக திருத்திக் கொள்வதற்கு உற்சாகப்படுத்துவதே யாகும்.

சில உறவுகள் அவசியமாக உற்சாகப் படுத்தப்படக்கூடியவை. குழந்தைத்தனமான குழந்தைகள் ஒன்றுக்கொன்று முதிர்ச்சியின்மையையே ஊட்டுவார்கள். சண்டைபோடும் குழந்தைகள் ஒருவருக்கொருவர் சண்டைபோடும் சுபாவத்தை வளர்த்து விடுவார்கள். ஒதுங்கிப்போகும் குழந்தைகள் போதியளவுக்கு விட்டுக் கொடுத்து வாங்கும் சமூகப்பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ள மாட்டார்கள். குற்றமிழைக்கும் குழந்தைகள் மற்றவருடைய சமூகத்திற்கு எதிரான போக்குகளை மேலும் வளர்த்துவிடவே செய்வர். மற்றைய ஆதிக்கம் செலுத்தக்கூடிய 'நண்பர்களிடம்' இருந்து குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கான செல்வாக்கைப் பெறுவதை தவிர்த்துக்கொள்ள விஷேட கவனம் செலுத்தப்படவேண்டும். ஏனென்றால், அவர்களுடைய 'அனுபவங்கள்' அவர்களைப் பாடசாலையிலும், அயலிலும் ஹீரோக்களாகிவிடுவதால், அவர்கள் அடையாளம் காண பொருத்த மற்றவர்களாகி விடுகின்றனர்.

ஒரு குழந்தைக்கு தனது நண்பர்களைத் தெரிவுசெய்துகொள்ளும் பொறுப்புணர்வுக்குரியதாக வருவதற்கு ஒரு அனுபவ நடைமுறை தேவை. நடத்தைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் செயல்களை சீர்தூக்கிப்பார்க்கும் ஒரு முறைமை அவசியம். குழந்தையின் நண்பர் தெரிவு பயனுள்ளது என்பதை உறுதிசெய்யும் பொறுப்பினை நாம் கொண்டிருக்கும் அதேவேளை குழந்தை இந்த நடைமுறைகளூடாக தனது நண்பர்களைத் தெரிவு செய்ய அனுமதிக்க வேண்டும்.

### செல்லப் பிராணிகளை வளர்த்தல்:

ஒரு செல்லப் பிராணியை தான் பொறுப்பெடுத்துக்கொள்வதாக ஒரு குழந்தை கூறும் போது, அது வெறுமனே தனது நல்ல நோக்கத்தை வெளிப்படுத்துகிறது என்பது மட்டுமே அன்றி, அதனால், அது முடியும் என்பதற்கான எந்தச்சான்றுகளையும் அது தருவதாகக் கொள்ள முடியாது. குழந்தை ஒரு வளர்ப்புப் பிராணியை வைத்திருக்க விரும்பவோ, ஆசைப்படவோ கூடும். ஆனால், அதனால் அதற்கு அப்பிராணியை கவனமாகப்பார்த்துக்கொள்ளும் ஆற்றல் பெரும்பாலும் இல்லாமல் இருக்கும். ஒரு விலங்கின் உயிர் வெறுமனே குழந்தையின் தனித்த பொறுப்பில் விடப்படக்கூடிய ஒன்றல்ல. விரக்திக்கும் குற்றச்சாட்டுக்கும் ஆளாகாதிருக்க வேண்டும் என்றால், குழந்தைக்கான ஒரு வளர்ப்புப் பிராணி என்பது பெற்றோருக்கு ஒரு மேலதிக வேலை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். குழந்தை ஒரு செல்லப்பிராணியை வைத்திருப்பதன் மூலம், அதனுடன் விளையாடுதல் அன்பு காட்டுதல் என்பவற்றின் மூலமாகவும் நிறைய சந்தோஷங்களைப் பெற்றுக்கொள்கிறது. அது பிராணியை கவனித்துக்கொள்ளும் பொறுப்பில் பங்கெடுத்துக்கொண்டாலும், பிராணியின் வாழ்வுக்கும் அதன் நலன்களுக்குமான பொறுப்பு பெற்றோரையே சார்ந்தது.

### சுதந்திரமான சொற்றொடர்கள்:

ஒரு நல்ல பெற்றோர், ஒரு நல்ல ஆசிரியரைப் போல குழந்தைகளுக்கு கொஞ்சம் கொஞ்சமாக தான் தேவைப்படாத ஒருவராக தன்னை மாற்றிக் கொள்வார்கள். அத்தகைய பெற்றோர்கள், குழந்தைகள் தமது சொந்த தெரிவுகளை செய்வதையும்தமது சொந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவதையும் உருவாக்கக்கூடிய ஒரு உறவை கொண்டிருப்பதில் திருப்தியடைவர். எமது உரையாடல்களின் மூலமாக, குழந்தைகட்குச் சரியான முடிவுகளை எடுப்பதற்கான தகுதி உண்டு என்று நாம் நம்புவதை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். எமது மனதில் அதன் கோரிக்கை ஒன்றிற்கு 'ஆம்' என்று பதில் சொல்லலாம் என்று தோன்றினால், நாம் அதனை குழந்தையின் சுயாதீனத் தன்மையைப் பலப்படுத்தக்கூடிய விதத்தில் தெரிவிக்கலாம்.

சில உதாரணங்கள்

''நீங்கள் விரும்பினால்''

''அதுதான் உண்மையாகவே உங்களது விருப்பம் என்றால்''

''நீங்களே முடிவு செய்யுங்கள்''

''இது உண்மையாகவே உங்களைப் பொறுத்தது''

''இது முழுக்க முழுக்க உங்களது தெரிவாகும்.''

''நீங்கள் என்ன முடிவெடுத்தாலும் எனக்கு சந்தோஷம் தான்''

எங்களது 'ஆம்' என்ற பதில் பிள்ளைக்கு நன்றியுணர்வை ஊட்டலாம். ஆனால், இத்தகைய வசனங்கள் மேலதிக திருப்தியை அதற்கு ஏற்படுத்தும். அதாவது தனது சொந்த முடிவுகளை எடுப்பதில், நாம் அவன் மீது நம்பிக்கை வைத்திருப்பதை வெளிக்காட்டுவதால் ஏற்படும் திருப்தி.

*அடுத்த இதழில்:*
*கட்டுப்பாடு:*
*அனுமதிக்கக்கூடிய அளவும்,*
*அதன் எல்லையும்*

---

## வன்முறை ...

7ம் பக்க தொடர்ச்சி

வம் சொல்வது போல் மக்கள் இந்தியாவுக்கு நகருவதற்கான அழுத்தத்தை புலிகள் பிரயோகிக்க வேண்டிய அவசியமில்லை. இந்தியாவுக்கு பயணிக்கையில் பெரும் எண்ணிக்கையானோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்தியாவுக்கு பயணிப்பவர்களிடமிருந்து அறவிடப்படும் தொகையில் புலிகள் எடுத்துக்கொள்கின்றார்கள். இவ்வாறு பயணிப்பவர்கள் தங்களுடைய சொத்துக்களை விற்கவேண்டிய நிலைக்குள்ளாகின்றார்கள். வன்னி இராணுவத் தடை முகாம்களில் இடம் பெற்று வருகின்றன. ஊழல்களைப் போன்று பணமோ, சிபாரிசோ உள்ளவர்களுக்கு பயணத்திற்கான முன்னுரிமையைப் புலிகளும் கொடுக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இராணுவ அத்துமீறல்கள் வன்னியில் நிலவும் இராணுவக்கட்டுப்பாடுகளுக்கிடையில் மக்கள் தங்கள் பிள்ளைகளை புலிகளின் ஆட்சேர்ப்பில் அகப்பட்டுக்கொள்ளாது பாதுகாப்பதில் மிகுந்த பிரயத்தனம் எடுக்கிறார்கள். இவ்வாறு ஆட்களை சேர்க்கும் நிலையங்கள் வன்னியின் ஒவ்வொரு கிராமங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாடசாலை மாணவர்கள் மீது மனோதத்துவ ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்துதல், அவர்களைத் துன்புறுத்துதல், அவர்களைத் தகாத விதத்தில் பயமுறுத்துதல், ஆட்கடத்தல் போன்ற பணிகளைக் கையாண்டு ஆள் சேர்க்கும் முயற்சியில் புலிகள் இறங்கியுள்ளனர். அண்மையில் இடம்பெற்ற கிளிநொச்சி மோதலிலும் 13 - 16 வயதுடையவர்களே அதிகமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என அறியப்படுகின்றது. முன்புபோல் தற்போது இறந்தவர்களுக்காக எதுவித விஷேட நிகழ்வுகளோ, அஞ்சலிகளோ இடம்பெறுவதில்லை. அவர்களெல்லாம் வெறும் கொலைக்கள இயந்திரங்களாகவே தலைவர்களால் கருதப்படுகிறார்கள். இவ்வாறான இளம் வயதுடையவர்கள் அதிகம் வன்னிப் பிரதேசத்திலிருந்து இணைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. புலம் பெயர்நிகழ்வுகளாலும் [illegible]களுக்கேற்படும் அச்சுறுத்தல் நிலைகளாலும் இவ்விதம் புலிகளில் சேர்வதற்கான உந்துதலை இளம் பிள்ளைகள் பெற்றுவிடுகின்றனர்.

பலதமிழ் இளைஞர்களை இத்தற்கொலை வழிக்கு ஈர்த்தெடுத்ததற்கான பொறுப்பு புலிகளைச்சார்ந்ததாவதோடு, அரசாங்கத்தின் அரசியலும், அதன் இராணுவத்தினரால், கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள பயங்கரவாதமும் இவ் அழிவு நிலையை தோற்றுவிப்பதில் பாரிய பங்களிப்புகளைச் செய்துள்ளன.

அடிப்படைப் பலவீனங்களுக்கும், செல்வாக்கின்மைக்குமிடையே தமது கட்டுப்பாட்டையும், செல்வாக்கையும், வன்னிப் பிராந்தியத்தில் நிலைநாட்ட வேண்டிய தேவை புலிகளுக்கு இருக்கின்றது. எனவே வன்னிப் பிரதேசத்தில் அரச இராணுவத்தினர் விளைவிற்கும் அழிவுகளிலும், வன்முறைகளிலும் தான் புலிகளின் பலம் தங்கியிருக்கிறது. பாரிய தவறுகளைச்செய்து குற்றம் சுமத்தப்படும் இராணுவத்தினர் எவ்வித தண்டனையும்பெறாமல் விடுதலை செய்யப்படுவதும், அவர்கள் பதவி உயர்வு பெறுவதுமான துக்ககரமான நிலையில் இலங்கையின் அரசியல் அமைந்துள்ளது. மனித உரிமைகளைக் கௌரவிக்கின்ற, உடலியல் நலன்களையும், கௌரவத்தையும் உறுதி செய்யக்கூடிய இருப்பிடத்தை நிரந்தமாக பாதுகாக்கக்கூடிய ஒரு அரசியல் தீர்வின் மூலமே வன்னிப் பிரதேச மக்களுக்கு நம்பிக்கையான எதிர்காலத்தை ஏற்படுத்த முடியும்.

தமிழில் : நில் ஷா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# துயர் செறிந்த நடையழகும் அனுபவப் பகிர்தலும் கொண்டது நட்சத்திரன் செவ்விந்தியனின் வசந்தம்-91

சு.வில்வரெத்தினம்



சென்ற இதழின் தொடர்ச்சி...

## சுழற்சிகள்

### தாஸீம் அகமது

'சுழற்சிகள்' என்ற கவிதைத் தொகுப்பை தாஸீம் அகமது தந்திருக்கிறார். 36 கவிதைகள் அடங்கிய தொகுதி. நல்ல கவிஞராகத் துலங்கியிருக்கக் கூடியவர் இவர். இவரது நூலின் தலைப்பினையே கொண்ட முதலாவது கவிதையாக அமைந்த கவிதை நல்ல கவிதையாகவும் அமைந்து விட, எதிர்பார்ப்போடு ஏயைனய பக்கங்களைப் புரட்டினால் பிறகவிதைகள் தேறாமல் போனது ஏன் என்ற கேள்வியே எழுந்தது. இவர் ஒரு மருத்துவராக இருப்பதனாலோ என்னவோ 'எயிட்சுக்கு' எதிராகவும் ஒரு கவிதை எழுதியுள்ளார். தான் சார்ந்திருக்கும் 'வகவத்'தைப் பற்றியும் எழுதுகிறார். எழுதலாம் . அதில் ஒன்றும் பிரச்சனையில்லை. எயிட்சைப் பற்றி பிரசாரம் செய்வதை விடுத்து எய்ட்ஸ் நோயாளி ஒருவனின் அனுபவத்தளத்திலிருந்து அவனது துன்பதுயரங்களையும் வெளிக்காட்டுவதன் மூலம் அந்நோய் குறித்த மறைமுகமான எச்சரிக்கையுணர்வை வாசகர் பெறும் வகையில் எழுதலாம். தவறில்லை: ஆனால் கலையனுபவமாக தொற்றவைக்கப்படுதல் வேண்டும். இவர் ஒரு மருத்துவராக இருப்பதால் எயிட்சைப் பற்றி மட்டுமல்ல சகல நோய்களையும் அவற்றுக்கான நிவாரணிகளையும் தாராளமாக எழுதலாம். தடையில்லை; ஆனால் கவிதையை வாகனமாக்கி வாகடம் செய்தல் தகுமா? முன்னுரை வழங்கியுள்ள நுஃமான் கூட இவரது முதலாவது 'சுழற்சிகள்' என்ற கவிதையிலிருந்தே மேற்கோள் தந்து சிலாகித்து விட்டு, 'உணர்வும் உருவமும் ஒருங்கமைந்த இத்தகைய (சுழற்சிகள்) கவிதைகள் மூலமே ஒரு கவிஞன் இலக்கிய உலகில் இடம்பெற முடியும்'' என்கிறார். நுஃமான் போன்றவர்களது தொடர்பு தமக்கு ஏற்கெனவே இருந்ததாகக் குறிப்பிடும் கவிஞர் அவர் போன்றோரது வழிகாட்டலில் நல்ல கவிதைகள் தருவதில் ஏன் முயலவில்லை என்பது மிகவும் வருத்தந் தருகிறது.

## மண்ணின் நினைவுகள்

### சபா-வசந்தன்

''மண்ணின் நினைவுகள்' - என்னும் தொகுதி கனடாவில் புலம் பெயர்ந்து வாழும் சபா - வசந்தன் எனும் கவிஞருடையது. புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் மண்ணின் வேர்களை அறுக்க முடியாமல் துன்புறும் பெரும்பாலான கவிஞர்கள் போலவே இவரும் துன்புறுவது தெரிகிறது. மண்ணின் நினைவுகளை மீட்டதோடு மண்ணில் நிகழும் அவலங்களையும் கவிதையில் மீட்டுகிறார். பெண் ஒடுக்குமுறை, சாதீயம், தேசிய இனப் போராட்டம், போராட்டத்தில் புகுந்து கொண்ட கேடுகள் பற்றியெல்லாம் எழுதுகிறார். புதுக்கவிதைகளும், மரபு வழிப்பட்ட கவிதைகளும் எழுதியுள்ள இவர் எதில் எழுதினாலும் அதைக்கவிதையனுபவமாய் தர முயல்தல் வேண்டும். யாப்பில் எழுதுதல் என்றாலே சந்தங்கள், சல்லாரி ஓசைகளோடு எழுதுதல் எனவும் சிலர் 'புரிந்து' வைத்திருக்கின்றனர் போலும். இதற்கான உதாரணங்கள் பல உள்ளன. உதாரணமாக, சபா வசந்தனின் கவிதைகளில் 'மண்ணின் நினைவுகள்' - எனும் தலைப்பிலான கவிதையில் '*பழஞ் சோற்றைக் குழைத்து/ பச்சை மிளகாயோடு/ பலாஇலைமேல் வைத்து பலகாரமும் செய்து தந்து/ பலகாலமாய் எம்மை/ பரிவுடனே வளர்த்து/* - இவ்வாறாக பலகாரமும் பலகாலமும்' என வருகின்ற உப்புச்சப்பற்ற அடுக்குத்தொடர் பல கவிதைகளிலும் வருகின்றன. ஓசை லயத்துடன் எழுதுவது என்பதும் சதங்கை ஒலிப்புடன் எழுதுதலும் வேறு வேறு.

சந்தங்களைக் கூட அழகுறக் கையாண்டால் அதிலும் கவிதை அழகு வாராதென்றில்லை. ஆனால் இரண்டுங் கெட்டானில் எதுவுமே வராது. அத்தோடு இவரது கவிதைகளில் நீர்த்துப் போனதன்மையும் கவிதையின் இறுதி வரிகளில் ஆயினும், வாசகரின் மனதில் தைக்கும் வகையில் தொற்றவைக்கும் தன்மை அற்றதாயும் உள்ளன. மேலே உதாரணத்தில் இறுதி வரிகளைப் பாருங்கள். *மண்ணின் நினைவுகள்/ மனதில் மரணிக்க/ மகிழ்வில்லா வாழ்க்கைக்காய்/ மற்றொரு நாள் தொடங்கிற்று* என சத்தற்று சப்பென்று முடிகிறது. பழஞ்சோறு எனும் கவிதை இத்தொகுதியில் மண்ணின் நினைவுகளை அழுத்தமாய் சொல்கிறது. எனினும் பல கவிதைகள் அவரது பிரசவங்களாகத் தோல்வியுறுகின்றன.

## கானல் நீர்

### அ.கந்தசாமி

அ.கந்தசாமியினது 'கானல் நீர் கனவுகளும்' - இவரும் புலம் பெயர்ந்த ஒரு கவிஞர் - சபா. வசந்தனின் கவிதைகள் போலவே ஓசைப்பண்பு ஒற்றுமை அதிகம் உடைய கவிதைகள் கொண்டவை. ஆயினும் சபா.வசந்தனை விடவும் அழுத்தமான படிமங்களையும் கையாண்டு அனுபவங்களை தொற்ற வைக்க முயல்கிறது. உதாரணமாக முடிந்த காதல் கவிதையில் வரும் வரிகள் மூசும்பனி வெளியே/ பாரமுள்ள பஞ்சாய்/ படி இறங்கும்/ கூதல் காற்றும், கொம்பு தடவிக்குழைதேடும்/. இப்படிப் பல்வேறுவகைப் படிமங்கள் இவரின் கையில் அழகுறத் தீட்டப்படுகின்றன. பெரும்பாலும் தனது தற்போது புலம் பெயர்ந்து வாழும் சூழலை படிமப் படுத்தும் கவிஞர் கையாளும் பொருளை மண்ணில் இருந்தே பிடுங்கி ஒட்ட வைக்கமுயல்கிறார். இதில் ஒரு ஒவ்வாமையை நாம் இனங்காணலாம். புலம் பெயர்ந்த கவிஞர்களில் பலரும் மண்ணின் நினைவுகளால், பிரச்சினைகளால் அலைக்கழிக்கப்படுகின்றனர் என்பது உண்மைதான். ஆயினும் மண்ணில் வேர்கொண்ட வாழ்வையும் பிடுங்கியதை வேற்று மண்ணில் நடுகை செய்ய முடியாத அலைக்கழிவு, மன உழைச்சல் ஒரு அந்நிய மாதல்சார்ந்த வாழ்வனுபவம் அதிகமானோரின் கவிதைகளில் வெளிப்பாடு கொள்வதில்லை. அ.கந்தசாமியின் கவிதைகள் சிலவற்றில் அது தலை நீட்டாமலில்லை. ஆயினும் துல்லியமாய் அதுதீட்டப்படவில்லை. புலம் பெயர் வாழ்வின் அவலத்தை ஒரு கவிதையில் இப்படிச் சொல்லி முடிக்கிறார். மீண்டும் *நாளைக்காலை/ புதிய ஒப்பனைகளோடு/ மறுபடியும் வாழவென/ என்றும் போல நீ/ உயிர்த்தெழுவாய் (-)* வாழ்தல் என்பதே யந்திரத்தனமாய் போக, மறுநாள் எழுதல் என்பதே யந்திரத்தை ஒட்ட வைப்பதற்கான செத்துப் போன உணர்வையல்லவா தரும். இதிலே 'உயிர்த்தெழுவாய்' என்ற சொற்பிரயோகம் பொருந்தவேயில்லை. ஆயினும் இவரிடம் கவித்துவம் வீறுடன் பிரகாசிக்கும் இடங்களும் இல்லாமல் இல்லை. அவசரமான வாழ்க்கையில் கவிதைகளைக் காத்திருந்து தீட்டும் அவகாசம் அற்றிருப்பார்கள் போலும். ஆயினும் எமக்குத்தேவை அவர்களின் வாழ்வனுபவம் தெறிக்கும் கவிதைகள்.

## யுத்த சந்யாசம்

### சக்கரவர்த்தி

சக்கரவர்த்தியின் - யுத்த சன்யாசம் என்னும் தொகுதி முழுவதும் யுத்த எதிர்ப்புக் கவிதைகள் நிரம்பியது. எதிர்ப்பு என்பதை விடவும் வெறுப்பு என்பது பெரிதும் பொருந்தும். அவ்வெறுப்பு தான் எக்காலத்திலேனும் தனது தாயகத்திற்கு திரும்பவே மாட்டேன் என்று அடித்துச் சொல்ல வைத்திருக்கிறது. அதற்கு அவருக்கு நியாயமான காரணங்கள் கூட இருந்திருக்கலாம். ஆனால் தேசிய இனப்போராட்டத்திற்கான நியாயமான காரணங்கள் எவற்றையும், அரசின் இன ஒடுக்குமுறை, அரச பயங்கரவாதம் என்பவற்றையும் இவரது கவிதை புறக்கணித்து 'விரோதிகள்' என குறித்த ஒரு சாராரை நோக்கும், சிலவேளைகளில் மக்கள் மீதும் கூட வெறுப்பின் அம்புகள் பாய்கின்றன. எனினும் சிலவேளைகளில் வெண்பனி போல் தன் தேசம் குறித்த உருகுதலும் இல்லாமல் இல்லை.

ஆயினும் இவரது கவிதைகளில் தான் சொல்ல வருவதில் விசுவாசமான நேர்மை தெறிக்கிறது. அழுத்தமான படிமங்கள், கூர்மையான சொற்கள், அவரது கவிதைகளில் வந்து போகின்றன.

*ஒரு எல்லைக்கப்பால்/ சுருண்டு விழுந்தவனின்*
*கேள்விகள்/ எதிரே மதிற்சுவர் எழுப்பி/ விறைப்பாய் நின்றது/*
*சுட்டெரிக்கும் சூரியனார்/ அதிகாரம் இழந்து போன/*
*தமிழ்க் கனேடியக் கணவன் போல/ சும்மா வெறும் பெயருக்காக/ அழுது. வடிந்து கொண்டிருக்கும்/ வானத்தில்/*

இவ்வாறான பல இடங்களைச் சுட்டலாம். அழுத்தமான படிமங்கள், கூரிய சொற்கள் என்பன விரவிவந்தாலும் இவரது கவிதைகளில் (கட்டிறுக்கம் இறைந்து இருப்பதனால் முழுமொத்தமான பாதிப்பைத் தருவதில்லை. காரணம் ஒவ்வொரு கவிதையும் நீளமானதாக இருப்பதாகவும் இருக்கலாம். ஆயினும் 'யுத்த சன்யாசம்' எனும் தொகுதியிலேயே பெரிய நெடுங்கவிதை தொய்வற்று வெளியுலகில் பெற்ற அனுபவம் சார்ந்து பேசுகிறது எனலாம்.

## வசந்தம் -91

### நட்சத்திரன் செவ்விந்தியன்

இறுதியாக நட்சத்திரன் செவ்விந்தியன் என்ற புனைபெயர் கொண்ட அருணோதயனின் வசந்தம் - 91 என்ற தொகுப்பிற்கு வருவோம். அதிகம் நீளமில்லாத, செட்டான வடிவங்கொண்ட 21 கவிதைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. தமிழில் இவரது கவிதைப்பாணி ஒரு புதிய வரவு. ஓங்கி ஒலிக்காத உறை படிமங்களோடு நடக்கின்ற ஓவிய நகர்வு இவரது கவிதைகளின் பண்பு. அமுங்கிய உணர்வுகளை மெல்ல நோகாமல் எடுத்து தடவித் தடவி நகர்கிற வரிகள்; கவிதை முழுவதிலும் விரவிப்படிந்துள்ள மைம்மல் பொழுதின் விடிவிழந்த துயரின் செறிதல். கவிஞரே தனது 'மைம்மல்' என்ற கவிதையில் குறிப்பது போல - 'நிறம் என்னால் சொல்ல முடியவில்லை பிரச்சினைகள் பலதும் கலந்த மைம்மல்'' இந்த மைம்மலின் படிதல் தொகுப்பின் கவிதைகள் பலதிலும், சகல கவிதைகளின் நடையிலும் செறிந்துள்ளது. கவிதைகள் சகலதையும் படித்து முடிக்கும் ஒரு வாசகன் ''கவிஞனே சொல்கின்ற மைம்மல் வீதியில் மெதுவாக மைம்மற் பொழுதிற்குத் தோதாய் நடைபோட்ட அனுபவத்தைப் பெறுகிறான்.

போர்க்காலச்சூழலில் எழுந்த கவிதைகள் ஆயினும் அதன் தாக்கங்களை சிறிதேனும் ஆர்ப்பரித்தல், முழக்கங்களின், அதீத உருக்கவுணர்ச்சி சாராமல் ஒரு சாட்சி நிலையில் நின்று பேசுகின்றன.

'பிரிந்து போனவர்கள்', என்னும் கவிதை இன்றைய போர்க்கால சூழலை இப்படிச் சொல்கிறது. ''*நமக்கான காலம்/ போய் விட்டதைப் போலுள்ளது/ யுத்தம் வந்து/ ஊர்களுக்குள் நதிகளையும் சிற்றாறுகளையும் புகவிட்டு/ வாரியடித்துக் கொண்டு போயிருக்கிறது/*- வாரியடித்துக் கொண்டு போயிருக்கிறது' என்ற சொல்லே சகலவற்றையும் சுட்டியிருக்கிறது. யுத்தம் விளைவித்த அனர்த்தங்கள் முழுவதையும். காடு, மந்து பத்தின நாட்கள், வெறுமைக்குத் திரும்புதல், இந்த வசந்தம், பிரிந்து போனவர்கள், உயிர்த்தெழுதல், எப்போதாவது ஒரு நாள்- இப்படிப்பல கவிதைகளும் சிறந்த அனுபவத்தை வாழ்வனுபவத்தை கலையுணர்வோடு பரிமாறுகின்றன. தேறாத கவிதைகள் எனவும் சில உள்ளன. எனினும் அவை கூட - செழுமைப்படுத்த வேண்டிய வசன உருவில் துருத்தி நிற்பனவாயிருப்பினும் - தொகுப்பினைப் படித்து முடிக்கையில் தொனிப்பொருளில் ஒன்றித்து நின்று தருகின்ற மொத்த அனுபவம் வித்தியாசமான ஒரு வழங்கல் என்பது என் கணிப்பு.

நூலின் பின் அட்டையில் வெளியீட்டாளர் குறிப்பிடும் - 90களின் பின் ஈழக்கவிதைக்கு வளம் சேர்க்கும் நட்சத்திரனின் கவிதைகளில் உணர்வின் படிமங்களும் சிந்தனையின் படிமங்களும் யுத்த கால வாழ்வின் யதார்த்தத்தோடு பின்னிப்பிணைந்துள்ளன. பல கவிதைகள் புகழ் பெற்ற ஒல்லாந்து ஓவியங்கள் போல உறைந்து போன வாழ்க்கைக் கோலங்களைச் சித்திரிக்கின்றன'' என்பதோடு எனக்கு இன்னும் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. ரஷ்யாவின் கீழைத்தேய பண்பு விரவிய நாவல்களின் - முக்கியமாக சிங்கீஸ் அய்த்மத்தோவ் போன்றோர் - துயர் செறிந்த நடையழகும் அனுபவப் பகிர்தலும் எனக்கு ஞாபகம் வருகிறது. இதன் தாக்கம் இவரிடம் இருத்தல் கூடும். ஆயினும் இவரது கவிதைகளின் வரவு தமிழிற்கு ஒரு புதிய வளமாக வந்து சேர்ந்துள்ளது என்பதில் ஐயமில்லை. ஆயினும் இனிமேலும் கவிதைகள் இதேபாணியையே ஒட்டி நகருமாயின், குறித்த பாணிக்குள்ளே தேங்கி விடக் கூடிய ஆபத்தும் உண்டு என்பதையும் சுட்டியே ஆகவேண்டும்.

மேலே சுட்டிய விமர்சனங்களின் இறுதியில் கவிதைத் தொகுப்புகளின் முதலாவது இடத்தைப் பெற நட்சத்திரன் செவ்விந்தியனின் வசந்தம் - 91 என்பதே தகுதியுடையதாக உள்ளது. மேலும் சக்கரவர்த்தியின் யுத்த சன்யாசம், அ.கந்தசாமியின் 'கானல் நீர் கனவுகள்' என்னும் இரண்டையும் 2ம், 3ம் நிலை வரிசையில் நிரற்படுத்தலாம் என்பதும் என் அபிப்பிராயம் ஆகும். இவ்விடத்தில் இன்னும் ஒன்றைச் சுட்டுதல் தரும். 1994ல் புலம் பெயர்ந்த கவிஞர்களின் தொகுதிகளின் வரவே அதிகமாக உள்ளது. அவர்களது அக்கறை மேலீட்டால் அவர்கள் இன்னும் அதிகம் சாதிக்கக்கூடும் . அதற்காக அவர்கள் முயலுதல் வேண்டும்.

---

# மூன்று செம்மலர்கள்

தமிழ்நாட்டில் 'மணிக்கொடி' பரம்பரை போல நம்நாட்டில் 'மறுமலர்ச்சி' போல இஸ்லாமிய சிருஷ்டி கர்த்தாக்கள் பலரை உருவாக்கிய இதழ் 'இன்ஸான்' 70களில் சமுதாய சீர்திருத்த இலக்கியப் பணிபுரிந்த துணிவுமிக்க வாராந்திரி 'இன்ஸான்'. தம்மை ''இன்ஸான்'' பரம்பரை என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறார்கள், அதில் எழுதிவந்தவர்கள். அந்த செம்மலர்ச் செடியில் முகிழ்ந்து மலர்ந்து மணம் பரப்பிய மூன்று மலர்கள் முன்பிருந்த ''அஸ்வர்'' ஆட்சியிலோ இப்போதிருக்கிற 'அஷ்ஃரப்'' ஆட்சியிலோ பாராட்டப்படாமல் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அந்த மறக்கடிக்கச் செய்யப்பட்ட மூன்று செம்மலர்களும் இவர்கள்தான்.

1. கிழக்கிலே மலர்ந்த ஓட்டமாவடி எஸ். எஸ். எம். ஹனிபா.
2. மேற்கில் மலர்ந்த பாணந்துறை மொயீன் சமீன்.
3. வடக்கில் மலர்ந்த யாழ்ப்பாணம் ரஹீம்.

மூவருக்கும் உள்ள பொதுத்தன்மைகள் இவை:

அ. சமத்துவம் சமதர்மம் இவற்றை ஆசித்து அடக்கி ஒடுக்கப்பட்டவர்களுக்காக எழுதியவர்கள்.

ஆ. சமுதாய சாக்கடைகளையும் அரசியல் அசிங்கங்களையும் அம்பலத்தில் ஏற்றியவர்கள்.

இ. அரசியல் அநாதைகளாக்கப்பட்டதால் இலக்கிய வரலாற்று ஆய்வாளர்களாலும் கைவிடப்பட்டவர்கள்.

ஈ. மூவரும் இலக்கிய உலக வாழ்வில் வெள்ளிவிழா கண்டவர்கள்.

உ. மூவருமே வறுமையான நிலையில் அன்றாட உணவுக்குப் போராடும் ஏழ்மை நிலையில் வயிற்றுக்குணவின்றி இளமையில் வாடியவர்கள்.

ஊ. எல்லோருமே இருபத்தைந்துக்கும் அதிகமான சிறுகதைகளை எழுதி வெளியிட்டவர்கள்.

எ. வறுமை, குடும்பச்சுமை போன்ற காரணத்தால் காதலிலும் தோல்வி கண்டவர்கள்.

ஏ. அழுக்குமிக்க அரசியலையும் அரசியல் போக்கிரிகளையும் அடியோடு வெறுப்பவர்கள்.

ஐ. தமது ஆத்ம திருப்திக்காக மட்டுமே எழுதி அமைதியாகச் சமூகப்பணி புரிபவர்கள்.

ஒ. மூவரும் தலா ஒரு பிரசவம் செய்தவர்கள்:

ஹனிபா:- ''மக்கத்துச்சால்வை''

சமீன்:- ''புண்ணியத்தின் பாதுகாவலர்கள்''

ரஹீம்:- ''யாழ்ப்பாண முஸ்லிம்கள் வரலாறும் பண்பாடும்''

மூன்றாமவர் தமது அனைத்துப் படைப்புக்களையும் சொத்துக்களையும் புலிகளின் அகோரப் பசிக்கு கொடுத்துவிட்டு உடுத்த உடையுடன் 30.10.1990 இல் அகதியாக்கப்பட்டுவிட்டதால் சிறுகதைத் தொகுதி ஒன்று கூடப் போடமுடியாமலிருப்பவர்.

மூவரிலும் மூத்தவர் ஆசிரியத் தொழிலை ஆசித்து முடியாமல் அரச ஊழியர் ஆனவர். பின்னவர் இருவரும் தமிழாசிரியர்களாய் 30 வருடங்களுக்கு மேல் தமிழ் வளர்த்தவர்கள்.

இவர்கள் மூவரையும் முஸ்லிம் இலக்கியப் படைப்பாளர் சார்பில் ''சரிநிகர்'' வாழ்த்த வேண்டும். அரசு வழங்கும் ''ப''க்களை விட பலநூறு கோடி மடங்கு பெறுமதி வாய்ந்தது, சரிநிகர் வழங்கும் பாராட்டு!

*கிரனார்*
*மகரகமை*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாம்புச் செட்டைகள்

## கி.சிவஞானம்

எனக்கு பாம்புகளைப்பிடிப்பதில்லை. அவை மனிதர்களைக் கொல்கின்றன. ஆனாலும் அவை பரிதாபமான உயிர்கள் என நான் உணர்ந்திருக்கிறேன். அவற்றின் தலை, அதில் ஒளி வீசிக்கொண்டிருக்கும் கண்கள், அதன் செதில் செதிலாகப்போர்த்தப்பட்டிருக்கும்உடம்பு எல்லாமே எனக்கு அவை மீது ஒருவித வெறுப்பைத் தந்து கொண்டிருந்தது. ஆனாலும் நான் பாம்புகளைக் கொல்வதில்லை. எனக்கு இப்போதும் ஞாபகமாய் மனதில் பதிந்திருக்கிற இரண்டு பாம்புகளை நீங்களும்எங்கேனும்பார்த்திருப்பீர்கள். அவைசாரப் பாம்புகள்.

அந்த இரண்டு பாம்புகளையும் அவற்றின் கட்டிளம் வயதிலிருந்தே நானறிவேன். அவற்றிற்கு என்னைத் தெரிந்திருக்கும் அறிவிருக்குமோ எனக்குத் தெரியாது. எது எப்படியோ அவைகள் பலதடவை என்னை ஏமாற்றியிருக்கின்றன. என்னை மட்டுமென்ன அம்மா கூடப் பலதடவை ஏமாந்து போயிருக்கிறார். அந்த இரண்டு பாம்புகளையும் தொடர்ந்து அவதானித்து வந்திருந்தால் நீங்கள் கூட ஏமாந்து போயிருக்கக்கூடும்.

அந்தப் பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து முற்றி முறுகி ஒன்றாகிக் களித்திருக்கின்ற வேளைகளில் நான் அவற்றை ஒட்டி நின்று பார்த்திருக்கிறேன். ஒரு சின்னப்பிள்ளையைப்போல முற்றி முறுகி துள்ளியெழுந்து இரண்டுதலைகளையும் வெவ்வேறாக்கி சீறிப்பாய்ந்து செல்லமாய் கொஞ்சி மகிழ்ந்திருந்த அந்த வேளைகளில் என் அம்மா சிவப்புப்பட்டுப் போட்டு கும்பிட்டிருக்கிறார், வேண்டுவதெல்லாம் கிடைக்குமென்று.

அந்த அழகற்ற சாரைப்பாம்புகள் எனது வீட்டிற்குப் பின்புறமாகவே குடியிருந்தன; எங்கள் மனங்களைப்போல் குப்பைகளால் நிறைந்திருந்த என்வீட்டு பின் வளவு துரவுப் பள்ளத்தில், அந்த குப்பைப் பள்ளத்தின் மேற்புறத்தில் தென்னம் மட்டைகளும் ஓலைகளுமாய் நிழலூட்டின. அவைக்கு வேண்டிய உணவுக்கும் பஞ்சம் ஒருபோதும் வந்திருக்காது. அந்தப் பள்ளத்தின் குப்பை நிழலிலேயே நிறைய எலி வளைகள் இருந்தமையால் அவை பட்டினி கிடந்திருக்குமென நான் உணரவில்லை. அதை விடவும் சிலவேளைகளில் அவை எனது வீட்டுக்கூரையில் குடியிருந்த எலிகளை வேட்டையாடவும் வந்து போய்க்கொண்டிருந்தபடியால், அவை கொளுகொளுவென்று வளர்ந்து கொண்டேயிருந்தன. நான் முதன்முதலில் அவற்றைப் பார்த்தை விடவும் ஒரு வாரத்தில் அவை இரண்டு மடங்காக பெரிதாக வளர்ந்து கொளுத்திருந்தன.

உங்களுக்கு பாம்புகளின் வளர்ச்சியைப் பற்றி ஏதாவது தெரியுமா? அவை குட்டியாக இருந்து பெருத்து வளரும் காலம் வரை அவற்றிற்கு என்ன நடக்கிறது என நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? என்னை அந்தப் பாம்புகள் ஏமாற்றிய அந்த நாளிலிருந்து நான் அவற்றை உன்னிப்பாக அவதானித்து வந்திருக்கிறேன்.

நான் ஒரு நாள் அவற்றிடம் ஏமாந்து போனேன். வகுப்பு முடிந்து வீடு வந்து உடுப்பு மாற்ற எனது அறைக்குள் சென்ற நான் திடுக்கிட்டுப் போனேன்.

'பாம்பு - பாம்பு'' எனக் கத்தியபடி அறைக்குள்ளால் பாய்ந்தடித்து ஓடிவர என் அண்ணனின் பிள்ளைகளோ கைகொட்டிச்சிரித்தபடி நாலாபுறமும் ஓடியாடிக்கொண்டிருந்தார்கள். எனக்கோ எரிச்சலாய்ப் போய் இளையவளின் முதுகுச் சட்டையைப் பிடித்து உலுப்ப ''சித்தா அது பஞ்சடைச்ச பாம்புச் செட்டை'' என்றபடி பல்லெல்லாம் தெரிய பளீரெனச் சிரித்தாள். அசடு வழிந்தபடி அறைக்குள் புகுந்து கட்டில் காலுடன் தலையைப் பிடித்திழுத்தேன். நம்பமுடியாதபடியான அசல் பாம்பாய் அது வளைந்து நெளிந்து நீண்டு வந்திருந்தது. திடுக்குற்றுப்போனேன்என் பின்வளவுப்பாம்புகளின் சாயலாய் அதிருந்தது. அதன் தலை, கண்கள், உடம்பின்செதில் செதிலான தோலமைப்பு எல்லாமே என் நட்புப் பாம்புகளைப் போலவே இருந்தன.

''பாம்புகள் வளர வளர செட்டை கழற்றும்'' இது அம்மா.

''நான் உப்பிடி எத்தினை பாம்புகள் செய்தனான்.'' அண்ணாவின் மூத்த புத்திரன்.

என்னை ஏமாற்றிய பெருமையில் வாயடித்தான். ஆனால் நானோ எனக்குள் எழுந்த வினாக்களில் மனம் புதைய எங்கோ தொலையத் தொடங்கினேன். பாம்புகள் ஏன் செட்டை கழற்றுகின்றன? பாம்புகள் எத்தனை தோல்களால் போர்த்தப்பட்டிருக்கும் அடிக்கடி செட்டை செட்டையாய் கழற்றுவதற்கு?

000

அவள் அழகி அவளை எல்லோருக்கும் பிடிக்கிறது. எனக்கும் அவளைப் பிடித்திருக்கிறது. அதைவிட மேலாகச் சொன்னால், அவள் என்னைப் பிடித்திருக்கிறாள். எனக்குள் புகுந்திருக்கிறாள். நீங்கள் எண்ணுவதைப் போல் எனக்கும் அவளுக்கும் காதல் இல்லை. காமமுமில்லை. நட்பு? அதுவுமில்லை. அப்ப உனக்கும் அவளுக்கும் என்ன மண்ணாங்கட்டியா? என நீங்கள் கேட்பதாய் நான் உணர்கின்றேன். எனக்கும் சொல்ல முடியவில்லை அது எதுவானாலும் தான் உங்களுக்கென்ன? ஏதோ ஒன்று மறக்க, மறுக்க மறைக்க முடியாத ஒரு ஈர்ப்பு; அவ்வளவுதான்!

அவள் அழகியென்றா சொன்னேன். என்னைப் பொறுத்தவரை அவள் பேரழகி. நீண்ட விழிகள், சிவந்தநிறம், ஒல்லியிடை, அளவான மார்புகள், கருங்கூந்தல் எதுவும் அவளுக்கில்லை.



அளவான முடி, சற்றுக் கறுப்புக்கலந்த பொது நிறம். மேல்வாயில் ஒரு பல்லுத்தெத்தி, குண்டான உடம்பு என அவள் இருந்தாள். ஆனாலும் அவள் எல்லோருக்கும் அழகாகத் தெரிகிறாள். உண்மையில் அவள் அழகாகச் சிரிக்கிறாள். அழகாகக் கதைக்கிறாள். அன்பாக அழகோடு பழகுகிறாள். அவள் கூலிக்காக வரவேற்கும் வரவேற்புப் பெண்ணைப் போலல்லாது இயல்பாக, எளிமையாக நேர்மையோடு பழகுகிறாள். நான் எனது காலத்தில் சந்தித்தவர்களில் அவள் மட்டும் தான் அப்படி. அவளுக்கு கண்ணீர் இலகுவில் வந்து விடுவதில்லை. அவளுடைய முகம் அவள் துன்பத்தில் அழுவதையும் இன்பத்தில் மகிழ்வதையும் துல்லியமாக எடுத்துக்காட்டும். அவள் பிழையான ஒன்றிற்காய் வாதிட்டதில்லை.

''உனக்கு மனிதனின் வளர்ச்சி பற்றி என்ன தெரியும்?'' என்றொரு நாள் கேட்டாள். எனக்குச் சிரிப்பு வந்தது.

மருத்துவத்தாதியாக வேலை செய்ய நான் பெற்ற பயிற்சியில் இவை எனக்கும் கற்பிக்கப்பட்டிருக்கும் என அவள் அறியாளோ என நான் நினைத்தேன். மிக இலகுவாய், ''குழந்தையின் உடல் நிறை இரண்டு இரண்டு மடங்காக முதல் 10 வயது வரை அதிகரிக்கும். பின்னர் சீரான வளர்ச்சி 25 வயது வரை நிகழலாம். அதன் பின் உடல் வளர்வதில்லை''

என சடக்கென்று சிந்திக்காமல் சொன்னேன்.

''அது மட்டுமா?'' என்று அவள் கேட்டாள்.

''இல்லை''

''குழந்தையின் மூளை, மன வளர்ச்சி என்பன அதன் முதல் ஐந்து வருடங்களில் மிக மிக அதிகமாகவும் அதன்பின்பு ஓரளவே, வளர்ச்சியிருக்கும். அதுவும் பதினெட்டு வயது வரை தான்.'' என்று துடுக்காகச் சொன்னேன்.

'' நீ சரியாகத் தான் பாடமாக்கியிருக்கிறாய்'', என்றாள் சற்று நக்கலாக. எனக்கு எரிச்சல் வந்தது. என்னுடைய ஈகோவில் (ஆளுமையில்) அவள் கைவைப்பதாய்ப் படவே நான் ''சரி சரி நீ சொல்லு பார்க்கலாம்'' என்றேன். ''நீ முதல் சொன்னது சரி. பிற்பாடு பிழை'' என்றாள். நான் விழித்தேன்.

''விளங்கவில்லையா?'' என மீண்டும் குத்தலாய்க் கேட்டாள். ''எங்கள் மனம் வளர்வதே இல்லை என்றா சொல்கிறாய்?'' என்றவள் விழிகளை ஊருடுவி நின்றேன். அவளை மட்க்கி விட்ட எண்ணத்தில்.

''இல்லை இல்லவேயில்லை. நான் அப்படிச் சொல்லவில்லை'' என்றவள் தொடர்ந்தாள். ''எங்கள் மனவளர்ச்சி தீர்மானிக்கப்பட்ட பாதைகளினூடு நெருக்கித் தள்ளப்படுவதாய் நீ உணர்வதேயில்லையா?'' நீண்ட சுவாசமொன்றை உள்ளெடுத்து ஆழமாய் சுவாசித்தேன்.

''நீ எப்போதாவது இலகுவாய் இருந்திருக்கிறாயா? உன் அடி மனதிலிருந்து நீ சிரித்திருக்கிறாயா? உன்வட்டங்களுக்கப்பால் நீ மனிதர்களை மனிதர்களாய் மதித்திருக்கிறாயா?'' அவள் கேட்க கேட்க எனக்கு பிரபஞ்சத்தில் பிரளயம் ஒன்று நிகழ்வதைப் போல் மண்டை கிறுகிறுத்தது. என் முகத்தில் முள்ளாரம் கொண்டு இராவியதாய் மனம் எரிந்தது. மௌனமாய் நிமிர்ந்து அவளைப் பார்த்தேன். இயல்பாய், வெள்ளையாய், தாமரைப் பூப்போல்சிரித்தபடி கேட்டாள், ''நீ ஏன் பாரம்சுமக்க வேண்டும். நீயாக சுமக்கின்றதும், உன் மேல் சுமத்தப்பட்டதுமான இந்தப் பாரங்களையெல்லாம் எப்போது இறக்கப்போகின்றாய்?'' என்றாள் அவள்.

''நான் எனது வீடு, எனது குடும்பம், குடும்பப்பெருமை, எனது படிப்பு, எனது கடவுள் இவையே எனது உயிர்க்குறியீடுகள். அவை எனக்கானவை, என்றேன் நான், சற்று வெட்கத்துடன்.

அவள் சற்று ஆத்திரத்துடன் ''இவை உனது செட்டைகள், உன் வளர்ச்சி பிரபஞ்ச வெளியில் உன் உயிர்ப்பை தடுக்க உன்னைப் போர்த்தியுள்ள பாம்புச் செட்டைகள் என்றாள் அவள்.

000

''சித்தப்பா, சித்தப்பா என்றபடி என்னைச் சூழ்ந்த சிறுசுகள் சத்தத்தில் மனம் மீண்டும் இருப்பை நாடிவர நான் அவர்களைப் பார்த்தேன். ஒவ்வொருவர் கைகளிலும் பாம்புச் செட்டைகள். தலைக்கு சணல் கயிற்றில் சுருக்குத்தடம் போட்டு காற்றில் பறக்க விட்டபடி ''கா... கூ' என்று கத்தியபடி ஒன்றையொன்று வெருட்டி விளையாடிக்கொண்டு நின்றனர்.

அவளுடன் மனம் விட்டுக் கதைத்த அந்த நாள் உண்மையில் எனக்கு எத்தனை துயரமானது. என்னில் உண்மை அன்பு வைத்து உயிராய் நேசித்த என்னவளை நான் பிரிந்த நாள். எனது கொள்கைகள், எனது போக்குகள், பிடிவாதங்கள், எனது எதிர் பார்ப்புக்கள் எவற்றிற்கும் பொருந்தவில்லை என நான் என் காதலியைப் பிரிந்த அன்று தான் அவளைச் சந்தித்தேன். அன்றவள் அடித்துக் கூறினாள், '' நீ இன்னமும் உன்னைப் போர்த்தியபடியே பாம்புச் செட்டைகளுடன் தான் வாழ்கிறாய் என்று'' உண்மையில் பாம்புகள் வளரும் பொழுது செட்டைகளைக் கழற்றுகின்றன. ஆனால் மனிதர்கள் வளரும்போது ஒன்றன் மேலொன்றில் மேலும் மேலும் செட்டைகளே உலகமாய்....

நன்றி: வெளிச்சம்.

---

துவங்கி விட்டார்கள் இனி
காற்றில் குருதி மணக்கும்
மனிதனின் சரீரம் சந்தியில்
சிதறிக் கிடக்கும்
மனிதக் குட்டிகள்
கருவறையில்
சுருண்டு இருப்பதாய்
எலும்புக் கூடுகள்
கருகி இருக்கும்
கரிக் கும்பத்தின் அருகில்.

தமிழன் வேறு
முஸ்லிம் வேறு
என இனம் பிரிப்பர்
ஆளுக்காள் முறைப்பர்.

இனி தமிழ் நண்பனும்
எனக்கு இல்லை
பட்டிருப்புக்குள் நான்
போக மாட்டேன்
முஸ்லிம் தெருவுக்குள்
என்னை தேடி வரமாட்டான்
அவன்.

கிளிநொச்சி கடலில்
படகுகள் நொறுங்கின
அங்கும்
பங்கருக்குள் குண்டுகள்
போட்டு மனிதன் சிதறினான்
எங்கள் ஊர் துப்பாக்கிகளும்
கதறும் இனி

ஒரு நாளைக்கு
இரண்டு மூன்று போராவது
இல்லத்துப் போவர்

படைக்கு ஆள்
சேர்ப்பர்,
ஊருக்கு எல்லை போட்டு
காவல் புரிவர்
தெரு நாய்கள் கத்தும் இனி
வித்தியாசமான ஆயுதம்
ஏந்திய மனிதனைக்
கண்டு.

வீதியில் பாய் போட்டு,
கண் விழித்து,
கஞ்சிப் பானை வைத்து
ஊரைப் பாதுகாக்க வேண்டும் இனி.

துவங்கி விட்டார்கள்,
எங்கேனும்
மனித சுவாசத்தைப் பறிக்கும்
-குண்டுகளின்,
சன்னங்களின்
சத்தத்தை கேட்டே
மனம் உறங்கும் இனி.

2809/995

காத்தான்குடி றபாய்டீன்

---

## புகலிட இலக்கியம்

பனி நாளின் காற்றுத் தேவதை
முத்தமிட்டால் வாய் வெடிக்கும்
காவியணிந்து கிளைகள் விட்டு
இலைகள் துறவறம் பூணும்

"பிரிவது எனக்கும் துயரம் தான்
வதைகளிற் கொடியது
இந்தப் பிரிவு
உன் அம்மா இதை அறியதவளா?
எனினும் எனினும்
வாழ்வதற்கு உயிர் வேண்டும்.
இடிவருமுன் தப்பி விடு என் மகளே"

வானம் வழி அனுப்பி விட்டுக்
காற்றிற் பெருமூச்சு விடும்
மிதிபடப் போவதறியாப்
பனிக்குஞ்சு புலம்பெயரும்

வீரமகாளிதாசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுய அடையாளத்தை இழந்த 'தாய்'மை!

ஜனனி

சென்ற இதழின் தொடர்ச்சி...

இப்படியாக தெய்வத்திற்கு நிகராக ஒப்பிடும் தாய்மை எந்நிலையிலும் வற்றாத அன்பு, ஓயாத உழைப்பு, சகிப்புணர்வு, தாராள மனப்பான்மை, சுயதியாகம் போன்றவற்றை பெண்களிடம் எதிர்பார்க்கிறது. இவற்றைப் பெண்கள் மகிழ்ச்சியுடன் வழங்குவதாகவும், இத்தகைய தாய்மையை வழங்குவதற்கான உள்ளாற்றலைப் பெண்கள் இயற்கையாகக் கொண்டிருப்பதாகவும் நம்பப்படுகிறது. இவற்றை எந்நிலையிலும் வழுவாது கடைப்பிடிப்பவளே நல்ல பெண் ஆவாள். எந்நேரமும் குழந்தைக்கு அன்பை வழங்கும், எந்த நிலையிலும் குழந்தைக்கான கடமைகளை நிறைவேற்றத் தவறாதவளே நல்ல தாய். தனக்கான பிரதியுபகார எதிர்பார்ப்புகள் எதுவுமற்று தனது மன நிலையை எந்நேரமும் உற்சாகமாக வைத்திருக்க முடிந்தாலே பெண்ணால் வற்றாத அன்பையும், குழந்தை எதிர்பார்க்கும் போதெல்லாம் அதன் அருகில் இருக்கவும், அதற்கான பராமரிப்பை வழங்கவும் முடியும். இங்கு பெண் தனக்கென சொந்தத் தேவைகள், சொந்த உணர்வுகள் எதுவுமில்லாமல் குழந்தைக்கேற்றவாறு தனது தேவைகள் உணர்வுகளைக் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது இதன் உள்ளர்த்தம் உடலியல்-உளவியல் ரீதியாக இயந்திரமாயிருக்கும்படி பெண்களைக் கேட்டுக் கொள்வதே.

புதிதாகப் பிறந்த குழந்தையைப் பராமரிப்பதில் ஈடுபட்டிருக்கும் பெண்ணுக்கு தாயார் மாமியார், சகோதரிகள், மைத்துணிகள், உறவினப் பெண்கள் என்று யாரும் உதவி செய்தாலும் குழந்தை பராமரிப்பின் முழுப் பொறுப்பும் அப்பெண்ணையே சார்கிறது. சுற்றிச் சுற்றி ஒரே மாதிரியான வேலைகள் கொண்டதே தாய்மை. எவ்வளவுதான் அலுக்காது செய்தாலும் தாய்மைக் கடமைகள் திருப்தியைத் தருவதில்லை. ஒரு வேலையைச் செய்து முடிக்கும் போது இன்னொரு வேலை காத்திருக்கும். அத்தோடு வீட்டு வேலை, கணவன், குழந்தைகளுக்கான தேவைகளை வழங்குதல் போன்றனவும் அவளது கடமைகளே. இவ்வளவு வேலைச் சுமைகளுக்குள்ளும் அமிழ்ந்திருப்பவளிடம் மகிழ்சியான மனநிலை எங்கிருந்து வரும்? வேலைப்பழுவும் களைப்பும் பெண்ணிடம் எரிச்சலான மனநிலையை ஏற்படுத்துகிறது. குழந்தைகளின் சிறு தொந்தரவும் அவளைச் சினமடையச் செய்கிறது. சகிப்புத்தன்மை அற்றவளாக் குகிறது. இந்நிலையில் தொடர்ச்சியான அன்பை அவளால் குழந்தைக்கு எப்படித் தர முடியும்? இவற்றுடன் வறுமையும் ஒழுங்கற்ற கணவன்-மனைவி உறவும் சேர்ந்து கொண்டால் பெண்ணின் நிலை என்ன?...? இத்தகைய நிலையிலுள்ள ஒருத்தியால் எங்ஙனம் "நல்ல"" தாய்மையை வழங்க முடியும்?

கணவன், மனைவி பிரச்சினைகளின் போது கணவன் மீது காட்ட முடியாத கோபத்தை அநேகமான பெண்கள் குழந்தைகள் மீது காட்டுவர். மூர்க்கமாகக் குழந்தைகளை அடிப்பர். ஆணாதிக்க சமூகக் கண்ணோட்டத்தின்படி குழந்தைகள் ஆணின் வாரிசுகளாயிருப்பதால் கணவன் மீதான வெறுப்பால் குழந்தைகளையும் வெறுப்பர். குழந்தைகளைக் கோவிப்பதும், வெறுப்பதும் தாய்மையின் தன்மையா? அப்படியானால் தாய்மைக் கருத்தாக்கம் பெண்ணின் யதார்த்த வாழ்வில் முரண்பாடான ஒன்றாக வல்லவா உள்ளது?

நல்ல கணவன் மனைவி உறவும், மாமன், மாமி, மைத்துனரின் அன்பு, உறவினர் நண்பர்களின் நெருக்கம், தாய்வீட்டாரின் பராமரிப்பு, வசதியான வாழ்வு, வேலையாள் உதவி போன்றவை தாய்மைக் கடமைகளிலீடுபடும் பெண்ணுக்கு ஏற்படும் சலிப்புணர்வைக் குறைக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் வாழும் பெண்கள் கூடியளவு தாய்மையை வழங்க முன்வருவர்.

ஒரு வயதிற்கும் குறைந்த குழந்தைகளையுடைய தாய்மார் எப்பொழுதும் குழந்தைகளுடனேயே இருக்க நேருகிறது. அத்துடன் தாயின் முழுக்கவனத்தையும், நேரத்தையும் தம்பால் ஈர்த்து வைத்திருப்பவர்களாக இக்குழந்தைகள் உள்ளனர். இது பெண்ணை பௌதீக ரீதியாக மாத்திரமல்லாது உணர்வு ரீதியாகவும் கட்டிப் போடுகிறது. பிறரின் உதவிகளுமற்று தனியாக அனைத்துக் கடமைகளையும் செய்ய வேண்டிய நிலையிலிருக்கும் பெண் இத்தகைய நிலையில் கூடிய தாக்கத்துக்குள்ளாகிறாள். அயலவர், நண்பர்கள், உறவினரின் வீடுகளுக்குப் போகவும் வைபவங்களில் பங்குபற்றவும் கதைத்துப் பொழுது போக்கவும், பத்திரிகை பார்க்க, வானொலி கேட்க, சினிமா பார்க்க... எதற்குமே அவளுக்கு நேரம் கிடைக்காது. கணவனுக்கு கூடியபட்சம் கிடைக்கக் கூடிய இத்தகைய வாய்ப்புகள் குறைந்த பட்சம் கூட பெண்ணுக்கு கிடைப்பதுமில்லை. அத்துடன் அவளது சிந்தனைகளும் குழந்தை, அதற்கான கடமைகள், வீட்டுக்காரியம், கணவன் மற்றும் மற்றக்குழந்தைகளுக்கான கடமைகள் போன்றவற்றுடன் எப்பொழுதும் பிணைந்திருப்பதால் உற்சாகமான ஆரோக்கியமான மனநிலை என்பது அவளுக்கு இல்லாமற் போகிறது.



### தந்தையின் சமூகப் பாத்திரம்-சுய அடையாளத்தை இழந்த 'தாய்' பாத்திரம்

குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்பவர்களாக குழந்தைகளுக்கும் தாய்மைக்கும் பாதுகாவலர்களாக தந்தைமார் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர். தந்தைமார் உழைத்துக் கொண்டு வருபவற்றையே தாய்மார் வழங்குகின்றனர். இதனால் தந்தையின் பாத்திரம் தாயையும் விட உயர்வானதாகக் கருதப்படுகிறது. தந்தையின் உழைப்பு கட்புலனாகிறது. தாயின் உழைப்பு குடும்பத்தின் சேவை நலன்களை மையமாகக் கொண்ட கட்புலனாகா உழைப்பாயிருப்பதுடன் அது கருத்திற்கெடுக்கப்படுவதுமில்லை. தந்தைமாரே குழந்தைகளுக்கு கல்வியையும், தனது பெயருடன் கூடிய சமூக அடையாளத்தையும், சமூக அந்தஸ்தையும் ஏற்படுத்திக் கொடுப்பவர்களாகவும் கருதப்படுவதால் சமூகத் தராசில் தந்தையின் பாத்திரமே பெறுமதி வாய்ந்ததாகப் கணிக்கப்படுகின்றது. தாய் எவ்வளவுதான் தனது கடமைகளைச் செய்தாலும் அவள் பெறுமதி மிக்கவளாகக் கருதப்படுவதில்லை. இது பெண்ணைத் தனது தாய்மைக் கடமைகளை மேலும் மேலும் சிறப்பாகச் செய்ய நிர்ப்பந்திக்கிறது. இதனால் பெண்ணின் பரந்த தளத்திலான சிந்தனை கட்டுப்படுத்தப்பட்டு, தனது தாய்மைக் கடமைகள் பற்றிய சிந்தனையுடனும் அதை மேலும் சிறப்பாக்குவது பற்றிய சிந்தனையுடனும் கட்டுண்டு கிடக்கச் செய்கிறது. பெண்ணின் உணர்வுகள் கணவன் - குழந்தை - குடும்பம் எனப்பிணைந்து அவளைப் பற்றிய சிந்தனைகளைக் கூட இல்லாமற் செய்வதால் பெண் தனக்குத் தானே மறைந்து போகிறாள். அதன்பின் தன்னை குழந்தையின் தாயாக மாத்திரமே அவளால் காண முடிகிறது. அவளது இந்த உணர்வு நிலையை சமூகம் மேலும் உறுதிப்படுத்துகிறது. திருமணத்தின் பின் பெண், கணவனாலும், பின் குழந்தைகளாலும் அடையாளம் பெறுகிறாள். அவர்கள் மூலமாகவே அவளது சமூக இருத்தலுக்கு அடையாளம், அங்கீகாரம் கிடைப்பதாகக் கருதப்படுகிறது. 'இன்னாரின் மனைவி", 'இன்னாரின் தாய்" என அடையாளப்படுத்தப்படுவதால், பெண்கள் தம்மை 'இன்னாரின் மனைவி", 'இன்னாரின் தாய்" எனக் காட்டிக் கொள்வதன் மூலம் சமூகத்தில் தமது இருத்தலை தமக்குத் தாமே தெரியப்படுத்திக் கொள்கின்றனர்.

சிறு குழந்தைகள் மகிழ்சியையும், உற்சாகத்தையும், கலகலப்பையும் கொண்டு வருகிறார்கள். குழந்தைகளுடனான உறவு வினோதமானதும். மனதிற்கு மென்மையான புத்துணர்ச்சியை ஏற்படுத்துவதுமாயிருக்கிறது. எனினும் தாய்மையின் இரக்கமற்ற கடமைகள் இவற்றையும் மீறி பெண்களை வருத்துகின்றன. தாய்மைக் கடமைகள் என்றுமே எந்தப் பெண்ணுக்குமே திருப்தியைத் தருவதில்லை. எவ்வளவு தான் குழந்தைகளைத் திறமையாகப் பராமரித்தாலும் அவளது வேலையில் ஏதாவது குறை கண்டு பிடிக்கப்பட்டு சமூகத்தால் சுட்டிக்காட்டப்பட்டுக்கொண்டிருக்கும். இதனால் பெண்கள் மேலும் மேலும் திறமான முறையில் குழந்தைகளைப் பராமரிக்கவும் தாய்மைக் கடமைகளைப் பூர்த்தி செய்யவும் முயல்கின்றனர். தாய்மையின் அடங்காத எதிர்ப்பார்ப்புகளுக்கும் பெண்ணின் அலுக்காத அயராத வழங்கல்களுக்குமிடையே இடைவெளியொன்று என்றுமே நிலவி வருகிறது. தனது தாய்மைக் கடமைகளை திறமையாக பூர்த்தி செய்யவில்லை எனும் சமூக சுட்டிக்காட்டலாலும் பெண்ணின் சுய குற்றவுணர்வாலும் இவ்விடைவெளி நிரப்பப்படுகிறது.

அடுத்த இதழில் முடியும்

## உன் நினைவு....

மழைநீர்

கண்ணீர்

நீ பிரிந்து போன இந்த நிமிடங்கள்
எனக்கெந்த
மகிழ்ச்சியையும் தரவில்லை.
இருந்த
சுதந்திரமும் அற்றுப்போன உணர்வுகளைத்
தவிர.

நீயும் நானும்
இவ்வளவு கெதியில் பிரிவோம் என
நான் துளியும் எண்ணவில்லை.

இனி ஒரு நிம்மதி வேண்டி இறையடி சேரலாம்.

எதுவும் உன்னிடம் பேசமுடியாத படி நான்
ஒரு ஊமையாக இருத்தப் பட்டுள்ளேன்.
உன்னுடன் பேசிக்கொண்டிருந்த
இந்தப் பொழுதுகளைப் பற்றி
இப்போது மழையுடன் பேசுகிறேன்.

நினைவுகளுக்கென நான் மீட்டுப்பார்க்கிறேன்
நமது இறந்துபோன கடந்த காலங்களை.
இனியும் எவ்வளவோ
உன்னிடம் பேச வேண்டும்.
நான் தான் ஊமையாக்கப்பட்டிருக்கிறேனே.

நீ
இப்போது என்னுடன் இருந்தால்
உன்னை இறுக்கிக் கொண்டு
'ஓ'வென்று அழுதிருப்பேன் அல்லது
கதறியிருப்பேன்.

அழுது கண்ணீர் திரையாகிறது.
ஒரு துளியேனும் உனக்காயன்றி
விட்டதில்லை நான்.
பிரியேன் உன் நினைவுகளை விட்டும்
உன்னை விட்டும்

இப்போதெல்லாம்
எனக்கு பெறுமதியான பொழுதுகளாய்
இவை தெரியவில்லை,
நீயும் நானும் வாழ்ந்த
அந்தக் கணங்களை விட.

ஆத்மா பிரிந்த ஆவியாக நான் கிடக்கிறேன்
எனக்குள், உனக்குத் தெரியாமல்
நீ போய் விட்டாய் வெகுதூரம்
உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்
இறுதி நேரங்களில்
என் விழிகள் நனைகின்றன.

ஆத்மாவைப் பிரிந்த ஆவியாய்
கிடக்கிறேன் நான்.

10.06.96 நஜீபா

## இனியுமொரு தடவை வேண்டாம்!

மருதமுனை
மழுங்கியது அறிவு முனை
அழுகிறது - என்
எழுதுகோலின் முனை

யாரை நொந்துகொள்வது
யாரிடம் நீதி கேட்பது
நீதி கிடைப்பதற்கு - மனு
நீதிச் சோழனின் செங்கோலாட்சியா?

நாசிகள் தலைவன் மரணிக்கவில்லை
நாசிகள் தலைவன் மரணிக்கவில்லை
தூசி படிந்த அத் தூரத்து தீவினில்
நேசிப்பவர், உளுத்துப்போன சிந்தனையை
யாசிப்பவர் பலர்

மரத்துப்போன
அரக்கரியில் தலைவர்கள் உருவில்
மறுபிறவி எடுத்துள்ளான்
மறுபிறவி எடுத்துள்ளான்

இரண்டாம் உலகப்போர்
திரண்டு வந்தது நாசிப்படை
மிரண்டு, முழிபிதுங்கி கதறினர்
புரண்டு அழுதனர் யூத மக்கள்

கோரப் பற்களிற் சிக்கிய உயிர்கள்
கொதிக்கும் நீருள் இறக்கப்பட்டுத்
தலைமூடி பிடுங்கப்பட்டுக்
கொழுப்பு வடிக்கும் உலைகளுட்
கொடுந்தீயினில் கருக்கப்பட்டனர்

மருதமுனை என்ன விதிவிலக்கா

எத்தனை குழந்தைகள்?
எத்தனை கர்ப்பிணிகள்?
எத்தனை இளைஞர்கள், யுவதிகள்?
எத்தனை முதியோர்கள்?
அத்தனை பேரும் கருகினரே

வேண்டாம்! இனியுமொரு தடவைவேண்டாம்!

இனியொரு தடவையும் வேண்டாம்.

திவ்யா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# போரின் முகங்கள்:

"கலையும் இலக்கியமும் அரசியல் சமுதாயச்சார்பு உடையன" என்ற கோட்பாட்டுடன்எழுபதுகளில்ஈழத்துக் கவிதை உலகில் நுழையும் சிவசேகரம் 'நதிக்கரை மூங்கில்', செப்பனிட்ட படிமங்கள்', 'தேவி எழுந்தாள்', 'ஏகலைவ பூமி', மற்றும் மொழி பெயர்ப்பு தொகுதிகளான 'மா சே துங் கவிதைகள்', 'பணிதல் மறந்தவர்' என்பவற்றுடன் இன்று 'போரின் முகங்கள்' எனும் புதிய தொகுதியையும் வெளியிட்டுள்ளார். கவிதை என்பதே மொழி சார்ந்த விடயம் என்று 'நதிக்கரை மூங்கில்' தொகுதி முன்னுரையில் குறிப்பிடும் சிவசேகரம் 'என்னையும் என் சூழலையும் அறியும் தேவையின் காரணமாக மேற்கொள்ளப்படும் தேடலில் மனதில் இடறும் எண்ணங்களே கவிதை வடிவம் பெறுகின்றன என்கிறார். இக்கட்டுரையில் அவரது 'போரின் முகங்கள்' காட்டும் அரசியலையும், மொழி சார்ந்த போக்கையும், படிமம், உத்தி என்பவற்றை கையாளுந்திறமையில் இன்றைய போக்குடன் அவரது ஓட்டம் என்பன இங்கு கருத்துக்கு எடுக்கப்படுகின்றன.

போரின் முகங்கள் எனும் தலைப்பில் எழுதப்பட்ட 40 கவிதைகள் (கவிதைத் துணுக்குகள் எனவும் கூறலாம் சில வற்றை) பல்வேறுபட்ட முகங்களைக் காட்டி நிற்கும் அதேவேளையில் முன்னுக்குப்பின் முரணான அரசியல் நிலைப்பாட்டையும் சுட்டி நிற்கிறது. ஒரு வேளை இருக்கின்ற நிலைமையை அவர் கோடிட்டுக் காட்டுகிறாரோ என்னவோ; எனினும் கவிஞன் கூற்றாய் வருகிற போது அது அவர் நிலைப்பாடே என கருதத் தோன்றுகிறது. உதாரணமாக "அமைதிபற்றிப் பேசிக்கொண்டே போர் பற்றிப் பேசுவோரிடம் அமைதியாக ஆயுதங்கள் விற்கலாம்", "இந்தப் போர் எப்போதேன் முடிந்தாலும் இன்னொரு போர் தொடங்குமென்று மட்டும் இப்போதே சொல்ல முடியும்", "போரின்மீது அமர்ந்திருந்தது பூனை" இப்படியாக போர்க் குதிரையில் குந்தியிருப்பது முக்கியமானது; போன்ற விமர்சனக்கண்ணோட்டத்துடன் கூடிய கவிதைகள் சமகால போர்நிலவர அறிக்கைகள்போல ஒன்றுக்கொன்று ஒருவித தொடர்பு அற்று சில சமயம் முரணாக ஆனால் கவித்துவமாக, ஈற்றில் போரின் முகத்தில் அகதிகளின் பிணத்தை காண்பதாக முடிகின்றன. இவற்றையெல்லாம் ஒன்று திரட்ட ஒரு நீண்ட கவிதையாக கதை கூறும் பாணியிலோ, உரையாடல் போக்கிலோ இல்லை. நாடகத்தன்மை தோன்றக் கூடிய கவித்துவ நடையிலே எழுதியிருக்கலாம். இல்லை இதுதான் போர்க்கால சூழலில் எழும்பக்கூடிய வடிவம் என்று கவிஞர் வாதிட்டால் அதற்கான காலத்துக்காக காத்திருத்தல் அவசியம்.

இனி அவரது முரண்பாட்டினை எடுத்தியம்பவிழைகிறேன்.

"சப்பாட்டிஸ்ற்றாக்கட்டு" கவிதையில் "அடங்கிக் கிடந்த ஒரு தேசம் விழித்தெழுந்தது" என்ற கருத்தும், 'துப்பாக்கியின் தெருவில் இறங்கினேன்' என்று துப்பாக்கியின் தெரு மொழிபெயர்ப்பிலும், 'சமாதானப்புறாக்களில்' என்னிடம் ஒரு போர்வாளைத் தந்தாள்' எனவும், 'ஸமப்வமியுகேயுகே' எனும் கவிதையில் அபிமன்யுவின் அவதாரம் 'பணிய மறுக்கும் தேசமாக' எனவும் நேர்நிலை எடுக்கும் சிவசேகரம் தனது நிலையற்ற தன்மையை 'போரும் தீர்வும்' கவிதையில் பின்வருமாறு கூறுகிறார்.

*'பேசியே எதுவும் தீராததால்*
*எல்லாவற்றையும்*
*போர்களே தீர்க்கின்றன!'*

என்று துப்பாக்கி வாயிலாக அதனைச் சுமந்து சென்ற பையனுக்கு கூறவைத்துவிட்டு "அது சரி போலவும் பிழை போலவும் இருந்தது" என ஒரு தீர்க்கமற்ற நிலையை எடுக்கிறார் கவிஞர்.

பல்வேறுபட்ட நெருக்கடிகளை தனது பாடுபொருளாகக் கொண்ட சிவசேகரம் யாழ் மண்ணில் இருந்து துரத்தப்பட்ட இஸ்லாமியரின் உணர்வுகளையும் அம் மண்ணைவிட்டு அப்புறப்படுத்தப்பட்ட தமிழ் மக்கள் உணர்வுகளையும், 'உரு மாற்றம்', பெற்றுவிட்ட சமகால இளைஞரின் பாடுகளையும் தனது பல்வேறுபட்ட கவிதை நடையில் படைத்தளிக்கிறான். ஆனால் அவரிடம் காணப்படும் லயத்தோடு கூடிய கவிதை நடையே அவரைச் சிறந்த கவிஞனாகக் காட்டும் என்பது எனது எண்ணம். உதாரணமாக செப்பனிட்ட படிமங்கள்' என்ற தொகுதியிலிருந்து ஒரு கவிதை.

*"வானும் மலையும் நிலமும் நதியும்*
*மரமும் இலையும் மலரும் சருகும்*
*பனியின் பிடியில் உருகும் மறையும்*
*விழிகள் தொழிலின் திறமை அழியும்"*

இதே லயமுடன் கூடிய ஒன்றிரண்டு கவிதைகள் 'போரின் முகங்கள்' தொகுதியிலும் காணக்கிடக்கின்றன.

*'விரியம் மலர்களும் வீழும் அலையும்*
*தழுவும் காற்றும் கழுவும் மழையும்*
*அந்தி வானமும் அணிலும் காகமும்*
*அவனது உலகில் இல்லாதொழிந்தன*
*இதயம் இறுகி இரும்பாய்ப் போயோர்*
*சிறுவன் பிள்ளைப் பருவம் இழந்தான்'*

இறுதியாக நீலாவணன், முருகையன், மகாகவி, சண்முகம் சிலிங்கம், நுஃமான் ஆகியோருடன் 70கள் முதல் சிவசேகரம் எழுதிய போதும் 80களில் சேரன், ஜெயபாலன், யேசுராசா, இளவாலை விஜயேந்திரன், புதுவை, சு. வில்வரத்தினம் முதலியோர் கண்ட மாற்றங்களையும் உள்வாங்கி நிலைகொண்டு தொண்ணூறுகளில் கூட தன் இருப்பை நிலைநாட்டுகிறார். சோலைக்கிளி, அஸ்வகோஷ், நட்சந்திரன் செவ்வியந்தியன், றஷ்மி, அன்சார், ஜபார் போன்றோர் சூழல் நெருக்கடி காரணமாக படிமங்களின் உச்சப்பன்பாட்டுடன் கருத்து சொல்லும் உத்திகளை சிவசேகரத்தின் 'களவாடப்பட்ட முத்துக்களில்' நாம் காண்கிறோம்.

*'காதலர்களது முறுவல் பெண்களைக்*
*களவாடிச் சென்றது*
*காதலர்களைக் கரும் பூனைகள் களவு*
*கொண்டன*
*மீளாத காதலர்கட்காக காத்திருந்த*
*பெண்களின்*
*விழிகளில் விளைந்த முத்துக்கள்.*
*அவர்களது உஷ்ண மூச்சின்*
*வெம்மையிற் பற்றி எரிந்தன'*

ஆகமொத்தம் சிவசேகரம் எனும் கவிஞரின் பரிணாம வளர்ச்சி இயங்கியல் நிலைப்பட்டது. அரசியல் நிலைப்பாட்டிலும் சரி, மொழி நடையமைப்பிலும் சரி, படிமங்களின் பயன்பாட்டிலும் சரி, காலச்சூழலின் அதிர்வுகளை நன்கு நுண்ணியதாக அவயமாக்கி புறநிலையில் நின்று மனம் ஒருப் பட்டு கவியாக்கம் செய்கின்றார். இவ்வாறு காலத்தின் போக்கினால் விளையும் இன்னல்களை மக்கள் தம் வாழ்வினை, வாழ்வின் அவலங்களைப் பாட ஒரு மகாகவியால் மட்டும் முடியாது. ஒரு மகாகவிமட்டும் போதுமானது அல்ல. இன்று எம்மவர் பரந்து பட்டு உலகெங்கும் நாட்டிலும், காட்டிலும், மேட்டிலும், குடிசையிலும், நகரிலும் வாழ்கின்றனர். அவர் தம் மனச்சிக்கல்களை வாழ்வுச் சிதறல்களை எல்லாம் பாட பல மகாகவிகள் வேண்டும். சிவசேகரம் அந்தப்போக்கில் தன்பங்கை ஆற்றுகிறார், 'போரின் முகங்கள்' ஊடாக என்றால் அது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

கிருதயா ஸ்ரீகணேசன்

# அரும்பு

அரும்பு (சஞ்சிகை)
ஆசிரியர் - தே.பிரகலாதன்
வெளியீடு - A.S.C.E.S.
(பாரீஸ்)

பாரிஸில் இருந்து இளம் பச்சை நிறத்தினை முன் அட்டையில் தனது முதலாவது இதழை விரித்துள்ளது "அரும்பு" கலை இலக்கிய விஞ்ஞான அறிவியல் ஏடு என தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் இவ்விதழ் ஐரோப்பிய தமிழ்ச் சிறார்களின் அறிவியல் தேவையைப் பூர்த்தி செய்ய இதுவரை ஓரிதழேனும் முன்வராத வெற்றிடத்தை நிரப்புவதற்கு உறுதி பூண்டுள்ளமை ஐரோப்பாவில் மெதுவாக வேர்விடும் தமிழ்ச்சமூகத்திற்கு ஓர் நல்ல சகுனம்.

தமிழ், பிரஞ்சு, ஆங்கிலம் என்று மொழியறிவிற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் தெரியாத தமிழ்ச் சிறார்களுக்கும் பிரஞ்சு தெரியாத தமிழ் பெற்றோருக்கும் ஓர் நல்ல விடயம். மற்றும் சிறுவர் கதைகள், விஞ்ஞான விளக்கங்கள் என்று பக்கங்கள் பிரிகின்றன. கூடவே இன்னும் பல விடயங்களாக சிறுகதை, தகவல்கள், உலகின் முதற் புத்தகம் என்று நிறைய சிறு சிறு விடயங்கள் நன்றியுடன் மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. முதல் புத்தகம் என்பதனால், நியாயமிருக்கலாம். இனிவரும் இதழ்களில் சுய ஆக்கங்கள் இடம் பெறமுயன்றால் நல்லது. மற்றும் படங்கள், ஓவியங்களிலும் படைப்பாளிகளைத் தேடிப்பிடிப்பது அவசியம். ஆக, அடுத்த இதழ்களில் அரும்பு வளர்ச்சி காணும் என்னும் நம்பிக்கையில் காலாண்டுக்கொருமுறை வெளிவரத்துடிக்கும் இவ் அரும்பை மாபெரும் விருட்சமாய் வளர கைகொடுத்து வாழ்த்த வேண்டியது ஐரோப்பிய தமிழ்ச் சமூகத்தின் கடமை.

*ஸ்ராலின் (பாரிஸ்)*

# கவிதைப் போக்கு தனி மனிதர்களாலன்றி சமுதாயச் சூழலாலேயே தீர்மானிக்கப்படுகிறது!

## —மு.பொ.வின் விமர்சனம் குறித்த சில குறிப்புகள்!

மு. பொன்னம்பலம் (சரிநிகர் 105 - 107) சோலைக்கிளியின் கவிதைகளை நார் நாராக கிழிக்கும் போது சோலைக்கிளியின் மிகையான முக்கியத்துவத்தை மட்டுமன்றி அவரது நல்ல கவிதைகள் பலவற்றையும் நிராகரிக்கிறார். சோலைக்கிளியின் முதலாவது தொகுதியை அடுத்து நுஃமானும் அடுத்து வந்ததையிட்டு சேரனும் பாராட்டிச் சொன்னவை நம் கவனத்துக்குரியன. அவரது சிறப்பான சில கவிதைகள் பற்றி 1993ல் நானும் சரிநிகரில் எழுதியுள்ளேன். அவரது அண்மைக்கால கவிதைகளின் படிமங்கள் உள்ளடக்கத்தின் மீது ஒரு சுமையாக அழுத்துகின்றன. அதியதார்த்தவாதத்தின் மிகையான பிரயோகம் அர்த்தமின்மைக்கு வழிகோலலாம் என்பதை எடுத்துச் சொல்லத் தமிழ்க் கவிதை விமர்சகர்கள் பலரும் தவறிவிட்டோம். சோலைக்கிளியின் பாணியில் அநேகர் எழுத முற்பட்டதும் அவரே ஏராளமான கவிதைகளை ஒத்த தன்மையினவாகப் படைத்ததும் அவரது படைப்புக்கட்கு மிகவும் கேடு செய்துள்ளன.

இந்த இடத்தில் ஸல்வடோர் டாலி (அதியதார்த்த ஓவிய முறையின் முன்னோடி) வெறுந்திரைகளில் ஒப்பமிட்டு விற்றாரெனவும் பிறரால் இவற்றில் தீட்டப்பட்டவை அவரது படங்களாக விற்கப்பட்டதாகவும் அவரது இறுதி நாட்களில் குற்றஞ்சாட்டப்பட்டது பற்றிக் கூறுவதுத்தும். இந்த விதமான அதி புத்திஜீவித்தனமான கலை இலக்கியங்களில் மேதமைக்கும் அசட்டுத்தனத்துக்கும் குறும்புத்தனத்தக்குமிடையில் வேறுபாடு காணுவது எளிதல்ல. மு.பொவின் சொற்களின் கடுமை அதிகம். சோலைக்கிளி என்ற நல்ல கவிஞரை இப்படிக்குழப்பத்துள்ளிருந்து மீட்க உதவின் அவை ஏற்கக்கூடியன.

கவிதை தொடர்பாக மு.பொ. சொல்வன தொடர்பாகச் சிறிது கூற வேண்டும். 'எழுத்து' அறிமுகப்படுத்திய புதுக்கவிதையைப் பின்பற்றி ஈழத்தில் புதுக் கவிதை எழுதினோர் யார் என்பதை விட ஈழத்துச்சமகாலக் கவிதைக்கு (புதுக்கவிதைக்கும் சேர்த்தே) உயிரோட்டமான பண்பை வழங்கினோர் யார் என்பது முக்கியமானது. புதுமை என்பது தன்னளவிலேயே போற்றுதற்குரிய ஒன்றல்ல. இந்தப் புதுமை மோகம் எத்தனையோ அபத்தங்கட்குக் காரணமாகியுள்ளது. மரபு சார்ந்த கவிதையினின்று விலகுவதன் சாத்தியப்பாடு பாரதியின் வசனகவிதையில் உணர்த்தப்பட்டாலும், அதன் தேவையைப் போதியளவுக்கு வலியுறுத்துமளவுக்கு 'எழுத்து' அறிமுகப்படுத்திய புதுக்கவிதையில் விஷயமிருக்கவில்லை. மரபிற்கு உட்பட்டு மஹாகவி கவிதைப் பொருளிற் காட்டிய புதுமையும், புரிந்துணர்வும் முருகையன் வெளிப்படுத்திய நவீன சிந்தனையும் புதுக்கவிதையை எட்டுவதற்கு காலமெடுத்தது. மரபினின்று நுஃமான் படிப்படியாகவே விலகினார். மரபின் சந்தத்தைப்பேணி எதுகை மோனைகளை வலியுறுத்தாமல் எழுதுவது பற்றிச் சிரித்திரனுக்கு 80களில் அளித்த செவ்வியில் அவர் குறிப்பிட்டிருந்தார் என நினைவு. ஜெயபாலனின் கவிதையில் அகவலின் சீரான சந்தத்தை நாம் பல இடங்களில் அவதானிக்கலாம். மரபை அறிந்து மரபினின்று பெரிதும் விலகிய கவிஞர்களுள் சண்முகம் சிவலிங்கம் முக்கியமானவர். அவரது புதுக்கவிதை தமிழகப் புதுக்கவிதை மரபின் தொடர்ச்சியாக அல்லாது, அதற்கு ஒரு மாற்றாகவே எனக்குத் தோன்றுகிறது. தமிழகத்துப் புதுக்கவிதை அறுவடையில் அள்ளுண்டு எழுதிய ஈழத்துப் புதுக் கவிதையாளர்கட்கும் சண்முகம் சிவலிங்கம், சேரன், இளவாலை விஜயேந்திரன், வில்வரத்தினம் போன்றோருக்கும் இடையே வேறுபாடு அதிகம். ஈழத்துப் புதுக்கவிதையின் சிறப்பை நிர்ணயிப்பதில் மஹாகவி போன்ற மரபுக் கவிஞர்களது பங்கு மிகவும் முக்கியமானது.

'வானம்பாடிக்' காலத்துப் படிமங்களையும் மு.பொவை அருவருக்க வைக்கும் முறையில் எஸ். பொ., பெனடிக்ற் பாலன், அகஸ்தியர் போன்றோர் கையாண்ட அதிர்ச்சி தரும் நோக்கிலான சொற் பிரயோகங்களையும் அதியதார்த்தப் படிமங்களுடன் ஒப்பிடுவது முறையல்ல. முன்னயவை நேரடியானவையும் தெளிவானவையும் என்பதால், அவற்றின் மீள் பிரயோகம் அதனளவிலேயே குறைபாடானதல்ல. அதியதார்த்தப் படிமங்களை அவ்வாறு பயன்படுத்துவது பாதகமான பாதிப்பை ஏற்படுத்தும். எந்தவொரு படிமமும் கவிதை நடையும் வெற்றிபெற்றதாக காணப்படும் போது, அவற்றை அடியொற்றியும், அவற்றின் போலிகளாகவும் ஆக்கங்கள் வருவது இயல்பே. அதியதார்த்தம் பற்றிய பரிச்சயங் குறைவுள்ள நமது சூழலிற் சோலைக்கிளியின் அதியதார்த்தக் கவிதைகளின் ஆரம்பகால வெற்றியின் காரணங்கள் சரியாக விளங்கிக்கொள்ளப்படவில்லை. அவற்றின் மலிவுப் பதிப்புக்களின் பெருக்கத்திற்குச் சோலைக்கிளியும் பங்களித்தது வருந்தத்தக்கதே.

மு.பொவின் ஆட்சேபனை கவிதையின் சில அம்சங்கள் பற்றியதே என்ற ஐயம், தென்னிந்தியக் கோபுரங்களை மகுதிகளுடன் ஒப்பிட்டு முன்னையவற்றின் அழகை ரசிக்க முடியாமை பற்றிய ஒரு மேற்குலக விமர்சகரை ஆதாரங்காட்டுமிடத்து ஏற்படுகிறது. இந்த விதமான ஒப்பீடு அபத்தமானது. ஏனெனில் இவற்றின் அழகியற் தொடக்கப்புள்ளிகள் வெவ்வேறு. இவ்வாறே கவிதைக்குள்ளும் அலங்காரப்பண்புடைய கவிதைகளும் அதை அறவே தவிர்க்கும் கவிதைகளும் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் அதனதன் முக்கியத்துவம் உண்டு. ஒரு வேளை நூற்றுக்கணக்கான தாஜ்மஹால்களும், விரல்விட்டு எண்ணக்கூடிய தென்னகக் கோயில்களுமே இருந்திருந்தால், அவற்றின் அழகு பற்றிய அவ் ஐரோப்பிய விமர்சகரின் மதிப்பீடு தலைகீழாக மாறியிருக்கலாம். சோலைக்கிளி மழைப்பழம், காற்றுக்கட்டி என்பன போன்ற உள்ளூர் பேச்சு வழக்கினின்று பெற்றார் என்று வாசித்த் நினைவு. கவிதை 'செம்மொழியில்' அமைகையில் இவ்வாறான பதங்கள் பரிச்சயமற்ற வாசகனைக் குழப்பத்தில் ஆழ்த்தலாம். இதுவே முருகையனது ஏனவார்த்தைகட்குக் காரணமானது. சோலைக்கிளியின் பின்னைய படிமங்கள் இவ்வாறானவையல்ல, அவை அவரது உருவாக்கங்கள். எனவே பிரச்சினை இன்னுமொருதளத்திற்குரியது.

சோலைக்கிளியைப் பின்பற்றி எழுதும் முகமட் அபார் அவரது தம்பி என்ற விஷயம் மு.பொவின் விமர்சனத்துக்கு எவ்வகையிலும் முக்கியமானதல்ல. ஏனெனில் சோலைக்கிளி பாணியில் எத்தனையோ பேர் எழுதத் தொடங்கி விட்டனர். (இது சிவரமணிக்கும் சிறிதளவு நடந்தது) 'சோலைக்கிளியும் அவரது வட்டமும்' என்பன போன்ற சொற்கள் மு.பொவின் வாதங்களின் வலிமையைத் தளர்த்தி அவற்றுக்கு அநாவசியமான ஒரு தனிப்பட்ட மோதற் தோற்றத்தை அளிக்கின்றன.

கவிதை ஒரு இலக்கியமா என்ற கேள்வியை எழுப்பும் மு.பொ., கவிதை பற்றிய கேள்விகளைத் தனக்குள் எழுப்பும் ஒருவன் தான் இனிவரும் கவிதைகள் பற்றித் தீர்மானிப்பான் என்று கூறுகிறார். கவிதைப்போக்கு தனி மனிதர்களாலன்றி அவர்களூடு செயற்படும் சமுதாயச் சூழலாலேயே தீர்மானிக்கப்படுகிறது என்பதற்கு ஈழத்துக் கவிதைப் போக்கிலும் பல மூன்றாமுலகக் கவிதைகளிலும் நான் ஆதாரங்களைக் காண்கிறேன்.


புதிய பரிமாணங்கள் பற்றிய மலைப்பும் சாதனைகள் பற்றிய மயக்கங்களும் இலக்கியவாதியின் தனிமனித வாதத்தை வலியுறுத்திச் சமுதாயப்பங்கை மறுக்கும் போக்குகளால் ஊக்குவிக்கப்படுகின்றன. இன்னுஞ் சில தசாப்தங்களில் (அல்லது சில ஆண்டுகளில்) இந்தப் புதிய பரிமாணங்களும் சாதனைகளும் யாருங்காவனிப்பாரற்றவையாகவே போகவும் கூடும் என்பதையும் நாம் நினைவில் இருத்துவது பயனுள்ளது என நினைக்கிறேன்

*சி. சிவசேகரம்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மன்னார் உப்பளம்: அரச அதிபரின் குறிப்புகள்!

மன்னார் கச்சேரி நிர்வாகம் மக்களது ஆக்கபூர்வமான விமரிசனங்களுக்கு உட்படவேண்டுமென்பதிலும் அதன் மூலமாக குறைபாடுகள் அகற்றப்பட வேண்டுமென்பதிலும் நான் அதிக அக்கறையுடையவனாக இருப்பதனால், தங்களது மன்னார் உப்பளமும் மலிந்து போன ஊழல்களும் (செப்.18-25,1996 இதழ் 105) என்னும் விடயம் பற்றிய எனது கருத்துக்களையும் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

மன்னார் உப்பளத்தின் நிர்வாகம், உற்பத்தி, விநியோகம் ஆகிய மூன்று விடயங்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளீர்கள்.

மன்னார் உப்பளத்தின் நிர்வாகம் கொழும்பில் தலைமையகத்தைக் கொண்ட லங்கா சோல்ட் லிமிட்டெட்டினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. நிர்வாகம் சீர்படுத்தப்பட வேண்டும் எனவும் அங்குள்ள தொழிலாளர் நலன் பேணப்பட வேண்டும் எனவும் பலதடவைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு நேரிலும், தொலைபேசி மூலமும், கடிதம் மூலமும் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அண்மையில் மன்னார் உப்பள மேற்பார்வைக்கென கொழும்பில் ஒரு உயர் மட்ட அதிகாரி நியமிக்கப்பட்டார். ஊழியர்களுக்கான சம்பளம் முதலான படிகள் கொழும்பில் இருந்து வரத்தாமதமாகும் போது கச்சேரியில் வாங்கப்பட்டு பின்பு சீர்செய்யப்படுவது வழக்கமாகும்.

உற்பத்தியைப் பொறுத்தவரை மன்னார் உப்பளத்தின் வருடாந்த உற்பத்தித் திறன் 4000 மெ.தொன்களாகும். இது மன்னார் மாவட்டத் தேவைகள் முழுவதற்கும் போதுமானது. ஆயினும் எதிர்பார்த்த உற்பத்தி நடைபெறாததற்குரிய காரணங்களாக 4'', 6'', 8'' களான மூன்று நீர் இறைக்கும் பம்புகள் பழுதடைந்ததும் இரவு வேலைகள் தடைப்பட்டதும் ஏற்கெனவே இருந்த பல கட்டமைப்புகள் சேதமடைந்திருப்பதும் காரணங்களாகும். பம்புகளைத் திருத்துவதற்கும் புதிய பம்பு வாங்குவதற்கும் உட்கட்ட அமைப்புகளைத் திருத்துவதற்குமாக 1995ல் கச்சேரியினால் அவை புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூபா 9 லட்சம் லங்கா சோல்ட் லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்டது. ஆயினும் புதிய 6'' பம்பு ஒன்று இவ்வருடம் ஒகஸ்ட் மாதத்திலேயே வாங்கப்பட்டது. ஏனைய பம்புகளில் இரண்டு திருத்தப்பட்டுள்ளன. எனினும் தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளபடியினால், உற்பத்தி அடுத்த வருடம் ஜனவரி வரை சாத்தியமில்லை. இடைக்காலத்தில் கச்சேரியினால், இரண்டு 3'' பம்புகள் வழங்கப்பட்டும் போதிய நீர் இறைக்கப்படாமையினால் உப்பு உற்பத்தி கடந்த ஒகஸ்ட் மாதத்துடன் நின்று போய்விட்டது.

விநியோகம் அரசாங்க அதிபரினால், கட்டுப்படுத்தப்படுகின்றது. உப்பள முகாமையாளர் தனது கையிருப்பு விபரத்தை அறிவித்ததும் அதற்கேற்ப விநியோக உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. 1995 நடுப்பகுதி வரை உற்பத்தி போதுமானதாக இருந்தபடியினால், விநியோகம் கட்டுப்படுத்தப்படவில்லை. பின்பு தட்டுப்பாட்டுக்குரிய அறிகுறிகள் தென்பட்டதும் விநியோகத்தை சீர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த வருடம் நடுப்பகுதியில் கற்பிட்டிக்கு உப்பு அனுப்பும் விடயம் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதும் உடனடியாக மாவட்டத்திற்கு வெளியே உப்பு அனுப்புவது நிறுத்தப்பட்டது. இத்தடை அமுல்படுத்தப்பட்டதால் பின்பு உப்பு வெளியே அனுப்பப்பட்ட தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

கடந்த ஆண்டு இறுதியில் மழைக்காலத்தின் போது பற்றாக்குறை ஏற்பட்ட போது பதுக்கல் வியாபாரிகள் கூடிய விலைக்கு உப்பு விற்பனை செய்வது எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதும் பின்வரும் முறைகளில் விநியோகம் கட்டுப்படுத்தப்பட்டது.

அ. பலசரக்குக் கடை வியாபாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 5-10 மூடைகள் மாத்திரமே விநியோகித்தல்.

ஆ. 1992 - 1994 வரையான மூன்று வருட காலத்தில் உப்பு போதிய அளவு இருந்த வேளையில் உப்பு வழங்கப்பட்டோருக்கு மூன்று வருட சராசரி வழங்களில் 50% விநியோகித்தல். பின்பு இது 25% ஆகக் குறைக்கப்பட்டது.

இவ்விதமாக உப்பு விநியோகம் கட்டுப்படுத்தப்பட்டு கடந்த ஜூன் மாதம் உப்பு உற்பத்தி முற்றாக நிற்கும் வரை மேற்படி ஒழுங்கில் வழங்கப்பட்டது.

தற்போது உப்பு முற்றாக இல்லா நிலையில் கற்பிட்டியில் இருந்து வியாபாரிகளினால் கொண்டு வரப்படுவது துரதிருஷ்டமான விடயமாகும். அடுத்த பெப்ரவரி மாதம் மீளவும் உற்பத்தி ஆரம்பிக்கும் வரை இந்நிலை தொடரும்.

ஆளணி பற்றாக்குறை, பாதுகாப்பு நிலைமைகள் முதலான பாதகமான சூழ்நிலைகளுக்கிடையிலும் கச்சேரி நிர்வாகம் உப்பளத்தின் உற்பத்தியில் அதிக அக்கறை எடுத்தும் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட புறச்சூழல்களினால் எதிர்பார்த்த பலன் கிடைக்காமற்போனது மிகவும் துக்கமான விடயமாகும்.

ஆயினும் கச்சேரி நிர்வாகம் இவ்விடயத்தில் அதிக அக்கறை கொண்டுள்ளது என்பதையும், ஊழல்களை அகற்றுவதில் விழிப்பாக இருந்துள்ளது என்பதையும் ஆணித்தரமாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

*எம். குரூஸ்*
*அரச அதிபர், மன்னார்*

அமரர் எஸ். அகஸ்தியர் மறைந்து 08.12.1996 அன்றோடு ஒரு வருடம் பூர்த்தியாகிறது. இதையொட்டி வெளியிடப்படவிருக்கும் நினைவு மலருக்கு அவர் பற்றிய அறிவு சார்ந்த பலரது கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

அமரர் எஸ். அகஸ்தியரின் படைப்புக்கள் மலையாளம், சிங்களம், ருஷ்ய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவருடைய சிறுகதைகள், குட்டிக்கதைகள், குறுநாவல்கள், நாவல்கள், கட்டுரைகள், நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள் ஆகிய பல்வகைப்பட்ட படைப்புக்களுள் ஏதாவது ஒன்றில் ஆய்வினை மேற்கொண்டிருப்பின் அக்கருத்துருத்தையும் அனுப்பிவைக்கலாம். அல்லது கவிதையாகவும் கட்டுரையாகவும், உரையாகவும் எஸ். அகஸ்தியரை நினைவு கூர்ந்து ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம்.

ஆக்கங்களை 10.11.1996க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைத்தல் அவசியம்.

முகவரி:
Mr. Christian Gregory
3, Villa Guy de Maupassant, 91860
Epinay sous senar - France
Fax: 42096094

# விடுதலை இயக்கத்தின் அகக் காரணியே வெற்றியைத் தீர்மானிக்கிறது!

எனது விமர்சனம் தொடர்பாக இ.குணசீலன் எழுதிய சொற்கட்கு நன்றி. ஸிம்பாப்வே விடுதலை பற்றி விரிவாக எழுதும் நேரமும் வசதியும் எனக்கு இப்போது இல்லை. எனினும் சோவியத் யூனியனும் தேசிய விடுதலைப் போராட்டங்களும் பற்றிய எனது மதிப்பீட்டை இங்கு சுருக்கமாக எழுதுவது தகும் என நினைக்கிறேன். க்ருஷ்ச்சொவ் தலைமை சோவியத் ஒன்றியத்தில் அதிகாரத்திற்கு வந்த பின் ஆயுதமேந்திய போராட்டம் பற்றிய ஒரு மறு பரிசீலனை ஏற்பட்டதையும் பாராளுமன்ற அரசியல் மூலம் சோஷலிஸ அரசமைப்பை நிறுவலாம் என்ற எண்ணம் மறுபடி தலைதூக்கியதையும் அறிவோம். சோவியத் சார்புக் கட்சிகள் யாவுமே பாராளுமன்றப் பாதையை நாடின. இக்காலத்தில் சமாதான சக ஜீவனம் என்ற கோட்பாட்டின் கீழ் ஏகாதிபத்தியத்துடன் க்ருஷ்ச்சொவ் சமரசம் செய்ய முயன்றதும் பின்னர் இந்த உறவு ஆயுதப்போட்டியாகவும் கெடுபிடி அரசியலாகவும் விருத்திபெற்றதுங்கூட நாம் அறிந்ததே. இச் சூழலில், சோவியத் ஒன்றியத்தின் அயற்கொள்கை ஏகாதிபத்தியத்துடன் போட்டியும் சமரசமும் என்ற நிலைகளிடையே தடுமாறிக்கொண்டிருந்தது. இதே வேளை, கொலனித்துவம், நிறவாதம், ஸியோனிஸம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டங்கட்கு நிபந்தனையற்ற ஆதரவு என்ற பழைய நிலைப்பாடு சோவியத் பொருளாதார, அரசியல் லாபங்கட்கு ஏற்றவாறு மாறத் தொடங்கியது.

ஆபிரிக்காவின் தென்பாதியில் தென்னாபிரிக்கா மட்டுமே குறிப்பிடத்தக்களவு முதலாளிய விருத்தி பெற்ற நாடாக இருந்தது. அங்கு பிற கட்சிகளுடன் ஒப்பிடுகையில் பலவீனமானதாயினும், பலவீனமற்றதாயினும் குறிப்பிடத்தக்க வலிமையுள்ள கம்யூனிஸ்ட் கட்சி இருந்தது. மற்ற நாடுகளில் எல்லாம் கொலனித்துவ எதிர்ப்பும் ஏகாதிபத்திய எதிர்ப்பும் தேசிய விடுதலை இயக்கங்களின் கையிலேயே தங்கியிருந்தன. தென்னாபிரிக்காவிலும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ஏ.என்.சி.) விடுதலைக்கான முக்கிய சக்தியாக இருந்தது. தேசிய விடுதலை இயக்கங்களுக்கு சோவியத் ஒன்றியம் அளித்த ஆதரவு, அந்த நாடுகளின் தேசிய விடுதலை இயக்கத் தலைமைகளது கொள்கைகள் எவ்வளவு தூரம் சோவியத் சார்பானது என்பதிலேயே தங்கியிருந்தது. உதாரணமாக, அங்கோலாவில் எம்.பி.எல்.ஏ. (அங்கோலா விடுதலைக்கான மக்கள் இயக்கம்) சோவியத் ஆதரவை அனுபவித்ததோடு மட்டுமன்றி, அதன் போட்டி இயக்கங்களை நசுக்கி 1974ல் அதிகாரத்தைப் பிடிக்க, சோவியத் யூனியனிடமிருந்து பெற்ற உதவியின் பயன் இன்றுவரை ஒரு உள்நாட்டுப்போராகத் தொடர்கிறது. ஸிம்பாப்வேயில் ஸற்.ஏ.பி.யு (ஸாபு, அதாவது ஸிம்பாப்பே ஆபிரிக்க மக்கள் ஒன்றியம்) ஸற்.ஏ.என்.யு (ஸானு, அதாவது ஸிம்பாப்வே ஆபிரிக்க தேசிய ஒன்றியம்) என இரண்டு ஆயுதப்போராட்ட இயக்கங்கள் இருந்தன. இங்கு முன்னையதன் தலைமை (றொபேட் முகாபேயினது) சோவியத் யூனியன் செல்வாக்கிற்கு உட்படாமல் சுயாதீனமாக இயங்கியது. அதன் தளப்பிரதேசங்களாக தான்ஸானியாவும் ஸம்பியாவும் இருந்தன. இரு நாடுகளுக்கும் சீனாவுடன் நல்லுறவு இருந்ததும் குறிப்பிடத்தக்கது. ஸானுவின் தலைவரான ஜொஷுவா ந்கோமோ சோவியத் யூனியனுக்கு நெருக்கமானவராக இருந்தார். அவரது தலைமையிலான இயக்கம் பலவீனமாகவே இருந்தது. 1980களில் இந்த இயக்கம் ஸாபு ஆட்சிக்கு எதிரான உள்நாட்டு யுத்தத்தில் இறங்கியதும், பின்பு தோல்வி அடைந்து சமரசம் செய்ததும் இன்னொரு கதை.

நான் வலியுறுத்த முன்வந்தது ஏனெனில், தேசிய விடுதலை யுத்தங்கள் சோவியத் ஆதரவாலோ சீன ஆதரவாலோ வென்றதாகக் கூறுவது முறையல்ல என்பதையே. விடுதலைப் போராட்டத்திற்குச் சாதகமான சூழ்நிலைகள் உருவாகும் போது விடுதலை இயக்கங்கள் அவற்றை எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பது முக்கியமானது. 1970களில் பலவீனமான போர்த்துக்கேய கொலனிய ஆட்சிக்கு எதிராக மக்கள் பெற்ற வெற்றியை தென்னாபிரிக்காவிலோ அதன் ஆளுமைக்குட்பட்ட நமீபியாவிலோ 1980கள் வரை பெறமுடியவில்லை.

கிழக்கு திமோர் விடயத்தில் சோவியத் யூனியனின் அசமந்தமான போக்கு அன்று அந்த விடுதலை இயக்கம் சீன சார்பான ஒன்றாகக் காணப்பட்டதன் விளைவு என்றே கூறவேண்டும்.

எந்த விடுதலை இயக்கத்தினதும் வெற்றி முதலில் அகக்காரணிகளாலேயே நிர்ணயமாகின்றது. சோவியத் ஒன்றியம் ஒரு சமூக ஏகாதிபத்தியம் என்ற கருத்து எனக்கு உடன்பாடான ஒன்றல்ல. அது மூன்றாம் உலக நாடுகளின் ஒரே ரட்சகன் என்றவிதமான கருத்தும் அதே அளவிற்கு நிராகரிக்கத்தக்கது. சோவியத் ஒன்றியத்தின் தலைமை எரித்திரியா ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் எவ்வாறு நடந்து கொண்டது என்பது அதன் தேசிய விடுதலைக் கொள்கையை விளங்கிக் கொள்ள ஓரளவுக்கு உதவும் என நினைக்கிறேன்.

*சி. சிவசேகரம்*
*லண்டன்*

# மட்டு வைத்தியசாலை: பொறுப்பற்ற வைத்தியம்!

மட்டு. அரசினர் பொது வைத்தியசாலையில் நோயாளர்களையும் பொதுமக்களையும் பாதிக்கும் சம்பவங்கள் பல நடைபெற்று வருகின்றன. அவற்றுள் மிக மோசமான சம்பவங்களுமுண்டு. இச்சம்பவமும் அவற்றுள் ஒன்றாகும்.

வேல் மாணிக்கம் யோகேஸ்வரனாகிய என்னுடைய மனைவி 'சுந்தரவதனி' என்பவர் தனது முதல் பிரசவத்திற்காக மேற்குறிப்பிட்ட வைத்தியசாலையில் 24-07-1996ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார், பரிசோதிக்கப்பட்டார். குழந்தை இயற்கையான முறையில் பிறப்பது இயலாத காரியம், எனவே சத்திரசிகிச்சை மூலமே குழந்தையை வெளியே எடுக்க வேண்டும், அதற்கு ஏற்றபடி இரத்த தானத்துக்கு ஒழுங்கு செய்யப்பட வேண்டுமெனக்கூறப்பட்டது. அதன்படி அதற்குரிய ஆயத்தம் செய்யப்பட்டது. இரத்தமும் எடுக்கப்பட்டது. பின்னர் வழமையான முறையில் குழந்தை பிறக்குமென அறிவிக்கப்பட்டது. இதன்படி சத்திரசிகிச்சை கைவிடப்பட்டது. பின்னர் மீளவும் சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டது. இப்படி ஒரு நேரத்துக்கு ஒன்றாக மாறி மாறி கூறப்பட்டது. இதனால் காலமும் நேரமும் வீணாகக் கடத்தப்பட்டன. முடிவில் சத்திரசிகிச்சையில்லாமல் குழந்தை பாதிப்படையும் விதத்தில் வெளியே இழுத்தெடுக்கப்பட்டதனால், குழந்தையின் மூக்காலும் வாயாலும் இரத்தம் வெளியேறத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து குழந்தை மேற்குறிப்பிட்ட வைத்தியசாலை பரிசோதனை அறையில் வைக்கப்பட்டது. மனைவி 28-07-1996 அன்று வைத்தியசாலையை விட்டு வீடு வந்து விட்டார்.

குழந்தை மேற்குறிப்பிட்ட பாதிப்பின் காரணமாக இறந்து விட்டது. இதற்குப் பொறுப்பான வைத்தியர் உரிய நேரத்தில், உரிய முறையில் கடமையுணர்ச்சியுடன் செயற்பட்டிருந்தால் குழந்தை மரணமடைந்திருக்க முடியாதெனக் கருதுகின்றேன். எனவே இதையிட்டு விசாரணை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், இதன் மூலம் இதுபோன்ற அலட்சியப் போக்கினால் சிசுமரணங்கள் ஏற்படாதிருக்க வேண்டும் என்ற நோக்கத்தினாலும் இதனைப் பகிரங்கமாக வெளியிட வேண்டிய நிலைக்கு வந்துள்ளேன். விசாரணை செய்யப்படுமா? உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா? இல்லை, பத்தோடு பதினொன்றாகப் போகுமா என அறிய விரும்புகிறேன்.

***வேல்மாணிக்கம் யோகேஸ்வரன்***
***மட்டக்களப்பு***

# நற்பிட்டி முனைக்கு சம்பந்தமில்லை!

''கலவரங்களில் ஈடுபட்ட எவருமே மருதமுனையைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்கள் அனைவருமே கல்முனைக்குடி, நற்பிட்டிமுனை ஆகிய இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்டவர்கள்'' என்று இதழ் 107 பக்கம் 3ல் எழுதப்பட்டிருந்தது.

''கடந்த காலங்களில் நற்பிட்டிமுனை, துறைநீலாவணை போன்ற கிராமங்களில் ஊர்க்காவல்படையினர் அரசபடைகளுடன் சேர்ந்து தமிழர்களின் வீடுகளை எரித்து அட்டகாசம் புரிந்திருக்கிறார்கள்...'' என்றும் 4ம் பக்கத்தில் அபூநிதால் எழுதியுள்ளார்.

இவ் இரு எழுத்தாளர்களின் எழுத்துக்களிலிருந்து நாம் சொல்லக்கூடியது என்னவென்றால் உண்மையில் இவர்களுக்கு நற்பிட்டிமுனைக் கிராமத்தின் அமைவிடத்தையும், தன்மையும் பற்றித் தெரியாது என்பதேயாகும்.

1985லிருந்து இப்பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் இனக்கலவரங்கள் தலைவிரித்தாடிய போதும் இதுகாலவரை தமிழர்களும், முஸ்லிம்களும் மோதிக்கொள்ளாத இடங்கள் இரண்டே இரண்டுதான்.

அ. மருதமுனை.
ஆ. நற்பிட்டிமுனை

நற்பிட்டிமுனை என்பது கட்டுரையாளர்கள் நினைப்பது போல முஸ்லிம்களுக்கு மாத்திரம் உரிய ஒரு கிராமம் அல்ல. அங்கு முஸ்லிம்களும், தமிழர்களும் இரண்டறக் கலந்து வாழ்கின்றனர். அங்கு 5 முஸ்லிம் கிராம சேவகர் பிரிவுகளும், 4 தமிழ் கிராமசேவகர் பிரிவுகளும் உள்ளன. ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் தமிழர்கள் உள்ளனர். முஸ்லிம்களும் உள்ளனர்.

நற்பிட்டிமுனை சுற்றிவர தமிழ்க்கிராமங்களால் சூழப்பட்டுள்ள ஒரு சிறிய கிராமம். சேனைக்குடியிருப்பு, மணல்சேனை என்பவற்றால் சூழப்பட்டுள்ளது.

கல்முனைப் பிரதேசத்தில் இனக்கலவரம் ஏற்படும்போது - நற்பிட்டிமுனைக்கிராமத்தில் மட்டும் முஸ்லிம்களும், தமிழர்களும் வீதிக்கு வந்து நின்று ஒன்று சேர்ந்து ''ஐயோ'' என்று பரிதாபப்படுவதுதான் வழக்கம். அந்தளவுக்கு 4-3 வீடுகளுக்கு ஒரு வீடு கலப்பு.

இவை தவிர கட்டுரையாளர்கள் சொல்வது போல ஒரு ஊரில் இருந்துதான் இன்னுமொரு ஊருக்கு ஊர்க்காவல் படையினர் கொண்டு செல்லப்படல் வேண்டுமென்பதில்லை. இன்று சகல ஊர்களிலும் ஊர்க்காவல் படையினர் உள்ளனர்.

பொதுவாக இனக்கலவரங்கள் ஆரம்பிப்பதற்கு மூலக்காரணம் யார் என்று யாருமே மண்டையைப்போட்டு உடைக்க வேண்டியதில்லை. பக்கம் பக்கமாக 3ம் சக்தி, 4ம் சக்தி, 5ம் சக்தி என்று எழுதவேண்டியதும் இல்லை. ஆக இரண்டே இரண்டு சக்திகளுக்குத்தான் அந்த வல்லமை உண்டு.

1. ஆயுதம் காவும் சில போராளிகள்.
2. ஆயுத அல்லது பொலிசுப்படை.

*முகம்மது நிகாத்*
*நற்பிட்டிமுனை*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

## வட அயர்லாந்தும் பிரச்சினைத் தீர்வும்!

லண்டனில் இருந்து இயங்கும் 'இன்டர் நாஷனல் அலட்' எனும் அமைப்பும் தேசிய சமாதானப் பேரவையும் இணைந்து இலங்கை அரசியல்வாதிகளுக்கு 'முரண்பாட்டுத் தீர்வு' பற்றிய புரிந்துணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு வட அயர்லாந்தில் ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இலங்கைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் அடங்கிய 23 பாராளுமன்ற உறுப்பினர்கள் இந் நிகழ்வில் பங்குபற்றினர். பல தசாப்தங்களாக வட அயர்லாந்தில் நிலவி வரும் மத முரண்பாட்டின் பின்னணி, சமாதான உடன்படிக்கை ஏற்படுவதற்கான பின்னணி அவ்வுடன்படிக்கை சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம், அரசியல் கட்சிகள், போராளிக் குழுக்களின் தற்போதைய நிலைப்பாடு உட்பட முரண்பாட்டுத் தீர்வின் நடைமுறைகள் பற்றிய பல விடயங்களில் இவர்கள் அவதானத்தைச் செலுத்தியுள்ளனர். இறுதியாக போரை நிறுத்தி தீர்விற்கான அரசியல் நடைமுறைகளை முன்னெடுப்பதற்கான அவசியம், பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளையும் உள்ளடக்க வேண்டியதன் அவசியம், பேச்சுவார்த்தையை முறையாக முன்னெடுப்பதற்கு மூன்றாம் தரப்பின் உதவியை நாட வேண்டியதன் அவசியம். பாராளுமன்ற தெரிவுக் குழுவின் நடைமுறைகளை அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பங்கு பற்றுதலை ஆர்வப்படுத்துவதன் மூலம் முன்னெடுப்பதற்கான அவசியம் ஆகிய 4 அம்சங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை இவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

பேச்சுவார்த்தை மூலமாகத் தான் இப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதையும் இப் பேச்சுவார்த்தை நடைமுறைகளில் விடுதலைப் புலிகளையும் பங்கு பற்ற வைப்பதற்கான அவசியத்தையும் பேச்சுவார்த்தை நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்ல மூன்றாம் தரப்பின் உதவியின் தேவையையும் இவர்கள் இனம் கண்டு ஏற்றுக் கொண்டிருப்பது இப் பயணத்தின் ஒரு சாதகமான விளைவாகக் கொள்ளலாம்.

சகல கட்சிகளையும் கொண்ட பிரதிநிதிகளின் குழுவான இவர்களின் இணக்கப்பாட்டை சர்வகட்சி இணக்கப்பாடாக வளர்த்தெடுப்பதன் மூலம் போரை நிறுத்தி சமாதான நடைமுறைகளையும் முன்னெடுப்பதற்கு சிறந்த அடிப்படையை இந்த இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதனை ஒரு எடுத்துக் காட்டாகக் கொண்டு சமாதான நடைமுறைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தயாரா? இல்லையேல் யுத்தத்தின் மூலம் கிடைக்கின்ற இடைக்காலப் பலன்களைப் பெற்றுக் கொண்டு பேரினவாத எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்து கொள்வதை தொடர்வதில் தான் கண்ணும் கருத்துமாக செயற்படப் போகின்றதா?

ஜனாதிபதி சந்திரிகா சில வாரங்களுக்கு முன்னர் இந்திய ப்ரொன்ட் லைன் (Front-line) சஞ்சிகைக்களித்த பேட்டியில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் மூலம் புலிகளுடன் நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் எனக் கூறி இருந்தார். ஆனால் இதற்குப் பிறகும் இவரது அமைச்சர்களான வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸ் போன்றவர்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் தேவையை நிராகரித்து பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகளை வலியுறுத்தி வருகின்றனர். இது இவ்வரசாங்கத்தின் கபடத்தனத்தை கோடிட்டுக் காட்டுகின்ற சம்பவமாகும். புலிகள் பேச்சுவார்த்தை மூலமாக தீர்வைக் காண்பதற்கான கடமைப்பாட்டுடன் செயற்பட முன் வருவார்களா? இல்லையா? என்பது முறையாக பரீட்சித்துப் பார்த்து முடிவு செய்யப்பட வேண்டிய விடயம். பேச்சுவார்த்தை மூலமாக தீர்வைக் காண்பதற்கு தாங்கள் தயார் எனத் தொடர்ந்தும் பேச்சளவில் விடுதலைப் புலிகள் கூறி வருகின்றனர். இவர்களின் இந் நிலைப்பாடு மக்கள் நம்பத் தகுந்த வகையில் நடைமுறை ரீதியாக முன் வைக்கப்படுவது மிகவும் அவசியமானதாகும். நடைமுறை நிகழ்வுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது பெரும்பான்மை இனத்தவரின் ஆதிக்கத்தை நிராகரிக்கின்ற பல்லின ஜனநாயக அரசியல் கட்டமைப்பை ஏற்படுத்துவதில் இவ்வரசு தயாராக இல்லை என்பதுவும், புலிகளின் பலத்தை அழித்து விட்டால் பெரும்பான்மை இனத்தினர் இணங்கும் ஒரு தீர்வை தமிழ் மக்கள் மீது திணித்து விடலாம் என்ற நிலைப்பாட்டுடனும் அரசு செயற்பட்டு வருவது தெளிவாகத் தெரிகின்றது. இந் நிலைப்பாடானது யுத்தம் இன்னும் பல வருடங்களுக்கு நீடிப்பதற்கும் பாரிய பேரழிவுகளை ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இன முரண்பாடு அரசியல் அடிப்படையைக் கொண்டது என்பதுவும் அது அரசியல் ரீதியாக தீர்க்கப்பட வேண்டும் என்பதுவும் யாவரும் அறிந்த உண்மையே.

இந்த அரசியல் தீர்வை அடைவதற்கு சிறந்த அடிப்படையையும் இணக்கப்பாட்டையும் வட அயர்லாந்திற்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் குழு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. எனவே யுத்த மாயையில் மூழ்கி இருக்கும் இவ்வரசின் போக்கை மாற்றி அரசியல் தீர்விற்கான நடைமுறைகளில் அரசை இறங்க வைப்பதற்குத் தேவையான ஆக்க பூர்வமான வழிகளில் இவர்கள் இறங்க வேண்டும். இவர்கள் பெற்றுக் கொண்ட புரிந்துணர்வானது நடைமுறையில் இலங்கையின் முரண்பாட்டை தீர்ப்பதற்காக பயன்படுத்துவதன் மூலம் இப் பயணத்தின் நாட்டின் நன்மை கருதி பயனுள்ள முறையில் பயன்படுத்த முன் வர வேண்டும்.

## யாழ்ப்பாணம்: ஆசிரியர் எங்கே?

### ஜனாதிபதிக்கு பகிரங்க கடிதம்!


கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கு,

ஐம்பத்தேழு வயதான நாகமுத்து செல்வரட்ணம் (43, பொன்னம்பலம் வீதி, அரியாலை) என்ற பெயருடைய எனது கணவர் (யாழ் மாவட்ட திணைக்கள இணைக்கப்பட்ட ஆசிரியர்) கடந்த 14.06.1996 அன்று காலை எட்டு மணியளவில் வேலைக்கு புறப்பட்டார். எனினும் அவர் அலுவலகத்திற்கு சென்றடையவுமில்லை. வீட்டிற்கும் வந்தடையவுமில்லை. எனவே நான் அவரை தேடும் முயற்சியில் ஈடுபட்டேன். எனது கணவரை புன்கன்குளம் தடை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் அழைத்துச் சென்றதாக சொன்னார்கள். இதனை அங்கிருந்த பலரும் கண்டிருக்கின்றனர். அவரது சைக்கிளையும் கூடவே எடுத்துச் சென்றுள்ளனர். யாழ் நகர் பாதையில், எம் வீட்டிலிருந்து . 2 கீ.மீற்றருக்கு அப்பால் தடைமுகாம் உள்ளது. நான் அங்கு சென்று எனது கணவரைப்பற்றி விசாரித்தேன். அவர்கள் அவ்வாறு தாங்கள் கைது செய்யவில்லை என்று மறுப்புத்தெரிவித்தனர். இது தொடர்பாக நான் கல்விப்பணிப்பாளரிடமும், யாழ் அரச அதிபரிடமும், யாழ் பொலிஸாரிடமும் முறைப்பாடு தெரிவித்தேன். பணிப்பாளரும், அரச அதிபரும் இது தொடர்பாக பொலிஸாரை அணுகியுள்ளனர். எனினும், இதுவரை எதுவிதமான சாதகமானபதிலையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பது எனக்கு ஏமாற்றத்தையே தருகிறது.

யாழ் நகரை இராணுவம் கைப்பற்றியவுடன் அகதிகளாய் அலைந்து கொண்டிருந்த எமக்கு அமைதி, பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை தோன்றியது. எனினும், எனது கணவர் காணமல் போனவுடன் அந்த நம்பிக்கை பொய்த்து விட்டது. எமது பிரதேசம் முற்றுமுழுதாக இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருக்கிற பிரதேசம் அங்கேயே ''விடுவிக்கப்பட்ட'' பிரதேசம் என்று சொல்லப்படுகிற பிரதேசத்திலேயே மனிதர்களின் வயதுகள் கூட மதிக்கப்படாது இவ்வாறான செயல்கள் இடம்பெறுவது எமக்கு அவநம்பிக்கை தருகிறது. இவ்வாறான செயல்கள் எனக்கு நடுக்கத்தை மட்டுமல்ல குழப்பத்தையும் தருகிறது. ஏனென்றால் நீங்கள் வாக்குறுதியளித்திருக்கிறீர்கள். ''நாம் யாழ் மக்களுக்கு வளமான வாழ்வையும், அமைதியையும் வழங்குவோம் என்று''.

எமக்கு விடுதலை பெற்றுத்தந்தவர்கள் எமக்கு பாதுகாப்பளிப்பவர்கள் என்று கூறப்பட்ட இராணுவத்திடமே என்கணவரையிழந்து தனிமைத்துயருற்றிருக்கிறேன். இச்சம்பவம் என்னை உள, உடல் ரீதியாக பலவீனப்படுத்தியுள்ளது.

என் கணவர் 25 வருடங்களாக அரச சேவையில் ஈடுபட்டிருப்பவர். அவர் ஒரு போதும் அரச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதில்லை.



நீங்கள் இரக்க சிந்தனையுள்ள மனம் படைத்த ஒருவர். அமைதி, சமதானம், பாதுகாப்பை உங்கள் தேர்தல் வாக்குறுதிகளாக எமக்குத் தந்திருக்கிறீர்கள். எமது மனநிலைகளை மன உளைச்சல்களை நீங்கள் நன்கு அறியக்கூடியவர் என உங்கள் மீது நான் நம்பிக்கை வைத்து என் கணவரை விரைவில் விடுதலைசெய்வற்கான உடனடி முயற்சிகளில் இறங்குவீர்களென எதிர்பார்க்கிறேன்.

விடுதலைக்காக தாமதிக்கின்ற ஒவ்வொரு வினாடியும் அவரின் உயிருக்கு ஆபத்தாய் அமைந்துவிடுமோ என நான் அஞ்சுகிறேன்.

எதிர்பார்ப்புடன் நன்றி தெரிவிக்கும்
தங்கள் உண்மையுள்ள
*இராசமணி செல்வரட்ணம்.*

''திடீரென காணாமற்போகும்'' தொடரில் யாழ் கந்தர் மடத்தைச்சேர்ந்த சுந்தரம் இரவீந்திரன் (யாழ் வைத்தியசாலைச் சிற்றூழியர்) என்பவரும் 28.06.1996 அன்று அரியாலையில் வைத்துக் ''காணாமல் போயுள்ளார். தேங்காய் வாங்கச் சென்ற இடத்திற்கண்மையில் இராணுவம் கைது செய்திருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து இராணுவ முகாமில் விசாரித்தபோது அவ்வாறு கைதுசெய்யப்படவில்லையெனப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. மூன்று குழந்தைகளின் தந்தையான இவரைத் தேடும் முயற்சியில்இவரது மனைவியான சிறீரஞ்சனி இறங்கியும் இதுவரை எதுவித சாதகமான முடிவும் கிடைக்கவில்லை.

அதிர்ச்சிகளால் மன நிலைபாதிக்கப் படக்கூடிய இவர் பற்றிய தகவல்களைத் தருமாறும், அவரை விடுதலை பெற்றுத் தருமாறும் பல இடங்களுக்கு மனைவி மனுச்செய்திருக்கிறார்.

இதுதவிர கைதடியிலும் 96 ஓகஸ்ட் 9ம் திகதியன்று மூன்று இளைஞர்கள் காணாமல் போய் உள்ளனர். தவச்செல்வம் சுப்பிரமணியம் (22), கணேசசர்மா ஸ்ரீராம், பஞ்சலிங்கம்சாந்தன் ஆகியோரே காணாமல்போயுள்ளனர்.

இதற்கு முதல் ஓகஸ்ட் 7ம் திகதியும் கைதடியில் ஏறத்தாழ 70பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பற்றியும் இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை என்கிறார் மனிதஉரிமைகள் அமைப்பைச்சேர்ந்த அதிகாரி ஒருவர்.

காணாமல் போயுள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ இருநூறாக இருக்கும் எனவும், அதிலும் பெருமளவினர் பெண்கள் என்றும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. காணாமல்போன மாணவர் தொகையைக் கண்டறிய இராணுவத்தினரின் இறுக்கமான தடைகள் இடமளிக்கவில்லை என குற்றம் சாட்டும் இலங்கை தமிழர் ஆசிரியர்சங்கம் இத்தகவலை யாழ் கல்விப்பணிப்பாளரிடமும் யாழ். அரச அதிபரிடமும் அறிக்கையைக் கோரி ஊர்ஜிதம் செய்யுமாறும் அரசிடம் கேட்டிருக்கிறது.

இது இப்படியிருக்க யாழ் குடாவில் கைது செய்யப்பட்டவர் பற்றிய தகவல்களுடன் அவரது புகைப்படம் ஒன்றையும், கூடவே தலைக்கு ஒரு லட்சத்தையும் கொழும்பில் கொடுத்தால் யாழ்ப்பாணத்தில் அவரை விடுவிப்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படுமென உறுதியளித்திருக்கிறது. ஒரு குழுவினர் மிக இரகசியமாகச் செயற்பட்டு வருவதாக கசிந்து வரும் தகவலொன்று கூறுகிறது. இதன் பின்னணியில் தமிழ் இயக்கமொன்றின் உறுப்பினர்களும், படை உயர் மட்டமும் இருப்பதாகவும் அத்தகவல் தெரிவிக்கிறது.

## தமிழினவாத முயற்சியா?

யாழ்ப்பாணத்தில் வைத்து இராணுவத்தால் கைது செய்யப்பட்டு பின் பதினொரு இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட கிரிஷாந்தி தொடர்பான பூரண விசாரணை நடத்துமாறும் அதில் சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்குமாறும் கோரி கடந்த ஒக்டோபர் 30ம் திகதியன்று சுதந்திர சதுக்கத்தில் வைத்து பெண்கள் அமைப்புகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தின. இது தொடர்பான சரியான நடவடிக்கையை எடுக்கும் வரை இவ்வார்ப்பாட்டத்தை இரு நாட்களுக்கொருமுறை தொடர்ச்சியாக நடத்தப் போவதாக இவ்வமைப்புகள் தெரிவித்துள்ளன. அது போலவே நடத்தியும் வருகின்றன.

1ம் திகதியிலிருந்து இவ்வார்ப்பாட்டம் ஹைட்பார்க்கில் நடத்தப்பட்டு வருகின்றது. இது வரை யாழ்ப்பாணத்தில் ஏறத்தாழ 300 பேரளவினர் காணாமல் போயுள்ளனர் என்றும், கிரிஷாந்தியின் சம்பவமானது வெளிவந்துள்ள ஒரு செய்தி மாத்திரமே தவிர இன்று இராணுவ கட்டுப்பாட்டின் கீழுள்ள யாழ்ப்பாணத்தில் வெளியுலகுக்கு வெளிவராத பல பாலியல் வல்லுறவு சம்பவங்கள் நடந்துள்ளன என்றும் தெரிவிக்கின்றன.

இதை விட 1ம் திகதி ஆர்ப்பாட்டம் நடந்ததன் பின் இரவு ரூபவாஹினி செய்தியில் சில விஷமிகள் இராணுவத்துக்கு எதிரான பிரச்சாரமாக பிழையான செய்தியை பரப்பி வருவதாகவும் கிரிஷாந்தியின் சம்பவத்தை விடுதலைப் புலிகளே செய்துள்ளனர் என்றும் இதற்கு சாட்சிகளும் உண்டு என்றும் கூறப்பட்டது. ஏற்கெனவே உலகமே அறிந்த விடயம், இராணுவமே ஒத்துக்கொண்டுள்ள விடயம், சந்தேக நபர்களை விசாரணை செய்து வருவதாக அரசாங்க உயரதிகாரிகள் சொன்ன விடயம் இப்போது எப்படி பொய்யானது என்று தெரியவில்லை.

இச்சம்பவத்தைக் கண்டிக்கு முகமாக அண்மையில் கொழும்பு பல்கலைக்கழக சிங்கள-தமிழ் மாணவர்கள் ஒன்று கூடி ஒரு ஆர்ப்பாட்டத்தையும் ஒழுங்கு செய்திருந்தனர். அவ்வார்ப்பாட்டம் நடத்தப்பட்ட அடுத்த நாளே இனவாத தரப்பினரான ஜாதிக சிந்தனைய கோஷ்டியினர் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கு எதிராக ஒரு ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியுள்ளனர். புலிகளை பலப்படுத்தும் தமிழினவாத முயற்சியே அது என்பதே அவ்வார்ப்பாட்டத்தின் பிரதான கோஷம்.

என் எஸ்

விபவியின் அனுசரணையுடன்
**கவிதை கருத்தாடல்**

1996ல் வெளியான நான்கு
கவிதைத் தொகுதிகள் பற்றிய
கருத்தாடல்

**தரப்பட்டுள்ள அவகாசம்**
- ஜபார் -

**காலத்துயர்**
- சு.வில்வரத்தினம் -

**பனியில் மொழியெழுதி**
- சோலைக்கிளி -

**போரின் முகங்கள்**
- சி.சிவசேரம் -

*காலம்: 11-11-96 திங்கள்*
*மாலை 4.30க்கு*

**இடம்**
பெண்கள் கல்வி ஆய்வு நிலையம்
[WERC]
58, தர்மராம வீதி, கொழும்பு-06

எல்லாத் தொடர்புகட்கும் இல. 04, ஜயரத்ன வீதி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. தொலைபேசி 593615.
... இல 18/02 அலோ சாலை, கொழும்பு 03 அச்சுப்பதிவு : நவகம அச்சகம், இல 334, காலி வீதி, இரத்மலானை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்